Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குடந்தை என்.சேதுராமன்

ஆய்வுக் கட்டுரைகள்



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Kudanthai N. Sethuraman AAYVUK KATTURAIGAL
Author	:	Kudanthai N. Sethuraman
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	October, 1999
Paper Used	:	White Printing, D.Crown
	:	11.6 Kg.
Size of the book	:	18.5 x 12.5 cm
Type	:	13 Point
No. of Pages	:	272
No. of Copies Printed	:	1000
Printer	:	Page Offset Printers Chennai -5
Publisher	:	SEKAR PATHIPPAGAM Chennai -78
Price	:	**Rs. 60.**
Subject	:	Archaeological Research Articles

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குடந்தை என். சேதுராமன்
ஆய்வுக் கட்டுரைகள்
I

தொகுப்பு

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

சேகர் பதிப்பகம்
80, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078
☎ 471 43 25

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதற்பதிப்பு : அக்டோபர், 1999

விலை ரூ. 60.

ஒளியச்சு: அன்னை கணினி மையம்,
சென்னை - 33
அச்சகம்: பேஜ் ஆப்செட்,
சென்னை - 5.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

முன்னுரை - 19
பதிப்புரை - 13
ஒரு வரலாற்றின் வரலாறு - 23

1. நால்வர் காலம் ... ... - 33
2. பதினொரு திருமுறைகள் வகுத்த காலம் ... - 71
3. பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை - 93
4. செப்பேடுகளில் திருமுறைகள் ... ... - 123
5. வாளால் வழிதிறந்தான் ... ... - 127
6. இராமன் பெயரில் பாண்டியர் காசுகள் - 135
7. காயாரோஹணம் ... ... - 143
8. இலிங்கப் புராணத் தேவர் ... ... - 153
9. திருக் குடமூக்கில் மகாமகம் ... ... - 175
10. திருஅழுந்தை மாமடம் ... ... - 195
11. தில்லையில் வழிபாடு நின்றதும் மீண்டதும் - 203
12. சோழர் வரலாற்றில் ஒட்டக்கூத்தர் ... ... - 207
13. சோழர் பெருமை கூறும் 'சங்கர சோழன் உலா' - 219
14. குலோத்துங்க சோழன் கோவை ... ... - 229
15. திருஞானசம்பந்தரின் மனைவியார் சொக்கியார் - 241
16. திருவிடைவாயில் பதிகம் ... ... - 249
17. தஞ்சைத் தளிக்குளத்தார் ... ... - 257
18. திருநள்ளாறும் திருஆலவாயும் ... ... - 262

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டு மைப்பதிவுப் பிரதியிடன் சேதுராமனார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டுப் பித்தன்!

'நான் ஒரு பழமைப் பித்தன். அருமையான ஆலயங்களைக் கண்டால் ஆனந்தக் கண்ணீர் விடுவேன்: இடிந்த கோவில்களைக் கண்டால் நானும் இடிந்து போய் விடுவேன். பாழடைந்து இடிந்து கிடக்கும் ஆலயங்களுக்குச் சென்று அப் பிரகாரங்களில் சிறிதாவது படுத்துப் புரளுவதில் ஒரு ஆனந்தம்...

நான் ஒரு கல்வெட்டுப் பித்தன். கல்வெட்டுக்களைப் படிக்கும்போதெல்லாம் என்னை மறந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின் அம்மன்னர்கள் வாழ்ந்த காலத்திற்கே சென்றுவிடுவேன்...'

- குடந்தை என். சேதுராமன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



இந்தியத் தொல்லியல் துறையினர் செப்புப்பட்டயச் சிறப்புச் சான்றிதழ் கருவளைக் குடந்தை சேதுராமன் பெறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை

திரு . M.D.சம்பத் அவர்கள்

கல்வெட்டுத்துறை இயக்குநர்
இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மைசூர்-5

குடந்தை சேதுராமன் அவர்கள் இந்தியக் கல்வெட்டு அறிஞர்களில் ஒருவர். மோட்டார் தொழிலில் பொறிஇயல் வல்லுநராகப் பயிற்சி பெற்றுப் பணிபுரிந்த காலத்திலேயே கல்வெட்டு வரலாறு ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வந்தார். கல்வெட்டுத் துறைக்கு அப்பாற்பட்டு ஆராய்ச்சி மேற்கொண்ட பல்வேறு அறிஞர்களில் மிகச் சிறந்தவர்கள் டாக்டர் கீல்ஹார்ன், டாக்டர் லுட்விக் ஸ்டர்ன் வாட்ச் (Lud wick stern vach), டாக்டர் ப்லீட் (Fleet) இவர்களுடன் ஒப்பிட்டுத் திரு.சேதுராமன் அவர்களைச் சொன்னால் மிகையாகாது.

கல்வெட்டுக்களில் வரும் வானியல் குறிப்புகளை வைத்துக்கொண்டு அரசர்களின் காலத்தைத் துல்லியமாகவும், பொருத்தமாகவும் நிர்ணயிப்பதில் காலஞ் சென்ற திரு.எல்.டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளைக்கு அடுத்தபடியாக இவர் மாபெரும் நிபுணராக விளங்கினார். அநேக சிக்கல் நிறைந்த பாண்டிய மன்னர்கள் வரலாற்றை ஆராய்ந்து, இடைவெளிகளை நிரப்பி, அவ்வாராய்ச்சிக் குறிப்புகளை அரிய நூல்களின் வாயிலாக வெளியிட்ட தமிழ்த் தந்தை ஆவார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தலைசிறந்த கல்வெட்டு அறிஞர் என்னும் பட்டம் வழங்கப்பட்டு இதற்கான செப்புப் பட்டயத்தை சேதுராமன் அவர்கள் பெற்றுக் கொண்டார் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. வரலாற்றுக்குப் பல புதிய கோணங்களுடன் பல புதிய ஆராய்ச்சிக் கருத்துக்களை இவர் எடுத்துரைத்தார்.

இவர் கல்வெட்டு ஆய்வுகளைப் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்களையும் ஏராளமான கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

நம்நாட்டில் தமிழ் ப்ராம்மி எழுத்துக்களுக்குத் திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர் எவ்வாறு தந்தையாவாரோ, அதே போன்று வானியலைப் பயன்படுத்தித் தமிழ்க் கல்வெட்டுக்களுக்குக் காலம் கணித்த மேதகு தந்தையாவார் இவர். கல்வெட்டு ஆராய்ச்சிக்குப் புத்துணர்ச்சியும் ஊக்கமும் கொடுத்து, நமது இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரும்பாடுபட்டார்.

கல்வெட்டுகளில் புதைந்து கிடந்த அரும் பெரும் உண்மைகளை எடுத்து உரைத்தவர் திரு என். சேதுராமன்.

பல்வேறு பல்கலைக் கழகங்களும், அறிஞர்களும், இந்தியக் கல்வெட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்திய பல்வேறு கருத்தரங்குகளில் இவர் பங்கு பெற்றார். அங்கெல்லாம் இவரது ஆய்வுப் பணிகளும் பெருமையும் போற்றப்பெற்றன.

இவ்வாறு கல்வெட்டுத் துறையில் கொடிகட்டிப் பறந்து, புகழும், சிறப்பும், பெருமையும் பெற்ற இவருடைய மறைவு இந்திய வரலாற்று ஆய்வுக்கு ஈடு செய்ய முடியாத் இழப்பாகும்.

இவர் ராமன் & ராமன் நிறுவனத்தின் இயக்குநராக் மட்டுமன்றி இந்தியக் கல்வெட்டுக் கழகத்தின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பணிபுரிந்த மேதையும் ஆவார்.

இவரது இந்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்புநூல், பல்வேறு இந்திய, அயல்நாட்டு அறிஞர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தொல்லியல், கல்வெட்டுத்துறை சார்ந்த பலநூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருபவர் திரு வெள்ளையாம்பட்டு சுந்தரம். திரு.சேதுராமனின் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளைக் கல்வியுலக ஆசிரியர்-மாணவர்க்குப் பயன்படும் வண்ணம் நூலாக்கி வெளியிடும் சேகர் பதிப்பகம் பாராட்டுக்கு உரியது. இந்த நன் முயற்சியால் வரலாற்றுப் பயன் வளரும் என்று நம்புகிறேன்.

மைசூர் - 5

அன்பன்

*M.D.*சம்பத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதிப்புரை

வரலாற்று விளக்கம்

இந்தியக் கல்வெட்டுத்துறை, ஆங்கில அதிகாரிகள் அமைத்துத் தந்த நன்கொடையாகும். நம்மை நாமறிய வைத்த நல்வழியாகும்.

கல்லெழுத்துகளை மந்திர மாயங்கள் என்று மன மயக்கத்தில் கிடந்துழன்ற நம்மவர், ஆய்வுக் கண்கொண்டு பாராமல் அயர்ந்திருந்தனர்.

தத்துவம் பேசிச் சடங்குகள் செய்து தம்மை மேலுலகத்திற்குத் தயார்படுத்திக் கொள்வதே வாழ்க்கை என்றும், அதுவே கடமை என்றும் கருதிச் செயலற்றுப் போன இந்தியரிடையே, அடிமை கொண்ட அந்நியர் தமது அறிவாராய்ச்சி வழியில், வந்த இடத்தின் வரலாற்றுத் தடத்தைக் காண விழைந்தார்கள்.

பழமையின் வேர்களையும் அதன் பண்புகளையும் பார்த்தறிந்த வெளிநாட்டினர் உண்மை வரலாற்றை ஊக்கமுடன் கண்டறிய முனைந்தனர்.

உற்று நோக்குதலும் உண்மையறிதலும் ஊக்கமுடை யோரின் பண்புகளாகும்.

வாழ்வதற்கான வசதி வாய்ப்புகளைத் தேடும் மனிதமுயற்சி நம்நாட்டில் சரியாக முனைப்புக் கொள்ள

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாய்ப்பில்லாமல் போனது நமது மானிடவியலின் மறையாத களங்கமாகும்.

மானிட நேயம் என்பது என்ன? பிறரை மதிப்பதும் உதவுவதும் என்பவை மட்டுந்தானா?

நமக்கும் நம்மைச் சார்ந்தோர்க்கும் அன்றாட வாழ்வில் அவசியத் தேவைகள் எவை, அவற்றை எவ்வாறு தேடுவது? முன்னேற வழிகள் யாவை? உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை...இவை மட்டும் போதுமா? நோய்தீர மருந்து வேண்டாமா? இருட்டுக்கு வெளிச்சம் வேண்டாமா? இது ஏன், எப்படி, வழி என்ன, முறை என்ன என்பன போன்று துருவிப் பார்க்கும் தூரப் பார்வைச் சிந்தனைப் பொறிகள், வாழவேண்டும் எனும் மனித உள்ளங்களில் கிளர்ச்சியை உருவாக்கின.

வாழும் உலகே மாயம்; அநித்திய வாழ்வுவிட்டு நித்ய வாழ்வாகிய மேலுலக, தேவலோகக் கடவுள் நிலையே உண்மை! அதுவே குறிக்கோள் என்று கருதிய மண்ணில், புதுமை நோக்கும் புதுப்புது ஆக்கமும் வேர்விட முடியுமா?

எதைச் செய்தால் சொர்க்கம் எனும் பெரும்பதவி பெறலாம் - என்னும் எண்ணம் மேலோங்கிய நிலத்தில், வாழ்க்கை முன்னேற்றத்திற்கான ஆய்வும் கண்டுபிடிப்பு முயற்சிகளும் தோன்ற வழியின்றிப் போயிற்று.

'எல்லாம் அவன் செயல்; நம்மாலாவது ஒன்றுமில்லை!' என்று அண்ணாந்து வானத்தை நோக்கியவாறு நம்மவர் அமைதி நிலையில் இருந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருள்களை வாங்கிச் சென்று விற்றுப் பிழைக்கக் கடல்கடந்து வந்த வெளிநாட்டார், இந்திய மண்ணில் இருந்த பிளவுகளையும், பிற்போக்கினையும், சீரழிவுகளையும், மக்களின் மடமையையும் விரைவில் கண்டறிந்தனர்.பொருள் கொள்ள வந்த வணிகர் நாட்டையே பறித்துக் கொண்டனர்.

தாள் பிடித்தும், ஆள் பிடித்தும், வாள்பிடித்தும் பரந்து விரிந்த நாட்டையே தாம் பிடித்துக் கொண்டனர் அந்நியர்.

நமது வேதங்களும் சமய சாத்திரங்களும், கோயில் கடவுள்களும், மந்திர, பூசைச் சடங்குகளும் வேற்று நாட்டாரின் பிடியில் சிக்காமல் தப்பிக்க, இம் மக்களைக் காக்க ஒன்றும் செய்யவில்லை. கோயில்கள் கொள்ளை போயின; செல்வங்கள் சூறையாடப்பட்டன. கத்திமுனையில் உயிரா, மதமா எனும் போராட்டம்!

யாகங்களும் பூசைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அந்நியத் துருக்கரின் அதிரடியில் இந்திய மக்கள் 'அல்லா!' என்று அலறியவாறு மொட்டையடித்து, தொப்பியணிந்து, அரபுமொழியை அவசரமாகப் பயின்று, எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்று (ஒருசிலர்) ஒதுங்கிப் போயினர்.

உயர்ந்த கோயில்கள் உருக்குலைந்தன. பாடல்பெற்ற பரமன் தலங்களில் இருந்த செல்வமும் பறி போயின; கடவுள் சிலைகளும் பறி போயின.

அப்பாவி மக்களைப் போலவே ஆண்டவர் சிலைகளும் அடியுண்டன, அழிவுற்றன.

முகமதியர் ஆண்ட இந்திய மண்ணில் வெள்ளையரும் வந்து, அவர்களையும் புறங்கண்டு, இந்தியச் சிற்றரசர்களையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புறங்கண்டு, எதிர்ப்பே இல்லாமல் செய்து இங்கிலாந்தின் ஆட்சியைக் கொண்டு வந்தனர்.

வணிகக் குழுவினரின் வல்லாண்மை கட்டுக்கடங்காத காட்டு நெருப்பாய் இந்திய மக்களைச் சுற்றிச் சூழ்ந்தது.

நான்கு வேதங்களைக் கொண்ட இந்தியப் பெருநிலப் பரப்பை மூன்று சின்னஞ்சிறு தீவுகளைக் கொண்ட பிரிட்டனின் அரசு முற்றாகப் பற்றி மேலாண்மை கொண்டது. ஆறாயிரம் மைல் தொலைவிருந்தவாறு தமது படைபலத்தாலும் அறிவுத் திறத்தாலும், மாபெரும் நாட்டை ஆள்கிறோம் என்று சொல்லி அகப்பட்டதை எல்லாம் அடித்துச் செல்லலாயினர்.

மேலாண்மைக்காக வந்த மேஸ்திரிகளில் அறியும் ஊக்கம் கொண்ட ஆர்வமுடையோரும் சிலர் இருந்தார்கள். அவர்கள் பார்த்து வியந்த நிலையில், பதிவு செய்த பல வழிகளில்-பழமையான பொருள்கள், கட்டடங்கள், கோயில்கள் இடம் பெற்றன.

'இவற்றின் பழமையென்ன, வழி என்ன, பார்த்தறிய வேண்டும்' என்னும் ஆய்வுநிலை துளிர்த்தது. அதற்கென ஒரு துறையும் வழிமுறைகளும் ஏற்பட்டன. இந்தியத் தொல்லியல் துறை உருவாகியது. அழிந்ததையும் அழியாமலிருப்பதையும், பாதுகாப்பதும் அவற்றின் தோற்றம் முதலியவற்றை ஆய்ந்து தொகுப்பதும் கடமை என வரையறுக்கப்பட்டன.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் எழுபதாண்டுப் பணிகள் பலப்பல பழமைச் செய்திகளை வெளிப்படுத்தின.

தமிழகத்துக் கோயில்களில், கோட்டைகளில் சில அத்துறையால் புத்துயிர் பெறலாயின.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவர்களும் கடவுளர்களும் 'சும்மாய் இருப்பதே சுகம்' என்று இருந்த நிலையில், ஆராய்ந்து காணும் அயலாரின் ஊக்கமும் முயற்சியும் பழங்கதைகளின் வேர்களைக் கண்டு தெரிவிக்கும் நிலை தோன்றியது.

தன்னலமற்ற சான்றோரான கம்பன் அடிப்பொடி ச. கணேசன் அவர்களின் அரிய முயற்சியால் தனியாய் ஆய்வுத் துறை ஒன்று உருவாயிற்று.

தமிழ்நாட்டரசு திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராயிருந்தபோது, இதற்கெனத் தனியொரு துறையைத் தொடங்கிவைத்தது. கல்வெட்டுகளும் பழம் பொருள்களும் தேடும் பணி தீவிரமானது. தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் முதல் இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமியின் அயராப் பணிகள் பெரும் பயன் தந்தன.

எங்கும் கண்டு பிடிப்புகள் என்பதே பேச்சு! எல்லோரும் தொல்லியல், கல்வெட்டுகள் என்று பேசலாயினர். பத்திரிகை களும் நல்ல பங்குகொண்டு மக்களிடம் பரப்பின.

வரலாற்றுத் துளிகள் திரட்டும் திருப்பணி ஊர்கள்தோறும் பரவலாயின. கண்டுபிடிப்போரும் அதுபற்றி எழுதுவோரும் பெருகினர். அதை நூலாகப் பதிப்பித்து வெளியிடும் பதிப்பாளரும் உருவாயினர்.

காலச் சூழல் நன்கு கனிந்தது.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வத்துறை ஆய்வாளர் பலரை உருவாக்கியது. தேடிக் கண்டு திறமாக ஆராயும் திருக்கூட்டத்தில் குடந்தை என். சேதுராமன் அவர்களும் ஒரு திருத்தொண்டர் ஆனார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோழப் பேரரசர்களின் வாழ்விடமும் திருக்கோயில்கள் நிறைந்த எழில் நகரமும் ஆன திருக்குடந்தை வரலாற்றில் என்றும் வாழும் ஏற்றம் பெற்றதன்றோ!

குடந்தையில் தோன்றிய குளிர்மனச் செம்மல், குணக் குன்றாயும் பணக் குன்றாயும் இருந்ததோடு, தொல்லியலில் தோய்ந்து, ஆய்ந்து பார்க்கும் மனக் குன்றாகவும் செயல்படத் தொடங்கினார்.

புத்துணர்ச்சி, புதிய ஆர்வம், புதிய வேகம், புயல் வேகம்! புயல்போல் சுற்றிச் சுழன்று தேடி ஓடினார். திரட்டினார். ஒப்பு நோக்கினார்; உரசிப் பார்த்தார்; ஓட்டை உடைசல், சந்து பொந்துகள், பீழைப் பிசுறுகள் என்பவற்றையெல்லாம் உற்று நோக்கினார். உணர்ந்து நோக்கினார். முன்னோர் கண்டதன் முறையும் கண்டார். முனைந்து முனைந்து புதுமையும் கண்டார்.

பண்பும் பக்தியும் பக்குவப்பட்டன. பார்வையில் தெளிவு பாங்குற நேர்ந்தது.

காலக்கணக்கில் ஆற்றல் மிக்கவர். எனவே இவரும் கால கண்டரே! (காலண்டர்).

பிறர் கண்டறியாதன கண்டார்.

பிறர் விண்டறியாதன விண்டார்.

ஊக்கம், உழைப்பு, அயரா முயற்சி! ஆக்கம் பலப்பல; அரும் பெரும் உண்மைகள்! முகிலைக் கிழித்த முழுமதியென முன்னே தோன்றிப் புத்தொளி காட்டினார்.

இருபதாண்டுகள் இடையறா ஆய்வு! எத்தனை உழைப்பு! எத்தனை பொருள் இழப்பு!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உழைக்க உழைக்க ஊக்கங்கொண்டார். உண்மைகள் காண ஆர்வங் கொண்டார். நல்லார் உறவும், அறிவில் வல்லார் உறவும் எல்லா நிலையிலும் துணையாய்க் கொண்டார்; துணிவாய் உழைத்தார்! துயரம் மறந்தார்! உடல் நலம் இழந்தார். உறுதியில் நிறைந்தார்! எல்லா வளமும் இயற்கையில் அடைந்தவர்; நில்லா வாழ்க்கையில் நிலைத்து நின்றவர். சொல்லால் எழுத்தால் சுவையாய்த் தந்தவர். இல்லா நிலையிலும், 'எழுத்தாய், புகழாய், என்றும் வாழ்வேன் இதயந்தோறும்' என்பார், இங்கே இந்நூல் தொகுப்பில் உள்ளார்! எடுத்துப் பார்ப்பீர்! உண்மை விளங்கும்.

பார்க்குந்தோறும் பாராட்டும் பண்புளம் கொண்டவர். 'நீரே தொண்டர்; நிச்சயம்!' என்பார். 'பள்ளிகளெங்கும் பரப்பும் தொண்டர்; படிப்பகங்களிலே கொடுக்கும் தொண்டர்; என் கட்டுரைகளையும் என் நூல்களையும் உம் வெளியீடுகளாய் உலாவரச் செய்வீர். உள்ளம் உவந்து உடன் தருவேன்' என உரைத்தார் பலமுறை. காலம் வளர்ந்தது. பார்ப்போம், பழகுவோம், பாசமாய்ப் பிரிவோம். ஒருநாள் புலவர் வேங்கடேசனுடன் திருவாளர் வீட்டில் தேடிக் கண்டேன். சிரிப்பும் பேச்சும் சிந்தனைவீச்சும் சேர்த்தே தந்தார்; 'கட்டுரைத் திரட்டை நாளை தருவேன்; மாலை வருக!' என்றார்; சென்றோம். தந்தார்; வந்தோம்.

அச்சில் பதித்தேன்; அங்கே வருவதாய் அன்புடன் சொன்னவர் வராமையாலே அஞ்சல் வழியே அனுப்பி வைத்தேன்.

கடைசி இரவில் கண்டு வைத்தவர் கனத்த இதயம் இந்த நூலவரு!

கட்டுரை யாவும் வெற்றுரை யன்று, புத்துரை! சத்துரை! ஒளிதரும் முத்துரை!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடநூல் குழுவின் பார்வைக்கு இந்நூல் பயன்படும்! பயன்வளர்ப்பார்கள்! பாடநூல்களில் பதிப்பார் மதித்தே. புதிய வெளிச்சம் புத்தியை வளர்க்கும்; புதுமை தேடும் வழியில் செலுத்தும்! சேதுராமனார் சோதிரா்மனார், சேதியாவையும் தெளிந்துரைத்தவர்; வரலாற்றோடு வரலாறாகி வாழ்வார் என்றும்!

நூலுருவர்க்க நுண்மதி படைத்த திருமதி லலிதா அம்மையார் ஒருமனப்பட்டார். அன்பும் அருளும் அறிவும் பண்பும் அமைந்த அம்மையார் அநுமதி தந்தார். ஆதரவற்றோர் அல்லல்படுவோர் இல்லறங் காணும் இணையும் வாய்ப்பை இல்லாதோர்க்குத் திருமணம் புரிந்து இன்னலுற்றோர்க்கு இதந்தரும் உதவிகள் பல்லாண்டுகளாய்ப் பரிவுடன் நல்கி, எல்லா மக்களும் இனிதுடன் வாழ நல்லாதரவை நல்கிப் புகழுடன் வாழும் லலிதா அம்மையார் ஏழையர்க்குதவும் கண்கண்ட தெய்வம்! கருணைத் தெய்வம்!

'வரலாற்றுண்மைகள் வளமாய்க் கண்டு வரன்முறை யோடு வழங்கிய வள்ளலின் வாழ்க்கைத் துணைவியார், மக்கள் நால்வரும் வரலாற்றோடும் வான்புகழோடும் வாழ்க, வளர்க நலமெலாம் பெற்றே!' என்றே என்றன் நன்றியைப் பணிவாய் அன்பால் வைத்தேன், அவர்கள் முன்னர்!

கல்வெட்டாய்வில் கண்டெடுத்தளித்த வரலாற்றுண்மைகள் திரட்டமாய் உள்ளன. பொதுவாய்ப் பிரித்து இருபாகங்கள், எனவே தந்தோம் ஏற்பீர் இசைந்தே!

ஆய்வுக் கட்டுரை முப்பத் தெட்டும் அனைவர்க்கும் புது வழியைப் புகட்டும்! முன்னவர் புகழுடன் முனைந்தே செல்வோம். நன்னெறி ஆய்வை நாளும் வளர்ப்போம்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாளர் எம்.டி. சம்பத் அவர்கள் தமிழ்நாடு தொல்பொருள் துறை, புதுவையிலுள்ள பிரெஞ்சிந்தியக் கலைக்கழகம், மைசூர் பல்கலைக்கழகம் முதலியவற்றில் பணியாற்றியவர்.

பின்னர் இந்தியத் தொல்லியல் துறையில் 23 ஆண்டுகளாகக் கல்வெட்டுத் துறை ஆய்வாளராகப் பணியாற்றி இப்பொழுது அத்துறையின் அனைத்திந்தியாவுக்கும் இயக்குநராகச் (மைசூரில்) சிறப்புறப் பணியாற்றி வருகிறார். கல்வெட்டுச் சான்றுகளைத் தேடித்திரட்டுவதிலும் திறமாக ஆய்ந்து அறிவதிலும் ஊக்கமும் உழைப்பும் உடைய இவரால் வரலாற்றுத்துறை பெரும்பயன் கண்டுள்ளது.

நான் கேட்டுக் கொண்டதற்கிணங்கக் கல்வெட்டுப் படங்களும் சேதுராமனாரது நூல்களில் முகப்புப் படங்களையும் படி எடுத்து உதவினார்; இப் பேருதவியை மறக்க முடியாது.

இப்பெருமகனார் குடந்தை சேதுராமனின் நெருங்கிய நண்பராவார். சேதுராமனாரின் உழைப்பையும் ஊக்கத்தையும் நேர்பட நன்கு கண்டு அறிந்தவர். ஆதலின் இக் கட்டுரைகளை முன்னரே பார்த்தவர். எனவே தான் அவரிடம் முன்னுரை தருமாறு கேட்டுக் கொண்டேன். பல்வேறு பணிப்பொறுப்பு களுக்கிடையே அன்புடன் நேரம் ஒதுக்கிச் சென்னை வருகையில் முன்னுரை வழங்கி உதவினார்கள். இப்பெருந்தகையாளர்க்கு என் அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு வரலாற்றின் வரலாறு!

கல்வெட்டு அறிஞர்
குடந்தை என். சேதுராமன்
(1930 - 1999)

கலியுக வருஷம் 5031, சக வருஷம் 1852, பிரமோதூத ஐப்பசி மாதம் 18ஆம் தேதி சுக்ல பட்சத்து துவாதசியும், உத்திராட்டதியும் பெற்ற திங்கள் கிழமை, அதாவது கி.பி.1930நவம்பர் மாதம் 3ஆம் தேதியன்று தோன்றிய்வர் சேதுராமனார்.

இவர் கும்பகோணம் ராமன் அண்டு ராமன் நிறுவன உரிமையாளர் திரு பி. எஸ். நாராயண அய்யர் அவர்களின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். பின்பு அந்நிறுவனத்தின் இயக்குநரானார்.

இளமையில் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பி.எஸ்ஸி., இரசாயனப் பட்டப் படிப்பை முடித்த இவர் சென்னையில் The Madras Institute of Technologyஇல் மோட்டார் வாகனப் பொறியியலில்(Automobile Engineering) பட்டம் பெற்றார். தந்தையின் விருப்பப்படி பேருந்துகள் இயக்குந்(Bus Transport)தொழிலில் ஈடுபட்டார். பல தொழிற்சாலைகளில் டீசல் எஞ்சின் சம்பந்தமான சிறப்புப் பயிற்சிகள் பெறுவதற்காக 1962இல் இங்கிலாந்து சென்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1968இல் தந்தை காலமான பிறகு, பேருந்துகள் தேசிய மயமாக்கப்பட்டதால் புதிய டிராக்டர்கள், கார்கள் வாங்கி விற்கும் தொழிலில் இவர் ஈடுபட்டார்.

சிறந்த மனிதாரன சேதுராமனாருக்கு 1956ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. வழிவழியாக சமஸ்கிருதப் புலமை நிறைந்த குடும்பத்தில் பிறந்த ***லலிதா*** என்னும் அருங்குணவதியை மணந்தார். திரு.சேதுராமன் கல்வெட்டுத் துறையிலும், மனைவி லலிதா அம்மையார் சமூக சேவையிலும் ஈடுபட்டு, அவரவர் கடமைகளில் வெற்றிகர்மாக 23ஆண்டுகள் தங்கள் தொரண்டுகளை, பணிகளைத் தொடர்ந்தனர்.

திருமதி லலிதா அருள்நெஞ்சங் கொண்டவர். ஏழை எளியோர்பால் இரக்கங்காட்டும் இயல்பினர். இல்லாமையால் வாடுவோர்க்குக் காலமறிந்து தேவையான உதவி செய்து கைதூக்கி விடும் கருணையுள்ளம் கொண்டவர். மக்கள் தொண்டில் மனமகிழ்ச்சி கொள்ளும் மாதர்குலத் திலகமாக, சமூகத் தொண்டாற்றி வருகிறார்.

சேதுராமன் தம்பதிகளுக்கு ஒரு மகனும் மூன்று மகள்களும் உள்ளனர். இவர்கள் நால்வரும் அமெரிக்காவில் படித்துப் பட்டம் பெற்று அங்கேயே பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

திருமதி லலிதா சேதுராமன் அவர்கள் 1976ஆம் ஆண்டில் ***ஈவ்ஸ் கிளப்*** என்னும் மகளிர் சங்கத்தின் தலைவியாக இருந்துகொண்டு ஆற்றிய சமூகப் பணிகள் எண்ணிறந்தவை. வசதியற்ற சுமார் 400க்கும் மேற்பட்ட பெண்களுக்கு இல்வசத் திருமணம் இவர் நடத்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைத்துள்ளார். சமூகத்தில் பாதிப்புக்கு உள்ளான பெண்களின் முன்னேற்றம்,கல்வி, சட்டவிழிப்புணர்வு, மாணவ மாணவியரின் கல்விக்குத் தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரி வரை உதவுதல், ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கு வ்ழி செய்தல், முதியோர் பராமரிப்பு போன்ற எண்ணிறந்த தொண்டுகளை இதயமார்ந்த பரிவுடன் செய்து வருகிறார்

திரும்தி லலிதா சேதுராமனின் போற்றத்தக்க சமூகப் பணிகளைப் பாராட்டி, சென்னை டைரக்டர் சுப்பிரமணியம் டிரஸ்ட், சமூகத் தொண்டாற்றும் சிறந்த பெண்மணி என்னும் வகையில் *ஸ்த்ரீ ரத்னா* எனும் விருது வழங்கிச் சிறப்பித்தது.

1975இல் சேதுராமனார் வாழ்க்கையில் மாபெரும் மாறுதல் ஏற்பட்டது. கல்வெட்டு ஆராய்ச்சியில் இவர் தீவிரமாக ஈடுபடலானார். இதனால் வான சாஸ்திரத்தை முழுதும் கற்றுக்கொண்டார். நூறு ஆண்டுகளாக வெளி வந்துள்ள மத்திய அரசின் கல்வெட்டுச் சாசன அறிக்கைகள், ஆய்வுத் தொடர்பான நூல்க்ள் பலவற்றைச் சங்கிலித் தொடர்போல் படிக்கலானார். பல இலக்கியங்களிலிருந்தும் வரலாற்றுக்குத் தேவையான குறிப்புகளைத் திரட்டினார். இதனால் சோழர்கள், பாண்டியர்கள் பற்றிய வரலாற்று நூல்களும் கட்டுரைகளும் இவரால் வெளியிட முடிந்தது. சொந்தத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டே கல்வெட்டு ஆராய்ச்சியிலும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் அயராது பாடுபட்டார்.

சரித்திர நூல்களைப் புரட்டிப் பார்த்த சேதுராமனாருக்கு ஒவ்வொரு நூலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருந்தது புலப்பட்டது. இது வியப்பையும் விறுவிறுப்பையும் தந்தது. இதன் அடிப்படைக் காரணம் என்ன என்னும் கேள்வியைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொடர்ந்த சேதுராமன், கால ஆராய்ச்சியில் ஏதோ ஒன்று நிறைவு பெறாது இருப்பதைக் கண்டார்.

இதற்குமுன் ஆய்வு செய்த ஜெர்மன் பேராசிரியர் கீல் ஹார்ன் (1907), சாமிக்கண்ணுப்பிள்ளை (1913), ராபர்ட் சீவல் (1915) இவர்களின் கணிப்புகளை ஆராய்ந்தார். கல்வெட்டின் காலங்கள் சரியாகக் கொடுக்கப்பட்டிருப்பினும் பெயர் குழப்பத்தினால் சிலவற்றின் காலங்களை நிர்ணயிப்பதில் இவர்களுக்குத் தடங்கல் ஏற்பட்டன. அரசன் இவனோ? அல்லது அவனோ? என்னும் சந்தேகத்தின் அடிப்படையில் காலங்களைக் கொடுத்திருந்தனர். அரசனின் ஆட்சி ஆண்டில் 365 நாட்கள் இருப்பதாக இவர்கள் கருதினர். ஆனால் அக்காலத்து மன்னர்கள் இம்முறையைப் பின்பற்றவில்லை என்பது சேதுராமனாருக்குத் தெரிந்தது.

மன்னனின் ஆட்சி ஆண்டு நட்சத்திரத்தை அடிப் படையாகக் கொண்டிருக்கும். ஓர் ஆட்சி ஆண்டில் நாட்கள் 354லிருந்து 384வரை இருக்கும். இதைத்தான் 'யாண்டு' என்று கூறுவார்கள். யாண்டின் அளவைத் தெரிந்து கொண்டால் ஒரே பெயரில் சம காலத்திலோ அல்லது வேறு வேறு காலத்திலோ இருந்த அரசர்களை அறிந்துகொள்ள முடியும் என்றார் திரு. சேதுராமன்.

தமிழ், வடமொழி, கர்நாடக, தெலுங்கு மொழிக் கல்வெட்டுகள், இலக்கியங்கள், ஹிஜ்ரா என்னும் காலண்டர் முறை,மேலும் நூறு ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சாசன அறிக்கைகள் - இவற்றின் துணை கொண்டு இவர் பாண்டியர் வரலாற்றை ஆராயத் தொடங்கினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜெர்மன் பேராசிரியர் கீல் ஹார்ன், ஜகோபி, ராபர்ட் சீவல், சாமிக்கண்ணுப்பிள்ளை முதலான அறிஞர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கல்வெட்டின் துணைகொண்டு பாண்டியர் வரலாறு பற்றிய அடிப்படை ஆராய்ச்சியைச் செய்தார் இவர். இதன் பயனாக 1978இல் The Imperial Pandias, Medieval Pandias என்னும் நூல்களை வெளியிட்டார்.

பாண்டிய மன்னர்களின் காலங்களைக் கணிக்க உதவிடும்The Pandian Chronology எனும் கட்டுரையை எழுதினார். இவரது ஆய்வுக் கட்டுரைகள்Journal of Epigraphical Society of India-வில் வெளிவந்தன. Chola Pandyan, Chola Gangan,Chola Langeswaran,Chola Keralan எனும் இவரது ஆங்கில வெளியீடுகளை Place Names Society of India வினர் 1987இல் வெளியிட்டனர்.

கல்வெட்டுகளும் இலக்கியங்களும் இணையும் பரப்பில் புதிய ஆய்வுகளைக் கண்டுபிடித்த சேதுராமன், சங்கரசோழன் உலா, குலோத்துங்க சோழன் கோவை பற்றிய வரலாற்று நூல்களைத் தமிழில் 1989இல் வெளியிட்டார்.

சேதுராமன் அவர்களின் கல்வெட்டுப் பணிகளைப் பாராட்டிய Epigraphical Society of India,1998ஆம் ஆண்டு மே மாதம் கேரளாவில் திருச்சூரில் நடைபெற்ற 24ஆவது ஆண்டு விழாவில் 1997ஆம் ஆண்டிற்கான *சிறந்த கல்வெட்டு அறிஞர்* எனும் பட்டத்தை வழங்கி, சமஸ்கிருதப் பாராட்டுரை அடங்கிய செப்புப் பட்டயத்தையும் அளித்துச் சிறப்பித்தது.

திரு. சேதுராமன் இயற்கையை மெய்மறந்து ரசிப்பவர். பறவைகள், மிருகங்கள் மற்றும் பசுமையான செடிகள் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இயற்கையின் ஒவ்வொரு படைப்பையும் கண்டு மெய்மறந்து ரசிப்பவர். இளம் பருவத்திலேயே தமிழில் பேரார்வமும், நினைவாற்றலும் கொண்டிருந்தார். இவர் கல்வெட்டு ஆய்வு செய்துகொண்டே பண்டைய மன்னர்களின் பெருமைகளையும், தர்மங்களையும் உலகிற்கு எடுத்துரைத்தார்.

சிறந்த சமூக சேவகியைத் தம் அன்பு மனைவியாக அடைந்து மகிழ்ந்தவர், அமெரிக்காவில் பணியாற்றும் தம் அன்புக் குழந்தைகளுடன் மனநிறைவோடு வாழ்ந்து கொண்டே தமது ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்திட்டார். அந்தச் சேதுராமன் எனும் அற்புதமான கல்வெட்டுப் பூவினைப் பறித்து இறைவன் தனக்கென்று சூட்டிக் கொள்ள விழைந்தனன் போலும்!

பழகுதற்குரிய பண்பாளரும் சிறந்த ஆய்வாளருமான குடந்தை என்.சேதுராமன் அவர்கள் 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம்நாள் வெள்ளிக்கிழமை காலையில் குடந்தையில் காலமானார். இது தொல்லியல் துறையில் மறக்க முடியாத வரலாறாகப் பதிவாயிற்று. வரலாற்றில் புத்தொளி பாய்ச்சிப் புகழ்பெற்ற சேதுராமன் அவர்கள், வரலாற்றில் வாழும் வரலாறாக ஒன்றிக் கலந்துவிட்டார்.

தமிழகத் தொல்லியல் வரலாற்றில் இவரது தொண்டும் புகழும் என்றும் சிறப்பிடம் பெற்று ஒளிர்வதாகும். காலக் கணிப்பில் தேர்ந்த இவர்தம் வாழ்வும், ஆய்வும், கண்டு பிடிப்புகளும் குறிப்பிடத்தக்கவையாகும்; வரலாற்றுத் துறைக்குக் கலங்கரை விளக்கமாகும். புகழாய் நிலைத்து வாழும் சிறப்புப் பெற்ற இவர் திறம் போற்றுவோம். இவர் பெயர்வாழ்க.

- பதிப்பாசிரியர்

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Sermadevi Record No. 648/1916 Maravarman Vikrama year 8 dated Wednesday the 29th June 1188 -
Please refer to Page 152.

(Courtesy Archaeological Survey of India, Mysore)

சேர்மாதேவி (648 / 1916) மாறவர்மன் விக்கிரமன் – எட்டாம் ஆட்சியாண்டு (29–6–1188)

	மூலச்சுவர்	தூண் இடது 7.5 C.M	தூண் முன் 15. C.M (←12.C.M→)	தூண் வலது 12.5.C.M

10 11 12 13 14 15

	மூலச்சுவர்	இடது	முன்	வலது
10	ம்ப ரிகரிது இவ்			பெரிய
11	கங்கைகொடசொ	ழபு		தருளி
12	நாளிலெமண்டைகவி	பிபி	த்	தாரானவ
13	செல்லும்படி ப	ண்ணி	வி	ஞர்மி
14	ணவராஞரையுமி	குதி	ப்	த விட்

வரி 12-ல் தூணின் முன்பக்கத்து 12 C.M. இடைவெளியில், 'துப்போந்' என்று எழுத முடியாது ; 'தளித்' என்றே நிரப்பலாம். — பக்கம் 99 – 101 காண்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Sermadevi Record No. 649/1916 Maravarman Srivallabha of Pumagal Jayamagal Prasasthi year 16 corresponding to 11

Please refer to pages 109 and 152.

சேர்மாதேவி (649 / 1916) மாறவர்மன் ஸ்ரீவல்லபன்

(Courtesy Archaeological Survey of India, Mysore

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Konerirajapuram panel and record No. S. I. I. III 146 — Please refer to pages 40 & 41
Photographs Courtesy Archaeological Survey of India Mysore.
கோனேரி ராஜபுரம் – (S.I.I. 111 146)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. நால்வர் காலம்

சைவ உலகில் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், மாணிக்க வாசகரும் நால்வர் எனப்படுவர். நால்வரின் காலங்களை அறிஞர்கள் பலர் பலகோணங்களில் ஆய்ந்துள்ளனர். அவர்களின் ஆய்வுகளும் அணுகு முறைகளும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரு விருந்தாய் அமைகின்றன.

அடியேன் இவ்வாய்வில் இறங்குவதற்கு முன் அப்பெரியோர்களுக்கு எனது வணக்கத்தை முதற்கண் கூறி ஆராய்ச்சியைத் தொடங்குகிறேன். பலபுதிய செய்திகளை ஆங்காங்கே காணலாம்.

நால்வரின் கால ஆராய்ச்சிக்கு மூலக் கருவூலங் களாகத் துணை நிற்பவை முறையே பாண்டியர் வரலாறு, பல்லவர் வரலாறு, தேவாரம், பெரிய புராணம் ஆகியவை ஆகும். அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளும் செப்பேடு களும் ஆய்விற்கு அஸ்திவாரமாக அமைகின்றன. அவை தக்க இடத்தில் குறிப்பிடப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருஞானசம்பந்தர் காலம்

திருஞான சம்பந்தரின் காலத்தை ஆராய்ச்சி செய்வதற்கு முன்பாக, பாண்டியர் காலத்தையும், வம்சா வளியையும் அறிவது அவசியம். ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை அரசாண்ட பாண்டிய மன்னர்கள் யாவர்? அவர்களின் காலம் எது?

இவ் வினாக்களுக்குரிய விடைகளைப் பாண்டியர் செப்பேடுகள் பத்தும், அம்மன்னர்களின் கல்வெட்டுகளும் நமக்கு அளிக்கின்றன.

அண்மைக் காலத்தில் பாண்டியரின் வரலாறு, விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டது. இவ்வாய்வின் படி ஆறாம் நூற்றாண்டி லிருந்து பத்தாம் நூற்றாண்டு வரை அரசு புரிந்த பாண்டியரின் வம்சாவளிப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது [1].

ஒவ்வொரு மன்னனது காலமும் எவ்வாறு நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதைத் தக்க இடங்களில் சான்றுகளுடன் காண்போம்.

முற்காலப் பாண்டியர்

1. பாண்டியன் கடுங்கோன் (சுமார் கி.பி.550)

(களப்பிரரை ஒழித்து, மதுரையில் மீண்டும் பாண்டியப் பேரரசைத் தாபித்தவன்.)

2. மாறவர்மன் அவனி சூளாமணி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. சேந்தன்

4. மாறவர்மன் அரிகேசரி (624 - 674)

இவன் நெல்வேலிப் போரில் சேரனை வென்றவன். புலியூரில் கேரளனை வென்றவன்; அநேக இரண்ய கர்ப்பம், துலாபாரம் தானங்களைப் பலமுறை செய்தவன்; பாண்டி நாட்டில் மங்கலாபுரம் என்ற ஊரை நிர்மாணித்தான்.

5. கோச்சடையன் ரணதீரன் (674 - 725)

(மங்கலாபுரத்தில் சாளுக்கியரைத் தோற்கடித்தான்)

6. ஸ்ரீமாறன் இராஜசிம்மன் (725 - 768)

(பல்லவ மல்லனை வென்றவன்)

7. நெடுஞ்சடையன் பராந்தகன் - முதல் வரகுணன் (768 - 811) (பரம வைணவன்)

8. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (821-860)

(சேரனையும், சிங்களவரையும் வென்றவன்)

9. சடையன் இரண்டாம் வரகுணவர்மன்; சிவபக்தன் (863-911)

10. வீரபாண்டியன் (860-863)

11. சடையன் வீரநாராயணன் (866-911)

12. மாறவர்மன் இராஜசிம்மன் (911-931)

13. சுந்தர பாண்டியன் 931-935

14. வீரபாண்டியன் - (938-959)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டியர் செப்பேடு பத்தில், குறிப்பாக, வேள்விக் குடி செப்பேடுகள், சீவர மங்கலச் செப்பேடுகள், தளவாய்ப்புரம் செப்பேடுகள், சின்னமனூர் பெரிய செப்பேடுகள் ஆகியவற்றை ஊன்றிக் கவனித்தால் ஏழாவது மன்னனாகிய நெடுஞ்சடையன் பராந்தகனே முதல் வரகுணன் என்பதை எளிதில் அறியலாம்.[2]

சாளக்கிராமத்தில் உள்ள ஸ்ரீவல்லபனின் கல்வெட்டு, வரகுண ஈஸ்வரமுடையார் கோயிலுக்குத் தேவதான நிலங்கள் இறையிலியாக அளிக்கப்பட்டன என்று கூறுகிறது.[3] இதனால் ஸ்ரீவல்லபன் தன் தந்தை வரகுணன் பெயரால் ஒரு சிவன் கோயிலை எழுப்பினான் என்பதை அறியலாம்.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள இரண்டு கல்வெட்டுகள் நெடுஞ்சடையன் பராந்தகனாகிய வரகுணனுக்கு உரியவை. கரவந்தபுர ஆதிவாசி வைச்சியன், பாண்டி அமிர்தமங்கல வரையினனாகிய் சாத்தன் கணபதி என்பான், சம்புவின் திருக்கோயிலையும், திருக்குளத்தையும் திருத்துவித்தான் என்றும், அவனது மனைவியாகிய நக்கன் கொற்றியார், துர்க்கைக்கும் சேட்டைக்கும் கோயில் எடுப்பித்தாள் என்றும் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது.

மன்னனின் ஆறாம் ஆட்சி ஆண்டில் கலியுக வருடம் 3874இல் தை மாதத்தில் இத் திருப்பணிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யப் பட்டன.[4] கல்வெட்டின் காலம் கி.பி.774 ஜனவரி மாதம் ஆகும்.

மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலை நரசிங்கப் பெருமான் குடைவரைக் கோயிலில் இம்மன்னனுக்கு உரிய இரு கல்வெட்டுகள் உள்ளன. மன்னனின் மந்திரியாகிய மதுரகவி என்னும் மாறன் காரி இக்குடைவரைக் கோயிலை எடுப்பித்தார் என்றும், அவர் இறந்துவிடவே, அவரது தம்பியாகிய மாறன் எயினன் என்பவர் கோயிலைக் கட்டி முடித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.[5]

இக்கல்வெட்டுகளில், மன்னனின் மூன்றாம் ஆண்டு, கலியுக வருடம் 3871, கார்த்திகை மாதம், ரேவதி நட்சத்திரம், ஞாயிற்றுக்கிழமை குறிக்கப்படுகின்றன. இதன் காலம் கி.பி.770 நவம்பர் மாதம் நான்காம் தேதி ஆகும்.[6]

திருப்பரங்குன்றம், ஆனைமலைக் கல்வெட்டு களின் காலங்களைப் பின்னோக்கிக் கணக்கிட்டால், கி.பி.768இல் ஜனவரியிலிருந்து நவம்பர் மாதத்திற்குள் ஏதோ ஒரு நாளில் மன்னன் முடிசூடினான் என்பதை அறியலாம். நெடுஞ்சடையன் பராந்தகனாகிய முதல் வரகுணன் கி.பி. 768இல் முடிசூடியவன் என்னும் செய்திஆய்விற்கு ஒருபலத்த அஸ்திவாரமாக அமைகிறது.

கி.பி. 770க்கு உரிய ஆனைமலைக் கல்வெட்டில் மன்னனின் மந்திரியாகிய மதுரகவி என்னும் மாறன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காரி குறிப்பிடப்படுகிறார். இவர் நம்மாழ்வாருடன் தொடர்பு உடையவர் என்பதை இலக்கியங்களால் அறியலாம்.[7] சீவரமங்கலச்செப்பேடுகள் நெடுஞ்சடையன் பராந்தகனாகிய முதல் வரகுணனைக் குரு சரிதை கொண்டாடியவன் என்றும், பரம வைணவன் என்றும் கூறுகின்றன.[8]

நம்மாழ்வார் வரகுணமங்கை என்னும் திருமால் தலத்திற்கு மங்களா சாசனம் அருளினார் என்பதும் அறியத் தக்கது.

முதல் வரகுணனுக்குச் சிரீவரன் என்னும் விருதுப் பெயர் இருந்ததைச் செப்பேடுகள் கூறுகின்றன. நம்மாழ்வார் சிரீவரமங்கை என்னும் தலத்திற்கு (நாங்குநேரி) மங்களா சாசனம் செய்துள்ளார்.

சிந்தனைக்கு உரிய இச்செய்திகளினால் முதலாம் வரகுண்ன் வைணவத்தில் பெரிதும் ஈடுபட்டவன் என்பதை அறியலாம்.

முதல் வரகுணனின் தந்தை மாறவர்மன் ராஜசிம்மன் ஆவான். ராஜசிம்மன் பல்லவ மல்லனைத் தோற்கடித்ததாகச் செப்பேடுகள் கூறுகின்றன. இப்பல்லவ மல்லன் நந்திவர்மன் என்னும் பெயர் கொண்டவன். காஞ்சி புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவன் கி.பி.730இல் தனது பன்னிரண்டாவது வயதில் முடிசூடி 65 ஆண்டுகள் (கி.பி.795வரை) அரசாண்டவன்.[9] ஆகவே வரகுணனின் தந்தையான ராஜசிம்மனின் காலத்தைச் சுமார் 730 முதல் 768வரை என்று கொள்ளலாம்.

ராஜசிம்மனின் தந்தை கோச்சடையன் ரணதீரன் ஆவான். இவன் சாளுக்கியர்களை மங்கலாபுரம் என்னும் இடத்தில் தோற்கடித்தான் என்று செப்பேடுகள் கூறுகின்றன. மங்கலாபுரம் என்பது பாண்டிநாட்டில் உள்ள ஊர். இவ்வூர் இவன் தந்தை மாறவர்மன் அரிகேசரியால் நிர்மாணிக்கப்பட்டது என்பதைப் பின்னால் காண்போம்.

இவன் காலத்தை 680இலிருந்து 730 வரை என்று கொள்ளலாம். பின் கூறப்படும் சரித்திர நிகழ்ச்சிகளும், ரணதீரனின் தந்தையின் காலமும் இக் கருத்திற்குத் துணை நிற்கும்.

கோச்சடையன் ரணதீரன் மங்கலாபுரத்தில் சாளுக்கியரைத் தோற்கடித்தது எப்போது? சாளுக்கிய நாட்டில் முதலாம் விக்கிரமாதித்தன் கி.பி.654 முதல் 681 வரை அரசாண்டவன். இவன் 674இல் பல்லவரை வென்று சோழமண்டலத்தில் ஊடுருவி உறையூரில் முகாமிட்டான்.[10] விக்கிரமாதித்தனின் மகன் வினயாதித்தன் தந்தையின் கட்டளையை ஏற்றுப் பாண்டிமண்டலத்தை வென்று கன்னியாகுமரியில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செயத்தம்பம் நாட்டினான் என்று சாளுக்கியரின் செப்பேடுகள் கூறுகின்றன.[11] இப்போரின் உச்ச கட்டமாக மங்கலாபுரப் போர் நடந்திருக்கலாம். ஒருவரை மற்றவர் தோற்கடித்ததாகக் கூறுகின்றனர். எப்படி இருந்தால் என்ன? போர் நடந்த காலத்தை நிர்ணயிக்கும் வகையில் இடைவெளி இருபது ஆண்டுகளுக்கு மேல் இல்லை.

தந்தையால் நிர்மாணிக்கப்பட்ட மங்கலாபுரத்தில் மகன் ரணதீரன் கி.பி.674இல் சாளுக்கியருடன் போரிட்டான் என்னும் வரலாற்று வடிவமே நமக்குத் தேவையானது.

ரணதீரனின் தந்தை மாறவர்மன் அரிகேசரி ஆவான். அரிகேசரி, நெல்வேலிப் போரில் சேரனையும், புலியூர்ப் போரில் கேரளனையும் வென்றவன் என்றும், எண்ணற்ற துலாபாரமும், இரண்ய கர்ப்ப தானங்களும் செய்தவன் என்றும் செப்பேடுகள் கூறுகின்றன. இவனது காலம் கி.பி. 680க்கு முன் விழுகின்றது.

இந்தக் கட்டத்தில் பெரியபுராணம், ஏனாதிக் கல்வெட்டு, மதுரை வைகைக்கரைக் கல்வெட்டு ஆகியவற்றை நோக்குவோம்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆவான் (630 - 668). மேலைச் சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் தீராத பகைமை இருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி.642இல் நரசிம்ம்வர்மன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்தான்.[12] சாளுக்கியரின் தலைநகரான வாதாபியை அழித்தான். அவ்வூரே இன்று **பாதாமி** என்று விளங்குகின்றது.

அவ்வூரில் உள்ள மல்லிகார்ச்சுனர் ஆலயத்துப் பக்கத்தில் உள்ள பாறையில் நரசிம்மவர்மனது கல்வெட்டை இன்றும் காணலாம். நரசிம்மவர்மனும் வாதாபி கொண்டவன் என்று அழைக்கப்படலானான்.

சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தில், சிறுத் தொண்ட நாயனாரைப் பற்றிக் குறிப்பிடும்போது, வாதாபிப் போரைப்பற்றி விரிவாய் எடுத்துரைப்பார். சிறுத்தொண்டரின் இயற்பெயர் **பரஞ்சோதி** என்பது ஆகும். அவர் அவதரித்த ஊர் சோழநாட்டுத் திருச்செங்காட்டங்குடி.

பரஞ்சோதி மன்னனிடத்துத் தானைப்படைத் தலைவராய்த் திகழ்ந்தவர். மன்னவர்க்குத் தண்டு போய் வாதாபித் தொன்னகரம் துகளாகச் செய்து பன்மணியும், நிதிக்குவையும், பரித்தொகையும் இன்னும் பலவும் மிகக் கொணர்ந்து, அரசன் முன் வைத்தவர். மன்னனும் மகிழ்ந்து பரஞ்சோதியைப் போற்றினான்.

பரஞ்சோதியார் வாதாபிப் போரில் கலந்து கொண்டது கி.பி.642 என்பது வெள்ளிடைமலை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).

பரஞ்சோதியார் போர்த் தொழிலை வெறுத்தார். சிவபெருமான்பால் பக்தி கொண்டு, மன்னனிடம் விடை பெற்றுத், தமது பதியாகிய திருச்செங்காட்டங் குடி வந்தமர்ந்து, திருத்தொண்டில் ஈடுபாடு கொண்டனர். சிறுத்தொண்டர் என அழைக்கப்பட்டார்.

திருவெண்காட்டு நங்கை என்னும் நல்லாளை மணந்தார். அவர்களுக்கு ஓர் மகன் பிறந்தான். தங்கள் மகனுக்குச் சீராளன் என்னும் பெயரை வைத்தனர்.[13] தமது மகன் சீராளனைச் செழுங்கலைகள் பல பயிலப் பள்ளியில் இருத்தினர்.

அவ்வமயம் திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங் குடிக்கு வந்து சிறுத்தொண்டரை வாழ்த்தித் திருச்செங் காட்டங்குடி இறைவன்பால் பதிகங்கள் இயற்றி அருளினார். இந்நிகழ்ச்சிகளை நோக்குங்கால், திருஞான சம்பந்தர் திருச்செங்காட்டங்குடி வந்தது சுமார் கி.பி.650 எனக் கொள்ளலாம்.

பல தலங்கள் ஏகிய பின்பு திருஞானசம்பந்தர் மதுரையம்பதி வந்தடைந்தார். அப்போது மதுரையில் நெடுமாறன் என்னும் பாண்டியன் ஆட்சிபுரிந்து வந்தான். இவன் மனைவியே சோழனின் மகளாகிய மங்கையர்க்கரசியார். இந்த மன்னனின் மந்திரி குலச்சிறையார் ஆவர்.

பாண்டிய மன்னன் சைனமதப் பற்று உடையவனாக இருந்தனன். மங்கையர்க்கரசியார், குலச்சிறையார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் திருஞான சம்பந்தர், பாண்டிய மன்னனைச் சைவ சமயத்தைத் தழுவிடச் செய்தார். மன்னன் திருத்தொண்டுகள் பல புரிந்தனன்.

இம்மன்னனை நெல்வேலிப்போர் வென்ற நெடுமாறன் என்றும், நின்றசீர் நெடுமாற நாயனார் என்றும் சுந்தரமூர்த்தி நாயனாரும், நம்பியாண்டார் நம்பிகளும், சேக்கிழார் பெருமானும் குறிப்பிடுவர்.

நெல்வேலிப் போர் வென்ற பாண்டியன் நெடு மாறனைத் திருஞானசம்பந்தர் சந்தித்தது கி.பி.652 இல் எனக் கொள்வதில் தவறில்லை.

பாண்டியரின் செப்பேடுகளின் கூற்றுப்படி கோச் சடையன் ரணதீரனின் தந்தையான நெல்வேலிப்போர் வென்ற மாறவர்மன் அரிகேசரியே நின்றசீர் நெடுமாற நாயனார் என்பதை எளிதில் அறியலாம். செப்பேடு களும் மாறவர்மன் அரிகேசரி திருநெல்வேலியில் சேரனை வென்றான் என்றும், புலியூரில் கேரளனை வென்றான் என்றும் கூறுகின்றன.

சமீபத்தில் ஏனாதி என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டு இதனை உறுதி செய்யும். இக்கல்வெட்டு வட்டெழுத்தில் உள்ளது. எழுத்தின் அமைதி 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சுட்டுகின்றது.

கல்வெட்டைப் பார்ப்போம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை வட்டம் ஏனாதி என்னும் ஊரில் சமீபத்தில் கிடைத்த கல்வெட்டு.[14]

1. ....து அறிந்தோ
2. தர்விழுமையுந் நோம்மை........
3. றிவாபெய்--நேராத நேர்ப்பேரூர் க(ண்)
4. டிர் நெய்வேலிப் போரார்னென்நேந்தர் பொழிகுருதி
5. நீரா நிலமகளை ஆட்டி கோன் மாந்தார் நேரிர்க்
6. லமகள் ஆட்டினீரை க(ற்) றுல வொரு கால் பொலங்
7. கருசில் நூல் கலப்பட ஒரு காற் துலாபாரம்
8. புக்கான் பொரு காற்சிலை வேந்தனற்றோர் வாடத்தென்
9. புலிஊர் (சென்றிக்)குலை வேழங்கைப்படுத்த கோமா
10. ணணிருலகளவு மாபாய விரிந்து வானுரிகு சற்றரிதா
11. ரமாபோலகுளிருந்தன்மைத் தோன்றிதாள் நடவாபோ
12. ரீ யானை உலங்குணி(மே) மா நாட்டிய கூறந் கோமாறனே கூறு
13. ஸ்ரீசேந்தன் மாறன்
14. அரிகேஸரி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

15. முள்ளி நா
16. ட்டு அரிகேசரி
17. நல்லூர் தச்ச
18. ன் சடயன் பூ
19. தன் எழுத்து

கடல் கோமாறன்-நெல்வேலிப் போர்வென்றவன்-சேந்தன் மாறன் அரிகேசரி ஆகிய இச்செய்திகளால் இக்கல்வெட்டு நின்றசீர் நெடுமாற நாயனாராகிய பாண்டி மன்னனுடையது என்பதை எளிதில் அறியலாம்.

மன்னன் துலாபாரம் செய்த செய்தி சொல்லப் பட்டுள்ளது. இச்செய்தி செப்பேடுகளிலும், கீழே சொல்லப்படும் வைகைக்கரைக் கல்வெட்டிலும் சொல்லப் பட்டுள்ளது.

சேந்தன் மாறன் என்றால் சேந்தனின் மகன் மாறன் என்பது பொருள்.

முள்ளிநாட்டு அரிகேசரி நல்லூர் என்பது இக் காலத்தில் அம்பாசமுத்திரம் அருகில் கிரியம்மாபுரம் என்று வழங்குகிறது. இவ்வூர் அரிகேசநாதர் கோயில் கல்வெட்டுகளில் இறைவனின் பெயர் முள்ளிநாட்டு அரிகேசரி நல்லூர் அரிகேசரி ஈஸ்வரமுடைய நாயனார் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.[15] இக் கோயில் மாறவர்மன் அரிகேசரியின் பெயரால் கட்டப்பட்டது என்பதை நன்கு உணரலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைகைக் கரைக் கல்வெட்டும் இம்மன்னனுடையதே.[16] கல்வெட்டு, மன்னனைச் சேந்தன்மாறன் என்று குறிப்பிடுகிறது. சேந்தனின் மகனாகிய மாறன் என்பது இதன் பொருள்.

மன்னனின் ஆட்சி ஆண்டு 50இல் மன்னனின் பெயரால் அரிகேசரியான் என்னும் மதகு (நீர்மடை) கட்டப்பட்டது கூறப்படுகிறது.

எண்ணற்ற துலாபாரமும், கோதானமும், இரண்ய கர்ப்பதானமும் மன்னன் செய்தனன் என்றும் கூறப் படுகிறது.

அக்ரகாரங்கள் பலவும் ஏற்படுத்தப்பட்டன. மங்கலாபுரம் எனும் ஊரையும் மன்னன் நிர்மாணித்தான். (இதே மங்கலாபுரத்தில்தான் இவன் மகன் ரணதீரன் சாளுக்கியரை வென்றான் என்பதை முன்பு கண்டோம்).

வைகைக்கரைக் கல்வெட்டு கிரந்தமும் வட்டெழுத்தும் கலந்துள்ளது. எழுத்தின் அமைதி 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. சொல்லப்பட்டுள்ள செய்திகளால் இக்கல்வெட்டும் நின்றசீர்நெடுமாறனாகிய பாண்டி மன்னனது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மன்னன் சைன மதத்தவனாகக் காட்சி அளிக்க வில்லை. சைவ சமயத்திற்கு மாறிய பிறகு இக் கல்வெட்டு வெட்டப்பட்டு இருக்கவேண்டும் என்பதை எளிதில் அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆட்சி ஆண்டு 50 எனக் கொடுக்கப்பட்டுள்ளது. சைவ சமயத்தைத் தழுவிய பின்பு மன்னனும் நெடுங்காலம் வாழ்ந்திருந்தான் என்று சேக்கிழார் பெருமானும் கூறுவர். தொகுத்து நோக்கினால், இம் மன்னன் கி.பி.630 லிருந்து 680 வரை ஆட்சி புரிந்து இருக்கலாம் எனக் கொள்ளலாம்.

அரிகேசரியின் கொள்ளுப்பாட்டன் கடுங்கோன் என்னும் பாண்டியன் ஆவான். இவன் களப்பிரர்களை ஒழித்தவன். கடுங்கோன் முடிசூடிய காலத்தைச் சற்றேறக் குறைய கி.பி.550 என்று கொள்ளலாம். இக்காலமே மதுரையில் களப்பிரர் ஒழிக்கப்பட்ட காலம்.

களப்பிரர் என்பார் கருநாடகத்திலிருந்து வந்த ஒரு சாரார். இவர்கள் மதுரையைப் பிடித்து ஆட்சி புரிய லாயினர். மதுரைக் களப்பிரர் சைனர். சோழ மண்டலம், தொண்டைமண்டலம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த களப்பிரர் பௌத்தர். இதன் விரிவான ஆய்வைத் திரு மு. அருணாசலம்அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையில் காண்க.[17]

திருஞானசம்பந்தர் பதினாறு ஆண்டுகளே வாழ்ந்தவராகக் கருதப்படுகிறது. இதுவரை ஆய்ந்த ஆய்வின் பயனாய் இவர் காலத்தைக் கி.பி. 640 முதல் 656 வரை என்று கொள்ளலாம். இவரது காலத்தில் திருநாவுக்கரசரும் வாழ்ந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆளுடைய பிள்ளையான ஞானசம்பந்தர் வயது முதிர்ந்த நாவுக்கரசரை "அப்பரே" என்று மரியாதையாகவும் அழைப்பர். நாவுக்கரசர் 80வயது வாழ்ந்தவராகக் கருதப்படுகிறது. எனவே திருநாவுக்கரசரின் காலம் சுமார் 580-660 எனக் கொள்வதில் தவறில்லை. வேறுபல சரித்திரநிகழ்ச்சிகளும் அதனை உறுதிப்படுத்துகின்றன. அவை அறிந்த செய்திகளாதலால் விரிவுக்கு அஞ்சி விடுக்கிறேன்.

சுந்தரர் காலம்

சுந்தரரின் காலத்தை அறியப் புகுமுன் பல்லவ மன்னர்களின் காலத்தைப் பற்றியும் சிறிது குறிப்பிட வேண்டி உள்ளது. திருநாவுக்கரசர் காலத்துப் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவான். அவனுக்குப் பின் ஆண்ட பல்லவமன்னர்கள் வருமாறு:-

1. முதலாம் மகேந்திர வர்மன் 600 - 630
2. முதலாம் நரசிம்ம வர்மன் 630 - 668
3. இரண்டாம் மகேந்திர வர்மன் 668 - 670
4. பரமேஸ்வர வர்மன் 670 - 700
5. இரண்டாம் நரசிம்ம வர்மன் 700 - 728

ராஜசிம்மன்

6. மூன்றாம் மகேந்திர வர்மன் 720 - 728
7. இரண்டாம் பரமேஸ்வர வர்மன் 728 - 730

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பல்லவ மன்னர்களில் இரண்டாம் மகேந்திர வர்மன்(எண்-3), ராஜ சிம்மனாகிய இரண்டாம் நரசிம்ம வர்மன் (எண்-5), ஆகிய மன்னர்களின் செப்பேடுகள் இரண்டில் வானிலைக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் துணைக்கொண்டு, பல்லவர்களின் கல்வெட்டுகள், செப்பேடுகள், சாளுக்கிய மன்னர்களின் கல்வெட்டுகள், செப்பேடுகள் இவைகளின் துணைக் கொண்டும், மேலே காட்டியுள்ள பட்டியலை ஆய்வாளர் கணக்கிட்டுத் தந்துள்ளார். பல்லவர் சரித்திரத்திற்கு அஸ்திவாரமாக அமைந்துள்ள இவ் வாய்வினை 'எபிகிராபியா இண்டிகா' தொகுதி 29இல் கட்டுரை எண் 11 இலும், எபிகிராபியா இண்டிகா தொகுதி 32இல் கட்டுரை எண் 9லும் காணலாம். இவ்வாராய்ச்சிக் கட்டுரைகள் 1953 இலும் வெளி வந்துள்ளன.

முப்பது ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட இவ்வாராய்ச்சிப் பகுதிகளில் உள்ள காலக் கணக்கீடுகளை அறிய, பலருக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், சுந்தரமூர்த்தி நாயனாரின் காலத்தை ஆராயப் புகுந்த அறிஞர் பலருக்குச் சில குழப்பங்கள் ஏற்பட்டன.

நிற்க, விஞ்ஞான ரீதியாகப் பல்லவர் காலம் கணிக்கப்பட்டுள்ள மேல்வரும் பட்டியலைக்கொண்டு சுந்தரர் காலத்தைக் காணலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில்,

"கடல் சூழ்ந்த உலகம் காக்கின்ற பெருமான்
காடவர் கோன் கழற்சிங்கற்கு அடியேன்"

என்கின்றார். காடவர் கோன் என்றால் பல்லவ மன்னன் என்று பொருள்.

''உலகம் காக்கின்ற பெருமான்'' என்று நிகழ் காலத்தில் கூறுவதால், அப்பல்லவ மன்னனும் சுந்தரரும் சமகாலத்தவர் என்பதை எளிதில் அறியலாம்.

கழல் என்பது மன்னனுக்கு உரிய அடைமொழி. சிங்கன் என்பது மன்னனின் இயற்பெயர்.

பல்லவர்களுக்குச் சிங்கன் என்ற பொதுப் பெயரைக் கூறிவிட்டபடியால் மீண்டும் ஒருமுறை சிங்கன் என்ற பொதுப் பெயரைக்கூற நியாயமில்லை. எனவே இங்குச் சிங்கன் என்று சுந்தரர் குறிப்பது அவர் காலத்தில் வாழ்ந்த பல்லவமன்னனின் இயற்பெயர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருநாவுக்கரசருக்கும் சம்பந்தருக்கும் காலத்தால் பிற்பட்டவர் சுந்தரர். இப்பிற்பட்ட காலத்தில் சிங்கன் என்று பெயர் தரித்த பல்லவ மன்னன் ஒருவனே ஆட்சி புரிந்தவன். அவன் ராஜசிம்மனாகிய இரண்டாம் நரசிம்மவர்மன் ஆவான். அவனது காலம் கி.பி.700 முதல் 728 வரையிலாகும். சுந்தரர் இக் காலத்தில் வாழ்ந்தவர் ஆவர். பின்வரும் ஆய்வும் இக் கருத்துக்குத் துணை நிற்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ராஜசிம்மன் காஞ்சிபுரத்தில் தன் பெயரால் ராஜசிம் மேஸ்வரம் என்னும் சிவன் கோயிலைக் கட்டினான். அதுவே இன்றைய கைலாசநாதர் கோயில். இக்கோயிலில் இம்மன்னனது கல்வெட்டுகள் வடமொழியில் உள்ளன. மன்னனுக்கு இறைவன் அசரீரியாக உணர்த்தினான் என்று கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.[18]

எண்ணற்ற எதிரிகளைத் துகளாக்கிய இம் மன்னன் சைவ சித்தாந்தப் பாதையில் நின்றவன் என்றும் கூறப்பட்டுள்ளது. இவனது வீரத்தையும், சிவ பக்தியையும் கூறும் இவ்வடமொழிக் கல்வெட்டுகள் மிக விரிவானவை.[19] இடமின்மையால் விரிவுக்கு அஞ்சி விடுக்கின்றேன்.

பெரியபுராணத்தில் கழற்சிங்கநாயனார் புராணத்தில் கூறப்படும் பல்லவனும் வடபுல மன்னர்களை வென்றவன் என்றும், சிவபக்தி கொண்டு சிவதர்மங்களும் தொண்டுகளும் செய்தவன் என்றும் கூறப்பட்டுள்ளது. அவை யாவும் ராஜ சிம்மனுடைய கல்வெட்டுகளில் வடமொழிக் கிரந்தங்களில் விரிவாய்ச் சொல்லப் பட்டுள்ளன.

சுந்தரர், பூசலார் நாயனாரையும் குறிப்பிடு கின்றார். பூசலார் நாயனாரின் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் விரிவாக எடுத்துரைப்பார். பூசலார் அவதரித்த திருத்தலம் திருநின்றவூர். ஆனால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவரிடம் பொருள் இல்லை. ஆகவே தம் மனத்திலேயே கட்டிய கோயிலுக்குக்கடவுள்மங்கலம் என்னும் மருந்து சாத்துதல், குடமுழுக்குவிழா ஆகியவற்றுக்கு நன்னாள் அமைத்தார்.

இஃது இவ்வாறு இருக்க, காஞ்சிபுரத்தில் பல்லவ மன்னன் கச்சிக் கற்றளி எடுத்தான். இறைவன் திரு மேனியைத் தாபிக்கவும் நாள் வகுத்தான். ஆனால் அதற்கு முதல்நாள் இறைவன் மன்னனின் கனவில் தோன்றி,

"நின்றவூர் பூசல் அன்பன்
நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்து
நாளை யாம் புகுவோம்.
நீ உன்னுடைய நாளை மாற்றி அமைத்துக்கொள்"

என்று அருளினார். மன்னனும் மறுநாள் பூசலாரைக் கண்டு வணங்கி இறைவன் கனவில் உரைத்ததைக் கூறினான்.

பூசலாரும் தாம் மனத்தில் கோயில் கட்டியதையும், குடமுழுக்கு விழாவிற்கு அன்றுதான் நன்னாளாக நினைத்ததையும் கூறினார். மன்னனும், பூசலாரும் இறையருளில் மூழ்கிப் பேரின்பம் அடைந்தனர்.

காஞ்சிபுரத்தில் முதன் முதலில் கச்சிக் கற்றளி எடுப்பித்தவன் ராஜசிம்மனே. அவனுக்கு அசரீரியாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறைவன் உணர்த்தியதாகக் கல்வெட்டும் கூறுகிறது. இவை பூசலார் நாயனார் புராணத்துடன் ஒத்து இருப்பதும் கவனிக்கத்தக்கது.[20] தொகுத்து நோக்கினால் சுந்தரரும் காஞ்சி கைலாசநாதர் கோயில் கட்டிய ராஜசிம்ம பல்லவனாகிய கழற்சிங்கனும், பூசலார் நாயனாரும் சமகாலத்தவர் என்பதை எளிதில் உணரலாம். எனவே சுந்தரர் காலத்தை 700 முதல் 728 வரை எனக் கொள்ளலாம்.

மாணிக்கவாசகர் காலம்

நெடுஞ்சடையன் பராந்தகனாகிய முதல் வரகுணன் 768இல் முடிசூடினான். இவனது கல்வெட்டுகள் 43ஆம் ஆட்சி ஆண்டு வரை கிடைக்கின்றன.[21] எனவே இவனது ஆட்சி 811இல் முடிவடைந்தது.

அவ்வாண்டிலிருந்து வரகுணனின் மகனான ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் ஆட்சித் தொடங்குகிறது எனலாம். ஸ்ரீ வல்லபன் தனது 18ஆம் ஆட்சி ஆண்டில் (829) சிங்களத்தை வென்றான்.[22] செப்பேடுகளும் ஸ்ரீ வல்லபனின் சிங்கள வெற்றியைக் குறிப்பிடுகின்றன.

ஸ்ரீவல்லபனிடம் தோற்ற சிங்களவர் வாளா இருக்கவில்லை. பாண்டிநாட்டின் மீது படையெடுக்க, தக்க சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இதனைச் சிங்களவர் ஸ்ரீவல்லபனின் கடைசிக் காலத்தில் வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இச்சரித்திர நிகழ்ச்சிகளை இலங்கைச் சரிதமாகிய மகாவம்சம் விரிவாய் எடுத்துரைக்கிறது.

மகாவம்சத்தில் கூறப்படும் செய்தி வருமாறு:

இலங்கையில் இரண்டாம் சேனன் கி.பி.851இல் முடிசூடினான். இவன் காலத்தில் பாண்டி மன்னனின் மகன் ஒருவன் தன் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். இலங்கை மன்னன் சேனாவின் உதவியை நாடினான். தக்க தருணம் இதுதான் என்று உணர்ந்த இலங்கை மன்னனும் தனது 9ஆம் ஆட்சி ஆண்டில் பாண்டிநாட்டின் மீது படையெடுத்து வெற்றி வாகை சூடினான்.

மதுரை மன்னன் போர்க்களத்தில் இறந்தான். மன்னனின் மகனைச் சிங்களவர் மதுரை சிம்மாதனத்தில் ஏற்றினர். சிங்களமன்னன் ''மதுரா துனு'' என்ற பட்டம் கொண்டான்.

இந்நிகழ்ச்சியின் காலம் கி.பி.860 என்று மகா வம்சத்தால் அறியலாம்.[23] இப்போரில் இறந்தவன் ஸ்ரீவல்லபனே. இவன் போரில் இறந்தான் என்னும் செய்தியினைப் பாண்டியர் செப்பேடுகளும் உறுதி செய்கின்றன.

கி.பி.860இல் மதுரை சிங்காதனத்தை அலங்கரித்தவன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் மகனே ஆவான். இவன் தந்தையோடு முரண்பட்டவன். சிங்களவரின் துணை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டு அரசைக் கைப்பற்றியவன். தன் தந்தை போர்க்களத்தில் சிங்களவர்களால் கொல்லப் படுவதற்கும் காரணமானவன். இம்மகன் யார் என்பதைப் பின்னால் பார்ப்போம்.

அண்ணன், தம்பி

பாண்டியர் செப்பேடுகளின்படி ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்தவன் சடையவர்மனாகிய வரகுணன் மகாராசன். இவனை இரண்டாம் வரகுணன் என்று சரித்திர ஆய்வாளர் அழைப்பர்.

இவனது தம்பியின் பெயர் சடையவர்மன் பராந்தகன் வீரநாராயணன் என்பதாகும்.

அண்ணனும் தம்பியும் தங்கள் பாட்டனார் முதலாம் வரகுணனான நெடுஞ்சடையன் பராந்தகனின் பெயரைத் தரித்துள்ளனர் என்பது ஈண்டு நோக்கத் தக்கது.

இரண்டாம் வரகுணனின் நான்கு கல்வெட்டுகள் வானிலைக் குறிப்புக்களைக் கொடுக்கின்றன. அவற்றின் காலத்தைக் அடுத்த பக்கத்தில் காணும் பட்டியலில் காணலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டாம் வரகுணன் காலம் [24]

ஊர்க் கல்வெட்டு எண்	காலக்குறிப்பு	சமமான கிறித்துவ ஆண்டு
1.அய்யம்பாளையம் 705/1905	ஆட்சிஆண்டு 8 சகவருடம் 792	கி.பி.870-மார்ச்சு மாதம் 22 ஆம் தேதி முதல் 871-மார்ச்மாதம் 21 ஆம் தேதி வரை இடைப்பட்ட காலம்
2.திருவெள்ளாறை 84/1910	ஆட்சி ஆண்டு 13 விருச்சிக மாதம், அச்வதி நக்ஷத்திரம் திங்கட்கிழமை	14 ஆம் தேதி நவம்பர் மாதம் கி.பி. 875
3.சவந்தினாதபுரம் 104/1947	ஆட்சி ஆண்டு 13 தனுர் மாதம், அவிட்டம் திங்கட்கிழமை	5 ஆம் தேதி டிசம்பர் மாதம் கி.பி. 875
4. லால்குடி 121/1929	ஆட்சி ஆண்டு 13 தனுர் மாதம், சதயம், செவ்வாய்க்கிழமை	6 ஆம்தேதி, டிசம்பர் மாதம் கி.பி. 875

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவெள்ளறை சவந்திநாதபுரம், லால்குடி ஆகிய ஊர்கள் திருச்சி மாவட்டத்தில் உள்ளவை. இக்கல்வெட்டுகள் எல்லாவற்றிலும் - வரகுண மகாராஜர் தனது அதிகாரியான அண்டநாட்டு வேளான் என்பவனிடம் நிதி அளித்துக், கோயில்களில் நிசதம் விளக்கு எரிக்க நிவந்தங்கள் ஏற்படுத்தியதாகச் சொல்லப்பட்டுள்ளன.[25]

சவந்திநாதபுரத்துக் கல்வெட்டின் நாளுக்கு மறு நாள் லால்குடி கல்வெட்டின் நாளாக அமைவதையும் நோக்கவேண்டும்.

இக்கல்வெட்டுகளின் காலங்களைப் பின்னோக்கிக் கணித்தால், இரண்டாம் வரகுணன் கி.பி.863இல் மார்ச்சு மாதத்திற்குப் பிறகு, நவம்பர் மாதத்திற்கு முன் ஏதோ ஒருநாளில் முடிசூடினான் என்பதை அறியலாம். அதாவது இரண்டாம் வரகுணன் முடிசூடியது கி.பி.863 ஆகும்.

இம்மன்னனின் திருநெய்த்தானத்துக் கல்வெட்டு யாண்டு 4இல் செதுக்கப்பட்டது.[26] இதன் காலம் 866 - 67.

வரகுண மகாராஜன் என்னும் பெயர் கொண்ட திருவிளக்கு ஒன்று எரித்த **கோன் பராந்தகன்** என்பது வரகுணனின் தம்பியே. இதனால் இவ்விருவரும் ஒற்றுமையாக இருந்தனர் என்பதை நன்கு அறியலாம்.

கோன் என்ற அடைமொழி கொடுக்கப்பட்டுள்ள தால் தம்பியாகிய பராந்தகன் 866இல் முடிசூடியிருக்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டும் என்று கொள்ளலாம். அதாவது அண்ணனே தன் தம்பிக்கு இளவரசுப் பட்டம் கட்டிவைத்தான்.

இச்சரித்திர நிகழ்ச்சிகளைக் கோவையாகப் பார்த்தால் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கு மூன்று மகன்கள் இருந்தனர் என்பதை நன்கு அறியலாம்.

சிங்களவர் உதவிகொண்டு கி.பி.860இல் மதுரையில் சிம்மாதனம் ஏறியமகன் வெகுநாள் ஆளவில்லை. மூன்று ஆண்டுகளில் அவனை வரகுணன் விரட்டிவிட்டான். பின்பு தனது தம்பியையும் உடன் சேர்த்துக்கொண்டு நெடுநாட்கள் அரசு புரிந்தான்.

860க்கும் 863க்கும் இடைப்பட்ட காலத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

—

இக்காலத்தில் சிங்களவர்களால் மதுரை சிம்மாசனத்தில் வைக்கப்பட்டவன் யார்? அவனை விரட்டிவிட்டு வரகுணன் எவ்வாறு தனது ராஜ்யத்தைப் பெற்றான்?

இவ்வினாக்களுக்கு உரிய விடைகளைத் திண்டுக்கல் வட்டத்தில் உள்ள பெரும்புல்லி என்னும் ஊரிலிருந்து கிடைக்கும் கல்வெட்டும்[27], பாண்டிய குலோதயா என்னும் வடமொழி வரலாற்றுக் காவியமும் அளிக்கின்றன.

சிங்களவரை விரட்டினால்தான் மதுரையை மீட்க முடியும் என்பதை வரகுணன் உணர்ந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செயல்பட்டான். பெரும்புல்லிக் கல்வெட்டில் பாண்டியருக்கும், சிங்களவருக்கும் நடந்த போர் நிகழ்ச்சி சொல்லப்படுகிறது. இப்போரில் பள்ளி வேளாண் நக்கன் புல்லன் என்பவன் வரகுணனுக்கு உதவியாக இருந்து, சிங்களவரைவென்று, வரகுண மகாராஜருக்குப் பணி பலவும் செய்தான் என்று கூறப்படுகிறது.

வரகுணன் தனது ஆட்சியை 863லிருந்து கணக்கிடுவதால், அப்போர் அந்த ஆண்டிலேயே நடந்திருக்க வேண்டும்; மதுரையில் இருந்த சகோதரனும் அவ்வாண்டிலேயே விரட்டப்பட்டு இருக்கவேண்டும்.

பாண்டிய குலோதயா என்னும் வடமொழிக் காவியம் தெரிவிக்கும் அரிய செய்தி ஒன்றைக் காண்போம்.[28]

வரகுணனுடைய சகோதரன் இராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு வரகுணனைத் துரத்திவிட்டான். மனமுடைந்த வரகுணன் காடுகளில் அலைந்து திரிந்து கடைசியில் திருவாதவூர் அடைந்தான்.

மாணிக்கவாசகர்

அங்குச் சிறந்த சிவபக்தராக விளங்கியவரும் பல கலைகள், சாத்திரங்கள் அறிந்தவருமாகிய வாதபுரி நாயகர் என்னும் அந்தணரை அடைந்தான். அவருடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருள் ஆசியால் வரகுணன் தன் சகோதரனை மதுரையிலிருந்து துரத்திவிட்டுப் பாண்டி மண்டலத்தை ஆளத் தொடங்கினான்.

வாதபுரி நாயகர் என்று இங்கே கூறப்படுபவர் மாணிக்கவாசகரே ஆவர்.

மாணிக்கவாசகர் தொடர்பான மற்ற செய்திகளையும் பாண்டிய குலோதயா நன்கு விளக்குகிறது. நரியைப் பரியாக்கியது ஆகிய செய்திகளும் சொல்லப்படுகின்றன. மாணிக்கவாசகர் வரகுணனுக்கு மந்திரியாக இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

எனவே கி.பி. 863 இல் மாணிக்கவாசகர் சாத்திரங்கள் பல அறிந்த சிவ னடியாராக இருந்தார் என்பதையும், பின்பு பல ஆண்டுகள் வரகுணனுக்கு மந்திரியாகவும் இருந்தார் என்பதையும் அறிகிறோம்.

வரகுணன் தனது தம்பி பராந்தக வீரநாராயணனுக்குக் கி.பி. 866இல் முடிசூட்டி வைத்தான் என்பதை முன்பே கண்டோம். பராந்தகனின் தளவாய்ப்புரச் செப்பேடு மன்னனின் 45ஆம் ஆட்சி ஆண்டில், கி.பி.911இல் அளிக்கப்பட்டது.[29] இதில் பராந்தக வீரநாராயணன் தன் அண்ணன் வரகுணனை எம்கோ என்றும் சிறந்த சிவபக்தன் என்றும் கூறுகிறான். வரகுணன் தவத்தை மேற்கொண்டு இனிதிருக்கும் நாளில் இச்சாசனத்தை வெளியிட்டதாகத் தம்பி பராந்தகன் கூறுகிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"எம்கோ வரகுணன் பிள்ளை
பிறைச் சடைக் கணிந்த
பினாக பாணி எம்பெருமானை
உள்ளத்திலே இனிதருளி
உலகம் காக்கின்ற நாளில்"

என்பது செப்பேடு வாசகம்.

இச்செப்பேடு வழங்கியகாலத்தில் வரகுணனும் உயிருடன் இருந்தனன் என்பதை அறியலாம். இச்செப் பேட்டில் பராந்தக வீரநாராயணன் வேறு ஒன்றையும் சொல்கிறான். அதாவது வரகுணன் அண்ணன்; அவன் சிவதர்மத்தில் ஈடுபட்டவன். அவன் உலகத்தைக் காத்து வருகின்றனன். செப்பேட்டை வழங்கும் பராந்தக வீரநாராயணன் அக்களநிம்மிடி வயிற்றில் பிறந்தவன்.

பராந்தகன் தனக்கு முன் பிறந்தவனைச் செந் நிலத்தில் தோற்கடித்தான்.

இதனால் வரகுணனின் தாயும், பராந்தகனின் தாயும் வேறாவர் என்பதை எளிதில் உணரலாம்.

பராந்தகனால் தோற்கடிக்கப் பட்டவன் வரகுணனாக இருக்க வாய்ப்புஇல்லை. எனவே அவன் வேறு ஒருவளின் மகன் என்பதையும் நன்கு அறியலாம்.

தொகுத்து நோக்கினால், ஸ்ரீவல்லபனுக்கு மூன்று மனைவிகள் இருந்தனர்; மூத்தவளின் மகன் வரகுணன்; இளையவளின் மகன் ஒருவன்;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூன்றாமவளின் மகன் பராந்தக வீரநாராயணன் ஆவான் என்னும் உண்மைகள் புலப்படும்.

பட்டத்து அரசியான மூத்தவளின் மகன் வரகுணன் வயதில் சிறியவனாகவும் இளையவளின் மகன் வயதில் பெரியவனாகவும் இருந்திருக்கலாம். பட்டத்து அரசியின் மகனே முடிசூடவேண்டும் என்று தந்தை நினைத் திருக்கலாம். இதனைப் பொறாத இளையவளின் வயிற்றில் பிறந்தவன் (வயதில் பெரியவன்) சிங்களவர்களுடன் சேர்ந்து துரோகச் செயலில் ஈடுபட்டான் எனலாம்.

இத்துரோகச் செயலில் ஈடுபட்டவனின் பெயர் வீரபாண்டியன். இதனைக் கொடும்பாளூரில் வாழ்ந்த பூதி விக்கிரம கேசரியின் கல்வெட்டால் அறியலாம்.

பூதிவிக்கிரமகேசரியும் வரகுணனும், பராந்தகனும், சமகாலத்தவர்கள், நண்பர்கள்.

பூதிவிக்கிரமகேசரி வீரபாண்டியனைத் தோற் கடித்த தாகக் கொடும்பாளூர் கல்வெட்டில் சொல்லப் பட்டுள்ளது[30].

அந்த வீரபாண்டியன் வரகுணனின் சகோதரன் என்பதைச் சரித்திர நிகழ்ச்சிகளின் துணைகொண்டு அறிகிறோம்.

மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுணன் காலத்தில் வாழ்ந்தவர் என்று வரலாறு சுட்டுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதல் வரகுணன் (768-811) குருசரிதம் கொண்டாடிய பரம வைணவனாவான். அவன் பேரனான இரண்டாம் வரகுணன் (863-911) சிறந்த சிவபக்தன் என்பதைப் பாண்டியர் செப்பேடுகளும், மாணிக்கவாசகரின் திருக் கோவையாரும், பட்டினத்து அடிகளின் பாடல்களும், பாண்டிய குலோதயா வட மொழிக் காவியமும் உறுதி செய்கின்றன.

மாணிக்கவாசகர், ''வரகுணனாம் தென்னவன் ஏத்தும் சிற்றம்பலம்'' என்றும்

''சிற்றம்பலம் புக்கும் மயல் ஓங்கு இருங்களி யானை வரகுணன்'' என்றும்

நிகழ்காலத்தில் வரகுணனைப் பற்றித் திருக் கோவையாரில் கூறுவது ஆய்வுக்கு அணிகூட்டுகிறது.

தில்லையில் திருமால்!

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தர மூர்த்திநாயனாரும் வாழ்ந்த காலத்தில் தில்லை நடராஜப் பெருமான் ஆலயத்திற்குள் திருமாலுக்கு என்று திருமேனி இல்லை. தேவாரங்களில் தில்லையில் திருமால் வழிபாடு இருந்ததாகக் கூறப்படவில்லை.

பிற்காலத்தில், நந்திவர்மன் காலத்தில் தில்லைத் திருச்சித்திர கூடம் எடுக்கப்பட்டது.

இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்ம வர்மனின் மூத்த மகனாகிய மூன்றாம் மகேந்திர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வர்மன் இளமையில் இறந்தான். இரண்டாம் நரசிம்மவர்மன் 728இல் காலமானான். அவனது இரண்டாம் மகனான பரமேஸ்வர வர்மன் சில ஆண்டுகளே ஆட்சி புரிந்து மறைந்தனன்.

இந்தப் பரமேஸ்வர வர்மனுக்கு வாரிசுகள் இல்லாததால், பல்லவரின் கிளையில் வந்த நந்திவர்மன் கி.பி.730இல் பன்னிரண்டாவது வயதில் முடிசூட்டப்பட்டான். இவன் 65ஆண்டுகள் ஆட்சி புரிந்து 795இல் மறைந்தனன்[31]. நந்திவர்மனின் காலத்தில் வாழ்ந்தவர்கள் திருமங்கை ஆழ்வாரும் குலசேகர ஆழ்வாரும் ஆவர்.

வைணவர்களின் குருபரம்பரை, திருமுதியடைவு ஆகியவற்றின் கூற்றுப்படி குலசேகர ஆழ்வார் கி.பி.767 இல் அவதரித்தவர்[32]. திருமங்கையாழ்வார் கி.பி.776இல் அவதரித்தவர்.

கும்பகோணம் அருகே உள்ள நாதன்கோவில் என்னும் திருமால் தலம் நந்திவர்மனால் எடுப்பிக்கப் பட்டு நந்திபுர விண்ணகரம் என்று அழைக்கப்பட்டது. ''நந்தி பணிசெய்த நகர் நந்திபுர விண்ணகரம்'' என்று திருமங்கை ஆழ்வாரும் மங்களா சாசனம் செய்து அருளினர். (தில்லைத் திருச்சித்திர கூடத்தில் பல்லவ மன்னன் திருமாலை எழுந்தருள்வித்தான்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"பைம் பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து
படை மன்னவன் பல்லவர்கோன் பணிந்த
செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்த
தில்லைத் திருச் சித்திர கூடம்"

என்று திருமங்கையாழ்வாரால் அருளப்பட்டது. எனவே தில்லைத் திருச்சித்திர கூடத்தில் திருமாலை எழுந்தருள்வித்தவன் நந்திவர்மனே (730 - 795) என்னும் செய்தி உறுதிப்படுகிறது.

"தில்லை நகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த..."

என்று குலசேகர ஆழ்வாரும் தில்லைத் திருமால் மீது பாடியிருப்பதும் கவனிக்கத் தக்கது.

எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தில்லையில் திருமாலின் திருமேனி வைக்கப்பட்டது என்னும் இச்செய்தி மிக முக்கியமானது.

திருமங்கையாழ்வாருக்கும், குலசேகர ஆழ்வாருக்கும் காலத்தால் பிற்பட்டவர் மாணிக்கவாசகர்.

தில்லையில் திருமாலின் திருக்கோலத்தைத் திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் குறிப்பதும் நம் ஆய்வுக்குத் துணை நிற்கும்.

"வரங்கிடந்தான் தில்லை யம்பல
முன்றிலில் அம் மாயவனே"

என்பது மாணிக்கவாசகரின் அருள்வாக்கு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரகுணன் – சிவபக்தன்!

863இல் முடிசூடிய வரகுணன் சோழநாட்டை வென்றான். வரகுணனின் கல்வெட்டுகள் திருநெய்த் தானம், திருக்கோடிக்காவல், திருக்காட்டுப் பள்ளி, கும்பகோணம்,ஆடுதுறை, திருவிசலூர் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன.

கி.பி.885இல் நடந்த திருப்புறம்பியப் போரில் வரகுணன் தோல்வி அடைந்தான். பல்லவரும், சோழரும் வெற்றி அடைந்தனர்.

வரகுணன் இராச்சியப் பாரத்தைத் தனது தம்பி பராந்தக வீரநாராயணனிடத்து ஒப்படைத்துவிட்டுச் சிவதர்மத்தில் மூழ்கினான்.

வரகுணனுக்கு வாரிசுகள் இல்லை போலும். பராந்தக வீரநாராயணன் 911இல் இறக்கவே அவன் மகன் ராஜசிம்மன் பாண்டிய மன்னன் ஆனான். இவன் 931 வரை அரசாண்டான். பின்பு சோழர் களுக்குப் பயந்து ராஜ சிம்மன் சிங்களத்துக்கு ஓடிவிட்டான்.

ராஜசிம்மனுக்கு ஆண்மக்கள் இருவர் இருந்தனர். ஒருவன் சுந்தரபாண்டியன். மற்றவன் வீரபாண்டியன். சுந்தரன் இளமையில் இறந்தனன். அவன் பெயரில் ஒரு பள்ளிப்படைக் கோயில் கட்டப்பட்டது[33]. வீர பாண்டியன் 938 முதல் 959வரை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதுரையில் அரசு புரிந்தான். 944இல் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் போர் நடந்தது.

வீரபாண்டியன், சோழமன்னன் முதல் பராந்தகனின் மகனான உத்தமசீலியைக் கொன்றதால், ''சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்'' என்று அழைக்கப்பட்டான்.

சோழர்களும் வாளாயிருக்கவில்லை. கி.பி. 959இல் நடந்த போரில் சுந்தர சோழனின் மகனாகிய ஆதித்ய கரிகாலன், வீரபாண்டியனைக் கொன்றான். ''வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரி'' என்றும் அழைக்கப்பட்டான்.[34]

கொலையும், சண்டையும், சச்சரவும் நமக்கு எதற்கு? ஆகவே இவ்வாராய்ச்சியை இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

<u>**நால்வர் காலம் - ஆய்வின் சாரம் :**</u>

திருநாவுக்கரசர்........... 580 - 660

திருஞானசம்பந்தர்.......640 - 656

சுந்தரர்...................... 700 - 728

மாணிக்கவாசகர்....... 863இல் பலசாத்திரங்கள் அறிந்த சிறந்த சிவனடி யாராகத் திகழ்ந்தவர். 863 க்குப்பின் இரண்டாம் வரகுணனிடம் அமைச்சராகப் பணியாற்றியவர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Foot Notes:-

E.I. - Epigraphia Indica

S.I.I. - South Indian Inscriptions Volumes

A.R.E - Archaeological Report on Epigraphy

1. *பாண்டியர் செப்பேடுகள் பத்து-தமிழ் வரலாற்றுக் கழகம்-பதிப்பு 1967*
2. E. I. XXXII Page 271
3. E. I. XXVIII No.7
4. I. I. XXXVI - No.5
5. S. I. I. XIV Nos. 1 and 2, E.I. VIII No.33:
6. E. I. XXVI Page 115
7. E. I. VIII Page 319; S. I. I. XIV Introduction
8. A.R.E. 1926 - 27 Page 87; Page: XXIV
9. E. I. XXIX Page 92 : S. I. I. IV No.135 section 'd' A.R.E. 666 of 1922 Nandipotavarman regnal year 65.
10. E. I. X No.22 E.I. XXVII No.20;
11. Dr.K. V. Ramesh - Chalukyas of Vatapi .Page 112
12. Sastri - A History of South India - Page 151 Edition 1971.
13. *திருச்செங்காட்டங்குடி உத்திராபதீஸ்வரர் கோயிலில் உள்ள முதல் இராஜராஜனின் 19ஆவது ஆட்சிக் கல்வெட்டுகள் இரண்டில், (கி.பி.1004) இறைவனின் பெயர் சீராளன் என்று கூறப்பட்டுள்ளது. ''திருச்செங் காட்டங்குடி மகாதேவர் சீராள தேவர்க்குப் பணிசெய்த சிறுத் தொண்ட நம்பிக்குத் திருவிழா எடுப்பதற்கும், தேவதானம் திருச்செங் காட்டங்குடி சீராளத் தேவர் சித்திரைத் திருவாதிரைத் திருநாளில்*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிறுத்தொண்டர் மாளிகையில் எழுந் தருளவும்'' நிவந்தங்கள் அளிக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. இறைவனின் பெயர் சீராளன் என்பது பெரியபுராணத்திலும் தேவாரங்களிலும் காணப்பட வில்லை. கல்வெட்டில் இச்செய்தி கூறப்படுவது உய்த்து உணரத்தக்கது. தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை - நன்னிலம் கல்வெட்டுகள் முதல் தொகுதியில் எண்கள் 67, 68 காண்க.

14. நன்றி: திரு நடன காசிநாதன், இயக்குநர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை; நன்றி: திரு முத்துக் கோனார், மதுரை வரலாற்றுப் பேரவை.

15. A.R. Ep. 455 of 1916

16. E.I. XXXVIII No.4 இதில் சேந்தன் மற்று என்று தவறாகப் படித்து உள்ளனர். சேந்தன் மாறன் ஏன்பது தான் சரியான வாசகம் என்பதைச் சாசன ஆய்வுப் பக்கம் 32இல் உள்ள புகைப்படத்தில் காணலாம். இப்போது இக்கல்வெட்டு மதுரை மீனாட்சி அம்மன்கோயில் அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

17. Journal of The Madras University-Section A Humanities - Volume L 1 No. 1- January 1979.

18. South Indian Inscriptions; Tamil and Sanskrit- Volume 1, Page 14, Line 7

19. Above Volume Page 8 to 22

20. S.I.I.XII-Introduction Page III -"This is evidently an allusion to Periyapuraanam where in it is stated that the pallava king was directed to postpone the consecration of this

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

temple so that the Lord might be present elsewhere at a similar ceremony conducted in the mental plane by saint Pusalar".

21. S.I.I. XIV No 41, Eruvadi Nanguneri Taluk.

22. S.I.I. XIV - No.44: Erukkangudi, Sattur Taluk.

23. South Indian Temple Inscriptions Volume III Part I Paged 37 and 102.

24. E.I. XXVIII No. 6 E.I. XXXII No. 41

25. S.I.I. XIV E.I. XXVIII No. 6

26. S.I.I. V No. 608

27. E.I. XXX II No. 31.

28. Pandya Kulodaya Edition 1981 Page 50 introduction Pages 194 to 20 English Translation Edited by K.V.Sarma- Published by Institute of Sanskrit and Indological Studies of Punjab University Hoshiarpur.

★★★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. பதினொரு திருமுறைகள் வகுத்த காலம்

திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். திருஞான சம்பந்தரின் திருப்பதிகங்கள் மூன்று தொகுப்புகள். திருநாவுக்கரசரின் திருப்பதிகங்கள் மூன்று தொகுப்புகள். சுந்தரமூர்த்தி நாயனாரின் திருப்பதிகங்கள் ஒரு தொகுப்பு. ஆக இந்த முதல் ஏழு தொகுப்புகளும் தேவாரங்கள் எனப்படும்.

அடுத்து, மாணிக்கவாசகரின் திருவாசகம், திரு விசைப்பா, திருமூலரின் திருமந்திரம், திருமுகப் பாசுரம் முதலியன. சேக்கிழாரின் பெரியபுராணம்- ஆகத் திருமுறை பன்னிரண்டாக வகுக்கப்பட்டன.

எக்காலங்களில், எம்மன்னர்களின் காலங்களில், முதல் பதினொரு திருமுறைகள் வகுக்கப்பட்டன என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம். பன்னிரண்டாம் திருமுறை வகுக்கப்பட்ட காலத்தைத் தனிக்கட்டுரையில் ஆய்வோம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் வாழ்ந்தவர் உமாபதி சிவாசாரியார். அவர் திருமுறை கண்ட புராணத்தையும், சேக்கிழார் நாயனார் புராணத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தையும் இயற்றியவர். அப்புராணங்களில் பதினொரு திருமுறைகள் வகுக்கப்பட்டதையும், விரிவாய் எடுத்துரைப்பார்.

உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்ததையும், சரித்திர வரலாற்றினையும், கல்வெட்டுகளில் காணப் படும் செய்திகளையும் ஒப்புநோக்கித் திருமுறைகள் வகுக்கப்பட்ட காலத்தைக் காண்போம்.

திருமுறைகண்ட புராணம்

திருமுறை கண்ட புராணத்தில் உமாபதி சிவாசாரியார் கூறுவதாவது[1]:

அலகில் புகழ் இராஜராஜன்-அபயகுலசேகரன் என்பான் மூவர் முதலிகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் அருளிச் செய்த பதிகங்களைத் தொகுக்கவேண்டும் என்று விரும்பினான். தனது விருப்பத்தைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியிடம் தெரிவித்தான்.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரான விநா யகரின் அருளால் மூவர் முதலிகளின் திருப்பதிகங்கள் தில்லை நடராஜப் பெருமான் கோயிலில் இருப்பதை அறிந்தனர். இறையருள் கூடிற்று. திருப்பதிகங்களைக் கண்டு எடுத்தனர். சில சுவடிகள் செல்லரித்துப் போயிருந்தன. கிடைத்தவற்றைக் கொண்டு நம்பி யாண்டார் நம்பிகள் திருமுறைகளை வகுத்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவற்றில் திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களும், திருநாவுக்கரசரின் திருப்பதிகங்களும் இவர்களுக்குப் பின்னால் அவதரித்த[2] சுந்தரரின் பதிகங்களும் இருந்தன.

'வேதச் சைவநெறித் தலைவர் மூவர் பாடல்களை' நம்பியாண்டார் நம்பி ஏழாகத் தொகுத்தார்.

1. திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகச் செய்யப்பட்டன.
2. திருநாவுக்கரசரின் திருப்பதிகங்கள் அடுத்த மூன்று திருமுறைகளாகச் செய்யப்பட்டன.
3. சுந்தரரின் திருப்பதிகங்கள் ஏழாவது திருமுறை யாகச் செய்யப்பட்டது.

சைவ உலகில் இவ்வேழு திருமுறைகளும் தேவாரங்கள் எனப்படும். நம்பியாண்டார் நம்பி தொடர்ந்து இப்பணியில் ஈடுபட்டார்.

மாணிக்கவாசகரின் திருவாசகத்தை எட்டாகவும், திருவிசைப்பாவை ஒன்பதாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாகவும், திருமுகப் பாசுரத்தைப் பதினொன் றாகவும் செய்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருத் தொண்டத் தொகையை விரிவாக்கி, கலித்துறையில் திருத்தொண்டர் அந்தாதி இயற்றினார். இக்கலித்துறை அந்தாதியைப் பதினொன்றாவது திருமுறையாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமுகப் பாசுரத்தில் சேர்த்தார்.[3] இச்செய்திகளை வரலாறு, கல்வெட்டுகள் ஆகியவற்றுடன ஒப்பு நோக்குவோம்.

இராஜராஜ மன்னன் என்று உமாபதி சிவம் குறிப்பிடுவது முதலாம் இராஜராஜசோழனே. இம்மன்னன் கி.பி. 985இல் கர்க்கடக மாதத்தில் புனர்வசு நக்ஷத்திரத்தில் முடி சூடியவன்[4].

இராஜராஜன் தஞ்சைப் பெரு உடையார் கோயிலை எடுப்பித்தான். இம்மன்னனது கல்வெட்டுகள் பல இவ்வாலயத்துள் உள்ளன.

ஒரு கல்வெட்டு ஸ்ரீ விமானத்து ஸ்தூபியின் மீது செப்புக்குடம், வைத்த நாளைக் குறிப்பிடுகிறது. அந்நாளே குடமுழுக்கு விழா நடந்த நாள் எனலாம்.

> ''யாண்டு இருபத்தஞ்சாவது, நாள் இருநூற்று எழுபத்தஞ்சினால் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடையார் ஸ்ரீவிமானத்துச் செம்பின் ஸ்தூபித் தறியில் வைக்கச் செப்புக் குடம் ஒன்று....''

என்று கூறிச் செல்கிறது கல்வெட்டு[5].

பெரியகோயில் குடமுழுக்கு (22.7.1009)

இராஜராஜனின் 25ஆம் ஆண்டு கி.பி.1009இல் ஆடி மாதம் புனர்வசு அன்று தொடங்குகிறது. அந்நாள் சூலை மாதம் 22ஆம் தேதி ஆகும்[6]. இதிலிருந்து 257ஆம் நாளைக் கணக்கிட்டால் அந்நாள் கி.பி.1010 ஏப்ரல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாதம் 22ஆம் தேதியாகும். அன்றே செப்புக் குடம் ஸ்ரீவிமானத்தின் மீது வைக்கப்பட்டது.

செப்புத் திருமேனிகள்

அந்நாள் கி.பி.1010 சித்திரை மாதம் 31ஆம் தேதி சனிக்கிழமை ஆகும். அன்று புனர்வசு நக்ஷத்திரம் நிகழ்ந்தது. முதல் குடமுழுக்கு அன்று நடந்தது.

இக்கோயிலில் வேறு ஒரு கல்வெட்டில்[7] மன்னனின் 29ஆம் ஆண்டு வரை (1014) பொய்கை நாடு கிழவன், ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பான் எழுந்தருளுவித்த ஏழு செப்புச் சிலைகள் குறிப்பிடப்படுகின்றன.

அச்சிலைகள் வருமாறு:

1. நம்பி ஆரூரர் (சுந்தரர்)
2. நங்கை பரவையார் (சுந்தரரின் மனைவி)
3. திருநாவுக்கரசர்
4. திருஞானசம்பந்தர்
5. பெரிய பெருமாளான இராஜராஜதேவர்
6. இராஜராஜனின் பட்டத்து அரசியான ஒலோகமா தேவியார்.

7. பெரிய பெருமாளுக்குத் தேவார தேவராக நாலு திருக்கைகளும் உடையவராகக் கனமான பித்தளையால் எழுந்தருள்வித்த சந்திரசேகரர் திருமேனி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(மனிதர்களின் சிலைகளை ப்ரதிமம் என்றும், இறைவனின் சிலையைத் திருமேனி என்றும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது).

"பெரிய பெருமாளுக்குத் தேவாரத் தேவராக நாலு திருக்கைகள் உடைய சந்திரசேகரராகிய பிறைசூடி பெருமானின் திருமேனி" வைக்கப்பட்டது என்னும் செய்தி சிந்தனைக்கு உரியது. இந்தக் கல் வெட்டில் தேவாரம் என்ற சொல் கையாளப்படுகிறது. இறைவனைத் தொழும் இடத்திற்குத் தேவாரம் என்று பெயர். முதல் ஏழு திருமுறைகளைத் தேவாரங்கள் என்று கூறும் வழக்கம் 14ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே வழக்கத்தில் வந்தது.

ஆயமறை மொழி நம்பியாண்டார் நம்பி
அருள் செய்த கலித்துறை அந்தாதி தன்னைச்
சேய திருமுறை கண்ட ராசராச
தேவர் சிவாலய தேவர் முதலாயுள்ளார்...

பாராட்டினர்....

என்று உமாபதிசிவமும் கூறுவர்[8]. திருப்பதிகங்களைத் திருமுறைகளாக வகுத்த காரணத்தால் மன்னனும் திருமுறை கண்ட இராஜராஜன் என அழைக்கப்பட்டான்.

வண்ண ஓவியங்கள்

சுந்தரரின் திருத்தொண்டத் தொகையை நம்பி யாண்டார் நம்பி விரிவுபடுத்திக் கலித்துறை அந்தாதி என்னும் திருத்தொண்டர் அந்தாதி செய்தார். இதனை இராஜராஜனும் கேட்டுள்ளான் என்பதை மேலே உள்ள பாடலால் அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதன் காரணமாக ''நம்பிஆரூரரின் சிலையும் பரவை நங்கையாரின் சிலையும் முதல் இடம் பெறுகின்றன. அடுத்து, திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் சிலைகள் வைக்கப்பட்டன.

இவ்வரிசையில்தான் மூவர் முதலிகளும் கலித்துறை அந்தாதியில் இடம் பெறுகின்றனர். இக்கலித்துறை அந்தாதியைக் கேட்டபிறகு, இராஜ ராஜன் சுந்தர மூர்த்தி நாயனாரின் வரலாற்றை ஓவியத்தில் வடித்தான்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கர்ப்ப இல்லத்தின் பின்புறத்தில் இராஜராஜன் காலத்து ஓவியங்கள் உள்ளன. இதில் சுந்தரரின் வரலாறு அழகாகப் பல வண்ணங்களில் தீட்டப்பட்டு உள்ளதை இன்றும் காணலாம்.

சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்டது; சுந்தரர் வெள்ளையானையின் மீது செல்வது, தொடர்ந்து சேரமானாரும் குதிரையின் மீது கயிலாயம் செல்வது, கயிலாயத்தில் தேவர்களும் முனிவர்களும் எதிர்கொண்டு அழைக்க (திருநொடித்தான் மலைத் திருப்பதிகத்தில் உள்ளபடி) இறைவன் சுந்தரரை அன்புடன் ஏற்பது போன்ற காட்சிகள் அருமையிலும் அருமையாக வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன.

<u>பிடாரர்</u>

தஞ்சைப் பெருஉடையார் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பிக்க 48 ஓதுவார்கள் நியமனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யப்பட்டனர் என்று மற்றொரு கல்வெட்டு கூறுகிறது[9]. ஓதுவார்களின் பெயர்கள் சிவன் என்ற முடிவைக் கொண்டுள்ளன. (பூர்வசிவன், தர்மசிவன், ஞானசிவன், சதாசிவன்,நேத்திர சிவன் என்பன போல).

ஏழு திருமுறைகள்

இச்செய்திகளைத் தொகுத்து நோக்கினால் இராஜராஜனின் கடைசி நாட்களில் -கி.பி.1010 லிருந்து 1014க்குள் முதல் ஏழு திருமுறைகள் வகுக்கப் பட்டன என்று கொள்ளலாம்.

இராஜராஜனின் காலத்தில் மாணிக்க்வாசகரின் சிலை வைக்கப்படவில்லை. மாணிக்கவாசகரின் திருவாசகம் எட்டாம் திருமுறையாக இராஜராஜனின் மகன் இராஜேந்திர சோழனின் காலத்தில் செய்யப் பட்டது. இதனைப் பின்பு பார்ப்போம்.

ஏழு திருமுறைகள் வகுத்த பிறகு இராஜராஜன் மறைந்துவிட்டான். இதனைத் திருமுறை கண்ட புராணத்தில் மறைமுகமாகக் காணலாம். உமாபதி சிவமும் கீழ்க்கண்ட பாடலில் கோடிட்டுக் காட்டிவிடுகிறார்.[10]

'மன்னன் தானும் எழின் முறையை
முன்போல் வகுக்க எண்ணி....
....வகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்
தூயமனுவெழு கோடி யென்ப துன்னித்
தன்னிகரில் திருவருளான் மன்னன் றானும்
தாரணியோர் வீடுபெறும் தன்மை சூழ்ந்தே'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நான்கு திருமுறைகள் (8,9,10,11)

பதினொரு திருமுறைகள் வகுக்கப்பட்டதைக் கூறும்போது மீண்டும் ஒருமுறை 7 திருமுறைகள் முன்பு வகுக்கப்பட்டதையும் தொகுப்பினையும் கூறிப், பிறகு நான்கு சேர்க்கப்பட்டதையும் கூறுகிறார்.

இதனால், அடுத்த நான்கு திருமுறைகள் இராஜ ராஜன் காலத்திற்குப் பின் வகுக்கப்பட்டன என்பதை அறியலாம். அது இராஜராஜனின் மகனாகிய இராஜேந்திர சோழன் காலத்தில் நிறைவேறியது. இக்கருத்துக்குத் துணை புரியும் சான்றுகளைக் காண்போம்.

இராஜராஜன் கி.பி.1012இல் ஆனிமாதம் மிருக சீரிடம் திகழ்ந்த நன்னாளில் தன்மகன் இராஜேந்திர சோழனுக்குப் பட்டம் கட்டினான்.[11] கி.பி.1014இல் இராஜராஜன் மறைந்தான். இராஜேந்திரன் சோழ மாமன்னன் ஆனான்.

இராஜேந்திரனும் தன் தந்தையைப் போலவே பல வெற்றிகள் கண்டவன். கி.பி.1023இல் இராஜேந்திரன் வடநாட்டு மன்னரை வென்று புனித கங்கை நீரைக் கொணர்ந்தான்[12]. கங்கைகொண்டான் என்றும் அழைக்கப் பட்டான். இவ்வெற்றியின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரம் என்ற நகரை நிர்மாணித்தான். அவ்வூரில் கங்கை கொண்ட சோழீச்சரர் ஆலயத்தையும் கட்டினான். அருகில் சோழகங்கம் என்னும் மிகப்பெரிய ஏரியும் வெட்டினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கங்கைகொண்ட சோழபுரம் என்னும் பெயர் முதன் முதலாக இராஜேந்திரனின் 16ஆம் ஆண்டுக் கல்வெட்டில் கி.பி.1028இல் கூறப்படுகின்றது.[13]★

கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று இராஜேந்திரனின் 23ஆவது ஆட்சி ஆண்டில் கங்கைகொண்ட சோழீச்சரமுடையார் கோயிலுக்கு இராஜேந்திரன் அளித்த நிவந்தங்களைக் கூறுகிறது[14]. எனவே,

1. இராஜேந்திரனது கங்கை வெற்றி 1023 என்றும்
2. கங்கைகொண்ட சோழபுரம் என்னும் நகர் 1028க்கு முன் நிர்மாணிக்கப்பட்டது என்றும்
3. கங்கைகொண்ட சோழீச்சரமுடையார் ஆலயம் 1035க்கு முன் முடிக்கப்பட்டது என்றும் கொள்ளலாம்.

கருவூர்த் தேவர்

கருவூர்த் தேவர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் பற்றிப் பாடி இருக்கும் பாடல்களும், கங்கைகொண்ட சோழீச்சரர் மீது பாடி இருக்கும் பாடல்களும் 9ஆம் திருமுறையில் இடம் பெறுகின்றன. எனவே கருவூர்த் தேவர் இராஜராஜன் காலத்திலும் இராஜேந்திரன் காலத்திலும் வாழ்ந்தனர் என்பது நன்கு துணியப்படும்.

நம்பியாண்டார் நம்பியே 9ஆம் திருமுறையையும் வகுத்தனர். இவரது கலித்துறை அந்தாதி

★ மேலும் (விழுப்புரம்) எசாலம் செப்பேட்டிலும் காணலாம்.
-பதிப்பாளர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

11ஆம் திருமுறையில் இடம் பெறுகிறது. இவரே இவ்வந்தாதியினை 11ஆம் திருமுறையில் சேர்த்ததாக உமாபதி சிவம் கூறுகிறார். இவ்வந்தாதியினை இராஜராஜ தேவனும் கேட்டுள்ளான் என்பதை முன்பே கண்டோம்.

தொகுத்து நோக்கினால் 9இலிருந்து 11ஆவது வரையிலான நான்கு திருமுறைகள் இராஜேந்திர சோழன் காலத்தில் வகுக்கப்பட்டன என்று கருதலாம். கங்கை கொண்ட சோழீச்சரர் கோயில் 1035க்கு முன் கட்டப்பட்டது. இராஜேந்திரன் 1044இல் மறைந்தனன். எனவே இந்நான்கு திருமுறைகளும் 1035லிருந்து 1044க்குள் வகுக்கப்பட்டன எனத் துணியலாம்.

இராஜேந்திரன்,
அவனது புதல்வர்களின் காலத்துக்
கல்வெட்டுச் செய்திகள்

திருவாரூர், சிதம்பரம் தலங்களைப் பற்றிப் பூந்துருத்தி காடவநம்பி என்னும் அடியார் இரண்டு பதிகங்கள் பாடி உள்ளார். அவை 9ஆம் திருமுறையில் இடம் பெறுகின்றன.

திருவையாறு ஐயாறப்பர் ஆலயத்தில் உள்ள வட கயிலாயம் என்று அழைக்கப்படும் கோயில் இராஜராஜனின் 21ஆம் ஆண்டில் (1006இல்) கட்டப்பட்டது.

இக்கோயில் மன்னனின் பட்டத்து அரசியான லோகமாதேவி என்பவளால் எடுப்பிக்கப்பட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவள் பெயரால் ஒலோகமாதேவி ஈஸ்வரமுடையார் என்று அழைக்கப்பட்டது[20] இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று இராஜேந்திரன் மகனான இராஜாதி ராஜனின் 32ஆவது ஆண்டில் செதுக்கப்பட்டது (கி.பி.1050).

இக்கல்வெட்டில் இவனது தந்தையான இராஜேந்திரசோழ தேவரின் 27ஆவது ஆண்டில் கி.பி. 1039இல் கோயிலில் பணிசெய்த பத்துப் பதியிலாரும் இரண்டு கரணத்தாரும் ஆகக் கண்காணி செய்வார் பன்னிருவர் குறிப்பிடப்படுகின்றனர். அதில் ஆத்ரேயன் (ஆத்ரேய கோத்திரத்து) நம்பி காடநம்பியும் ஒருவர்.[21] இவரே பூந்துருத்திக் காடவநம்பி ஆவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பூந்துருத்தி என்னும் கிராமம் திருவையாற்றுக்கு மிக அருகில் உள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்த தலம் திருநாவலூர் ஆகும். இன்று திருநாமநல்லூர் என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் பக்தசனேஸ்வரர் கோயிலில் உள்ள இராஜேந்திர சோழனின் 6 ஆம் ஆட்சி ஆண்டு கி.பி. 1018-க்கு உரிய கல்வெட்டில் நம்பி ஆரூரரின் (சுந்தரமூர்த்தி நாயனாரின்) சிலை வைக்கப்பட்டு வழிபாட்டுக்கு நிவந்தங்கள் அளிக்கப் பட்டன என்று கூறப்பட்டுள்ளது.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள இராஜேந்திர சோழனின் 19 ஆம் ஆட்சி ஆண்டு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி. 1031க்கு உரிய கல்வெட்டில் ''உடையார் இராஜேந்திர சோழ தேவர் கங்கைகொண்ட சோழபுரத்துக் கற்றுக் கல்லூரியில் தாகம் செய்து அருளா இருந்து'' என்ற சொல்லப்பட்டுள்ளது.[25] கங்கைகொண்ட சோழபுரத்து அரண்மனைக்குள் இருந்த பூசனை வழிபாட்டுக்கு உரிய இடம் தேவாரம் என்று அழைக்கப்பட்டது.

திருமழபாடியில் இராஜேந்திரனின் 20ஆம் ஆட்சி ஆண்டில் 1032இல் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் படிமங்கள் எடுக்கப்பெற்று வழிபாடுகளுக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டன என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது.[25]

சிதம்பரத்தில் இராஜேந்திரனின் 24ஆம் ஆண்டில் 1036இல் திருமாசித் திருநாளில் சுந்தரரின் திருத் தொண்டத் தொகை விண்ணப்பம் செய்வாருக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டன.[26]

திருச்சி மாவட்டம், அல்லூர் கிராமத்தில் உள்ள பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில் இராஜேந்திரனின் மகனான இராஜாதிராஜ தேவனின் 27ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு சுவையான செய்தியைத் தருகிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1045. ''திருவடகுடி மகாதேவர் ஸ்தானமடம் தேவாரத்துக்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அம்பலத்தாடி திருநாவுக்கரையன்'' என்பவனுக்கும் இவன் வம்சத் தாருக்கும் மடபோகமாக அளித்த நிவந்தம் கூறப்பட்டுள்ளது.[27]

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கீழூர் வீரட்டானேஸ்வரர் கோயிலில் இராஜேந்திரனின் இரண்டாம் மகனான இராஜேந்திர தேவனது 5ஆம் ஆட்சி ஆண்டு கி.பி. 1057க்கு உரிய கல்வெட்டில் (மாணிக்கவாசகரின்) திருவெம்பாவை விண்ணப்பம் கூறப்படுகிறது.[28]

இராஜேந்திரனின் நான்காவது மகனான வீரராஜேந்திரனது திருவொற்றியூர் கல்வெட்டின் காலம் கி.பி. 1070. இதில் கூறப்படும் செய்தி, படிப்போர் மனத்தை உருக்கிவிடும்.

வீரராஜேந்திரனின் பட்டத்து அரசி கோயிலுக்கு நிலங்களைத் தானமாக வழங்கினாள். தன் கணவர் உடல் நலம் பெறவும், தன் திருமாங்கல்யம் மங்கலமாக விளங்கவும், தன் மகள் உடல் நலம் தேறவும், தன் மகனுக்கு மகப்பேறு உண்டாகவும் இறைவனை வழிபட்டுக் கோயிலில் மாணிக்க வாசகரின் திருவெம்பாவை விண்ணப்பம் செய்வதற்கு நிவந்தங்கள் அளித்தனள்.[29]

குலோத்துங்கன் காலத்தில்

கங்கைகொண்ட மன்னன் இராஜேந்திர சோழனது பெண் வயிற்றுப் பேரனே முதற் குலோத்துங்க சோழனாவான். இம்மன்னர்பெருமான் கி.பி. 1070 முதல் 1122 வரை அரசுபுரிந்தவன். இம் மன்னன் இடத்தில் மனுவிற் கூத்தன் நரலோகவீரன் என்னும் படைத்தலைவன் பணி புரிந்தான். இவன் சிறந்த சிவபக்தன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவதிகையில் நரலோகவீரன், திருநாவுக்கரசருக்குத் தனிக்கோயில் ஒன்றைத் திருவதிகை வீரட்டானேஸ்வரர் கோயிலில் எடுப்பித்தான். நரலோகவீரன் திருவதிகைத் தலத்திற்குச் செய்த பணிகளை 25 பாடல்களாகத் திருவதிகைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.[30]

சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்தில் அன்னையின் கற்றளி எடுக்கப்பட்ட காலத்தை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[31]

ஓதும்சக ரர்யாண்டு ஒருபத்து எட்டின்மேல்
ஆதி மூலநாள் ஆனிதனில் - சோதி
துளங்கிட மேல்சோழன் சோழகுல வல்லி
களங்கமற வைத்தான் கரு.... உ

அம்மனுக்குத் தனிக்கோயில் (8.6.1096)

சகவருடம் 1018 சென்று அதன் மேல்வரும் ஆண்டில் ஆனி மாதத்தில், மூல நட்சத்திரம் திகழும் ஆதிநாளான ஞாயிற்றுக்கிழமையில் சோழ்குலவல்லி (சிவகாமி) அன்னையின் திருமேனி (கற்சிலை) வைக்கப்பட்டது. அம்மனுக்கு என்று தனிக் கற்றளி எடுக்கப்பட்ட காலத்தை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1096, ஜூன் மாதம் எட்டாம் தேதி ஆகும். அந்நாள் ஆனி மாதம் 15ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமைக்குச் சமமானது. அன்று இரவு 12மணி வரை முழுமதியும், மூலநட்சத்திரமும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திகழ்ந்தன. ஆனி மூலம் பௌணர்மி நாள் சிவன் கோயில்களில் சிறப்பான நாளாகும். ஞாயிற்றுக்கிழமை பௌணர்மி பொருத்தமான நாள்தான்.

சூரிய குலத்துச் சோழ வம்சத்திற்குக் குளிர்ச்சி பொருந்திய முழுமதியை ஒத்த அன்னையின் அருள் கிட்டவேண்டும் என்று விண்ணப்பம் செய்வது போல் நாளைக் குறித்து அம்மனைப் பிரதிட்டை செய்தனரோ?

அன்னையைச்சோழகுலவல்லி என்றுகல்வெட்டுக் கூறுவதைப் பாருங்கள். இச்செய்திகள் பக்தி மார்க்கத்தின் எதிரொலிகளே!

சிவகாமி அம்மையின் கற்றளி கி.பி. 1096இல் எடுக்கப்பட்டது. இது முதற் குலோத்துங்கன் ஆட்சிக் காலமாகும். சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத் திற்கும், சிவகாமி அன்னையின் கோயிலுக்கும் நரலோகவீரன் பல திருப்பணிகள் புரிந்தனன். இவை பற்றி விரிவாகக் கூறும் கல்வெட்டை இன்றும் சிதம்பரத்தில் காணலாம்.

செப்பேடுகளில் தேவாரங்கள் பதிவு (கி.பி.1100)

"எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்றும் எழில் அழியாச் செல்வியின் கற்றளிக்குத்" திருச்சுற்று மாளிகையை நரலோகவீரன் அமைத்தான். "முத்திறத்தார் ஈசன் முதல் திறத்தைப் பாடியவர் ஒத்தமைந்த செப்பேட்டினுள் எழுதித் தில்லை அம்பலத்தில் வைத்தனன்."[32]

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராஜராஜதேவர் காலத்தில் திருப்பதிகங்களைக் கண்டு எடுத்தபோது சில சுவடிகள் செல் அரித்துப் போயிருந்தன. கிடைத்தவைகளைக் கொண்டு இராஜ ராஜனும் நம்பியாண்டார் நம்பியும் மூவர் முதலிகளின் பதிகங்களை ஏழு திருமுறைகளாகச் செய்தனர். அவையும் ஓலைச் சுவடிகளில்தானே எழுதப்பட்டு இருக்கும். பிற்காலத்தில் இவையும் செல்லரித்துப் போய்விட்டால், என்ன செய்வது? எனவே ஏழு திருமுறைகளும் நிரந்தரமாக இருக்க வேண்டி, குலோத்துங்கனின் படைத்தளபதி நரலோக வீரன் - மூவரின் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதித் தில்லையில் வைத்தனன். இது நடந்த காலம் கி.பி. 1100 எனலாம்.

மூவரின் பதிகங்களில் 8270 பாடல்கள் உள்ளன. இவற்றைச் செப்பேட்டில் எழுதுவது என்றால் எத்தனைச் செப்பேடுகள் தேவைப்பட்டு இருக்கும் என்பதை நம்மால் ஊகிக்க முடியவில்லை.

கி.பி.1139இல் இரண்டாம் குலோத்துங்க சோழனது காலத்தில் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை எழுதினார். இது பன்னிரண்டாவது திரு முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே 1139க்கு பிறகு திருமுறை என்ற சொல்லைப் பார்த்தால், அது பன்னிரு திருமுறைகளையும் குறிக்கும் என்பதை அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செப்பேடு கண்ட பெருமாள்

இந்தப் பின்னணியில் திருச்செந்தூர் அருகே உள்ள ஆற்றூர் என்னும் கிராமத்தில் உள்ள சோமநாத தேவர் ஆலயத்திலிருந்து கிடைக்கும் கல்வெட்டைப் பார்ப்போம்.

இக்கல்வெட்டு 1190இல் முடி சூடிய முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனுடையது. 'பூவின் கிழத்தி' என்னும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஆட்சிஆண்டு 16இல் அதாவது கி.பி. 1206இல் இது வெட்டப்பட்டது. இதில் வரி 7 லிருந்து சொல்லப்படும் செய்தியைப் பார்ப்போம்.

> "குடநாட்டு பிரம்மதேயம் ஆற்றூர் சேந்த மங்கலமான மகாசபையோமும் இவ்வூர் காராண்மை குடிகளோமும் உடையார் ஸ்ரீசோமநாத தேவர்க்கு திருமடை விளாகமாக பிள்ளை பஞ்சவன் பிரம்மாதிராஜர் பிள்ளையார் திருமுறை செப்பேடு கண்ட பெருமாள் திருநாமத்தால் திருவிழா வீதி ஆக தரவேணுமென்று அருளிச் செய்தபடி.."

என்று கூறிச் செல்கிறது.

பஞ்சவன் பிரம்மாதிராஜர் என்பவர் திருமுறை செப்பேடு கண்ட பெருமாள் என்று அழைக்கப் படுகிறார். எனவே இவர் 12 திருமுறைகளையும் செப்பேட்டில் எழுதி ஆற்றூர் சோமநாத கோயிலில் வைத்தார் என்னும் செய்தியை அறிகிறோம். 12 திருமுறைகளிலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18, 905 பாடல்கள் உள்ளன. இச்செப்பேடுகள் இன்று எங்கு போயினவோ தெரியாது.

தொகுத்து நோக்கினால்

1. மூவர் முதலிகளின் திருப்பதிகங்கள் இராஜராஜ சோழன் காலத்தில் கி.பி. 1010லிருந்து 1014-க்குள் ஏழு திருமுறைகள் தொகுக்கப்பட்டன. அவை தேவாரங்கள் என்று அழைக்கப்பட்டன. இதனை நம்பியாண்டார் நம்பி தொகுத்தார்.

2. இராஜராஜனின் மறைவிற்குப்பின் அவனது மகன் இராஜேந்திர சோழன் காலத்தில் 1035லிருந்து 1044க்குள் திருவாசகம், திருவிசைப்பா, திருமந்திரம், திருமுகப் பாசுரம் ஆகிய நான்கையும் தேவாரத் திருமுறைகளுடன் சேர்த்துப் பதினொரு திருமுறை களாகத் தொகுத்தனர். இதனையும் நம்பியாண்டார் நம்பியே செய்தனர்.

3. கி.பி. 1100இல் குலோத்துங்க சோழன் காலத்தில் மூவர் முதலிகளின் தேவாரங்கள் செப்பேட்டில் எழுதப்பட்டுத் தில்லை நடராஜர் கோயிலில் வைக்கப் பட்டன. இத் திருப்பணியைச் செய்தவன் நரலோக வீரனாவான்.

4. கி.பி. 1206இல் திருநெல்வேலி மாவட்டம் ஆற்றூர் கோயிலில் சடையவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் 12 திருமுறைகளும் செப்பேட்டில் எழுதி வைக்கப்பட்டன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Foot Notes:

1. உமாபதி சிவாசாரியாரின் திருமுறை கண்ட புராணம்
2. திருமுறை கண்டபுராணம், பாடல் - 16
3. மேற்படி புராணம், பாடல் - 21.
4. N. Sethuraman - "Early Cholas" Page - 81
5. S.T.T. II No.1 fifth section, line - 1.
6. Swamikkannu Pillai - an indian ephemeris volume III Page 21
7. S.I.I. II No.38
8. S.I.I. III No.43
9. A.R.E. 99/1928-29
10. A.R.E. 129/1914.
11. S.I.I. XIX No.69
12. S.I.I. XIX No.372
13. உமாபதி சிவாசாரியார் - சேக்கிழார் புராணம் பாடல் 24
14. S.I.I. II No.65

மற்றும் திருமுறை கண்ட புராணம்

21. S.I.I. V No. 520 Line 124
24. S.I.I. II No. 20 Line 12
25. A.R.E. 37 / 1920
26. S.I.I. IV No.223 Line 25

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

27. S.I.I. VIII No.675

28. A.R.E. Kilur 12/1905: E.I. IX Page 89

29. A.R. Ep. 1913 part II Qara 32

30. A.R.E. 369 / 1921: நாலாம் திருமுறை பக்கம் 19
தருமை ஆதீன வெளியீடு: எண் 391

31. S.I.I. IV No. 621

32. S.I.I. IV No. 225 Lines 17 and 21

★★★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை

செயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டுப் புலியூர் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூரில் அவதரித்தனர் சேக்கிழார் பெருமான். சேக்கிழார், ''திருத்தொண்டர் மாக்கதை'' என்னும் பெரிய புராணத்தை அருளிச்செய்தனர். பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டது.

பெரியபுராணம் இயற்றப்பட்ட காலத்தை அறிவதற்கு முன், சரித்திர நிகழ்ச்சிகளையும் இங்குக் குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது.[1]

விக்கிரம சோழன் கி.பி. 1118 இல் சிம்மாதனம் ஏறினான். 1133இல் தனது மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு முடி சூட்டினான். விக்கிரமன் 1135 இல் மறைந்தான். குலோத்துங்கன் சோழ மாமன்னன் ஆனான்.

தனது மகன் இராஜராஜனுக்கு 1146இல் முடி சூட்டினான். குலோத்துங்கன் 1150இல் மறைந்தான். இராஜராஜன் சோழ மாமன்னன் ஆனான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1166இல் இராஜராஜன் நோய்வாய்ப்பட்டான். அவனது இரு புதல்வர்களும் சிறுவர்களாக இருந்தனர். எனவே இராஜராஜனுக்குக் கவலை ஏற்பட்டது. தான் இறந்துவிட்டால் சோழ இராஜ்ஜியத்தை யார் ஆட்சி புரிவது என்று கவலையுற்றான்.

தனது அமைச்சன் திருச்சிற்றம்பலமுடையான் ஆன பெருமான் நம்பிப் பல்லவரையனைக் கலந்து ஆலோசித்தான். அமைச்சனின் ஆலோசனைப்படி இராஜராஜன் தனது சகோதரியான நெறியுடைப் பெருமாளின் மகன் எதிரிலிப் பெருமாளுக்கு முடிசூட்டினான்.

இராஜாதிராஜன்

எதிரிலிப் பெருமாள் கி.பி. 1166 இல் ஆனி மாதத்தில் இராஜாதி ராஜ சோழன் என்று திரு அபிஷேகம் செய்யப்பட்டான்.

இராஜராஜன் இறந்துவிட்டால், இராஜாதி ராஜனே தொடர்ந்து சோழ நாட்டை ஆளவேண்டு மென்றும், உரிய நேரம் வந்தவுடன் இராஜராஜனின் மக்கள் இருவரில் ஒருவனுக்கு இராஜாதிராஜன் முடிசூட்டி அம்மகனிடமே சோழ ராஜ்ஜிய பரிபாலனத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும் நிபந்தனையிடப்பட்டது. அவ்விதமே செய்வதாக இராஜாதிராஜனும் தன் மாமன் இராஜராஜனிடம் வாக்களித்தான்.

கி.பி. 1173 இல் இராஜராஜன் மறைந்தான். இராஜாதிராஜன் சோழ மாமன்னன் ஆனான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தனது மாமனான இராஜராஜனின் இரு அரச குமாரர்களுக்கும் பாதுகாவலனாக விளங்கினான்.

கி.பி. 1178 ஆடி மாதத்தில் இராஜராஜனின் இரண்டாம் மகனான மூன்றாம் குலோத்துங்கனுக்கு இராஜாதிராஜன் முடிசூட்டினான்.

இராஜராஜனின் மூத்தமகன் "மொழியனைத்தும் வல்லவன், ஆதி மனுவிற்கும் மேதக்க நல்லமன் என்னும் நாயகன் ஆவான்"[2] அவன் அரச போகத்தை நாடாமல் இருந்தால், அவனது தம்பியான குலோத்துங் கனுக்கு முடி சூட்டப்பெற்றது.

1178லிருந்து 1180 வரை அத்தை மகனான இராஜாதிராஜனும், மாமன் மகனான மூன்றாம் குலோத்துங்கனும் இணைந்து அரசுபுரிந்தனர்.[3]

1180 இல் இராதிராசன் சோழராச்சிய பரிபாலனத்தைக் குலோத்துங்கனிடம் ஒப்படைத் தான். காலஞ்சென்ற தனது மாமன் இராசராசனுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நன்றிக்கடன் ஆற்றினான்.

1181இல் ஆந்திரம் சென்று நிலையாக அங்குத் தங்கிக் கி.பி. 1215இல் மறைந்தான்.

மூன்றாம் குலோத்துங்கனும் இராசாதிராசனுக்குத் தனது நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இராசாதி ராசனின் மெய்க்கீர்த்தியைத் தனது கல்வெட்டுகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிலவற்றில் ஏற்றினான். சோழநாடும் தன் நன்றியை வெளிப்படுத்தியது. இந்நன்றிக்கடனின் எதிரொலியே ''சங்கர சோழன் உலா'' என்னும் உலாவாகும். இதன் பாட்டுடைத் தலைவன் இராசாதிராசன்.

நிற்க, இச்சரித்திர நிகழ்ச்சியில் நாம் கவனிக்க வேண்டிய செய்திகள் மூன்று.

அவை:

1. இரண்டாம் குலோத்துங்கன் 1133 முதல் 1150 வரை ஆட்சி புரிந்தான்.

2. இரண்டாம் குலோத்துங்கன் மகனே இராசராசன் ஆவான். இராசராசனின் இரண்டாம் மகன் மூன்றாம் குலோத்துங்கனாவான்.

3. மூன்றாம் குலோத்துங்கன் 1178 இல் முடி சூட்டப்பட்டான். அத்தைமகனான இராசாதிராசனும் மாமன் மகனான குலோத்துங்கனும் 1178 முதல் 1180 வரை இரண்டு ஆண்டுகள் இணைந்து ஆண்டனர்.

பெரியபுராணம் எப்போது? (1139-40)

பெரியபுராணம் இயற்றப்பட்ட காலத்தைப் பலர் ஆராய்ச்சி செய்து உள்ளனர். சிலர் இரண்டாம் குலோத்துங்கன் காலம் எனவும், வேறு சிலர் மூன்றாம் குலோத்துங்கன் காலம் எனவும் கொள்வர். இப் பிரச்சினைக்கு இங்கு முடிவு கட்டிவிட வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரியபுராணம் எழுதப்பட்ட காலத்தில், ஆட்சிபுரிந்த சோழ மன்னனை **அநபாயன்** என்றும் குலோத்துங்கன் என்றும் அவன் தில்லைப் பேரம் பலத்திற்குப், பொன் வேய்ந்தவன் என்றும் சேக்கிழார் கூறுவார்.

பெரியபுராணம் எழுதப்பட்ட பிறகு மன்னனும் மகிழ்ந்து சேக்கிழாரையே அதற்கு விரிவுரை கூறச் சொன்னான். மன்னனின் விருப்பப்படி சேக்கிழாரும் ஓர் ஆண்டில் 4, 253 பாடல்களுக்கு விரிவுரை கூறினார்.

மன்னனும் மகிழ்ந்து சேக்கிழாருக்கு உத்தம சோழ பல்லவராயன் என்னும் பட்டம் அளித்தான். பொன்னும் பொருளும் வாரி வழங்கினான். தில்லையில் பெருவிழா எடுத்தான்.

சேக்கிழார் பெருமானும் மன்னன் அளித்த பொருளைக் கொண்டு "குன்றத்தூரில் திருநாகேஸ்வரம்" என்னும் கோயிலைக் கட்டினார். இச்செய்திகளை உமாபதிசிவம், சேக்கிழார் நாயனார் புராணத்தில் எடுத்துரைப்பார்.

எனவே சேக்கிழாரின் காலத்தையும், பெரிய புராணம் இயற்றப்பட்ட காலத்தையும் நிர்ணயிக்க சேக்கிழார் கட்டிய திருநாகேஸ்வரம் கோயில் கல்வெட்டுகளே தக்க சான்றுகளைக் கூறமுடியும். அவற்றைக் காண்போம். (குன்றத்தூர் சென்னைக்கு மேற்கில் உள்ளது)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குன்றத்தூர் கல்வெட்டுகள்

குன்றத்தூர் திருநாகேஸ்வரம் கோயில் கர்ப்பக் கிருகத்தில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 2ஆம் ஆட்சி ஆண்டின் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இதில் கோயிலுக்குச் சில நிலங்களை நிவந்தமாகக் கொடுக்கப்பட்டது சொல்லப்படுகிறது.[4]

குலோத்துங்கன் முடி சூடியது கி.பி. 1178 ஆடிமாதம் ஆகும். எனவே இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1179 ஆடி மாதம் முதல் 1180 ஆடி ஆகும் வரையிலான இடைப்பட்ட காலமாகும்.

இந்தக் காலப்பகுதியான இவனது இரண்டாம் ஆண்டிற்குள் 4, 253 பாடல்களுடன் கூடிய பெரிய புராணம் இயற்றப்பட்டு, விரிவுரை ஒருவருடத்தில் கூறப்பட்டு, பிறகு கற்கோயிலும் கட்டப்பட்டு இருக்க முடியாது.

மூன்றாம் குலோத்துங்கன் தனது இரண்டாம் ஆண்டிற்குள் தில்லைப் பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்த தாகவோ, அநபாயன் என்ற பெயர் கொண்டதாகவோ வரலாறே இல்லை.

மேலும் 1179 - 80 ஆகிய காலங்களில் இராசாதி ராசனே சோழப் பேரரசன். குலோத்துங்கன் இளவரசனே. ஆனால் சேக்கிழார், பெரியபுராணத்தில் அரசனைக் குறிப்பிடும்போது தனது மன்னனாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குலோத்துங்கனைத் தனி மன்னனாகச், சோழப் பேரரசனாகவே குறிப்பிடுவார்.

எனவே மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பெரியபுராணம் இயற்றப்பட்டது என்று கொள்வதற்கு இல்லை.

மாறாக மூன்றாம் குலோத்துங்கன் முடிசூடுவதற்கு முன்பே திருநாகேஸ்வரம் கோயில் இருந்திருக்கிறது என்ற உண்மையை இக் கல்வெட்டின் காலம் தெளிவாக உணர்த்துகிறது.

இக்கோயிலின் கர்ப்பக்கிருகத்தில் உள்ள கல்வெட்டுகளில் காலத்தால் பழையவை இரண்டாம் குலோத்துங்க சோழனுடையவை. இவற்றைப் பல முறை நேரில் சென்று படித்துள்ளேன். இரண்டு கல்வெட்டுகள் மன்னனின் 14 ஆம் ஆட்சி ஆண்டில் செதுக்கப்பட்டவை.[5] இவற்றின் காலம் 1146 - 47 ஆகும்.

இவற்றில் கம்பவன நாச்சியார் அம்மன் எழுந்தருளுவிக்கப்பட்டதும், வழிபாட்டுக்கு நிலங்கள் நிவந்தங்களாகஅளிக்கப்பட்டதும் சொல்லப்பட்டுள்ளன.

மற்றொரு கல்வெட்டு மன்னனின் 16 ஆம் ஆட்சி ஆண்டு 1148 - 49 க்கு உரியது.[6] கோயிலுக்கு அளித்த நில நிவந்தங்களைக் கூறுகிறது.

அம்மன் கோயிலில் மூன்றாம் குலோத்துங்கனின் 4 ஆம் 6ஆம் ஆட்சிஆண்டுக் கல்வெட்டுகள் உள்ளன.[7]

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இவற்றின் காலம் முறையே 1182, 1184 ஆகும். இரண்டாம் குலோத்துங்கனின் காலத்து 14 ஆம் ஆட்சி ஆண்டில் அன்னை எழுந்தருளிவிக்கப்பட்டாள். அம்மன் கோயில் மூன்றாம் குலோத்துங்கனின் 4ஆம் 6ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகளில் இருப்பது பொருத்தமே.

எனவே, இந்தக்கோயில் 1146க்கு முன்பே, அதாவது 1145 இல் முழுவதும் கட்டி முடிக்கப்பட்டது எனக் கொள்ளலாம். இது இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலமாதலால் சேக்கிழார் அம்மன்னனின் காலத்தில் வாழ்ந்தவர் என்பது தேற்றம். பின்வரும் செய்திகளும் துணைபுரியும்.

பெரியபுராணம் எழுதப்பட்ட காலம்

விக்கிரம சோழன் 1118இல் சிம்மாசனம் ஏறினான். கி.பி. 1133இல் தனது மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு முடிசூட்டினான். தனது 17ஆவது ஆட்சி ஆண்டில், கி.பி. 1135இல் விக்கிரம சோழன் மறைந்தான்.

1135லிருந்து குலோத்துங்கன் சோழப்பேரரசன் ஆனான். இவ்வாண்டிலிருந்து மன்னனின் தனிப் பட்ட ஆட்சி தொடங்குகிறது. அப்போது மன்னனின் முதல் அமைச்சராகப் பணிபுரிந்தவர் குன்றத்தூர் சேக்கிழார் பெருமான் ஆவார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேக்கிழார் பெரியபுராணம் இயற்றுவதற்குக் காரணம் என்ன? எந்தச் சூழ்நிலையில் இயற்றினார்? எப்போது இவ் வரும்பணியை அவர் மேற்கொண்டு செவ்வனே செய்து முடித்தார்?

இவ்வினாக்களுக்கு உரிய விடைகளைப் பெரிய புராணத்திலும், உமாபதி சிவத்தின் சேக்கிழார்நாயனார் புராணத்திலும், குலோத்துங்கனின் கல்வெட்டு களிலும் காணலாம். அவற்றைப் பார்ப்போம்.

பெரியபுராணம்

பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் சோழ மன்னனைக் குறிப்பிடுகின்றார். பெரியபுராணம் பாயிரத்தில் சேக்கிழார் சோழ மன்னனின் அரசவையைக் குறிப்பிடும்போது, "**திருப் பேரம் பலம் செய்ய தூய பொன் அணி சோழன் நீடூழி பார் ஆய சீர் அநபாயன் அரசவை**" என்பார்.

தில்லை நடராசப் பெருமானின் திருப்பேரம் பலம் பொன் வேய்ந்தவன் இரண்டாம் குலோத்துங்கன். இவனுக்கு அநபாயன் என்ற பெயரும் உண்டு. இவற்றைக் கல்வெட்டுச் சான்றுகளுடன் பின்னால் பார்ப்போம்.

சண்டேசர் புராணம் எட்டாம் பாட்டில்

"சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திரு எல்லை பொன்னின் மயமாக்கிய வளவர்... புவிகாக்கும் மன்னர் பெருமான் அநபாயன்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றும் விளக்குவார்.

புவி காக்கும் மன்னர் பெருமான் என்று நிகழ் காலத்தில் கூறியதையும் கவனிக்க வேண்டும். இதனால் திருப் பேரம்பலம் பொன் வேய்ந்த அநபாயன் என்னும் குலோத்துங்க சோழனே சேக்கிழார் காலத்துச் சோழ மன்னன் என்பதை அறியலாம்.

உமாபதி சிவம்

உமாபதி சிவம் பதின்மூன்றாம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் வாழ்ந்தவர். அவர் சேக்கிழார் நாயனார் புராணம் இயற்றியவர். அதில் அவர் கூறுவதாவது:

''நற்குடி நாற்பத்து எண்ணாயிரவர் சைவப் பெருங்குடியில் சேக்கிழார் என்னும் வேளாளர் குடியில் பிறந்தவர் சேக்கிழார். அவருக்கு அருண் மொழித்தேவர் என்ற இயற்பெயரும் உண்டு. அவர் சோழ மன்னனிடம் அமைச்சராகப் பணி புரிந்தவர்.

''மன்னன் இளமைக் காலத்தில் சிற்றின்ப இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டிருந்தான். சேக்கிழார் மன்னனுக்குத் திருத்தொண்டர் பெருமையை எடுத்துரைத்தார்.'' சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் அடியார் பெருமையை எடுத்து ஓதியவர். நம்பி யாண்டார் நம்பி திருத்தொண்டத் தொகையினை விரிவுபடுத்திக் கலித்துறை அந்தாதி செய்தார். அதில் கூறப்பட்டுள்ள அடியவர்கள் பெருமை அறிதலே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பயன்தரும் என்று மன்னனிடம் சேக்கிழார் கூறினார். சோழனும் மகிழ்ந்து,

ஆயமறை மொழி நம்பியாண்டார் நம்பி
அருள் செய்த கலித்துறை அந்தாதி தன்னைச்
சேய திரு முறைகண்ட ராசராசதேவர்
சிவாலய தேவர் முதலா யுள்ள...

பலரும் உலகத்தாரும் பாராட்டிய தூய கதையைச் சேக்கிழாரே விரிவாக அடைவுபடச் சொல்ல வேண்டுமென்று வேண்டினான்.[8]

மன்னனின் வேண்டுகோளின்படி சேக்கிழாரும் அறுபத்துமூவர் வரலாற்றை எழுத முற்பட்டார்.

சேக்கிழார் பெருமானும் அடியார் பெருமையைக் கூறும் திருத்தொண்டர் மாக்கதை எழுதத் தொடங்கினார். அவ்வப்போது மன்னனும் தூதுவர் களை அனுப்பிக் ''கதை எந்த அளவுக்கு முடிந்தது'' என்று விசாரித்து வந்தனன். நல்லதோர் நாளில் சேக்கிழார் பெருமானும் 4,253 பாட்டுக்களை உடைய பெரியபுராணத்தை எழுதி முடித்தார்.

சோழ மன்னனும் மகிழ்ந்தான். சேக்கிழாரே அக்கதைக்கு விரிவுரை செய்யவேண்டும் என்று வேண்டிக் கொண்டனன்.

மன்னனின் வேண்டுகோளின்படி சித்திரைத் திங்கள் திருவாதிரை நாளில் சேக்கிழார் பெரியபுராண விரிவுரையைத் தொடங்கினார். 4,253 பாடல்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

விரிவுரை வழங்க ஓராண்டு ஆயிற்று. மனு ஆண்டு சித்திரைத் திங்கள் திருவாதிரை நாளில் விரிவுரை பூர்த்தி ஆயிற்று.[9]

சேக்கிழாரைச் சோழன் பெருமைப் படுத்தினான். யானையின் மீது சேக்கிழாரை அமரச் செய்து நகர்வலம் வந்தான். சோழ மன்னன் சேக்கிழாருக்குக் கவரிவீசினான். திருத்தொண்டர் மாக்கதை என்னும் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் செய்யப்பட்டது. மன்னனும், தனது பெயரால் சேக்கிழாருக்கு உத்தம சோழப் பல்லவராயன் என்னும் பட்டம் அளித்தனன்.

சேக்கிழாரின் தம்பி பாலாறாவாயருக்கு அமைச்சர் பதவியும் அளித்துத் தொண்டைமான் என்னும் சிறப்புப் பெயரையும் அளித்தனன்.

சேக்கிழாருக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கினான். மன்னன் அளித்த பொருளைக் கொண்டு சேக்கிழார் பெருமான் குன்றத்தூரில் திருநாகேஸ்வரம் என்னும் கோயிலைக் கட்டினார்.

கல்வெட்டுச் செய்திகள்

திருநாகேஸ்வரம் கல்வெட்டுகள், பெரிய புராணம் இவற்றால் உமாபதி சிவம் கூறும் சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கனே என்பதை எளிதில் அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரியபுராணம் விரிவுரை கேட்ட பிறகு மன்னனின் மனம் மாறுகிறது. சுந்தரமூர்த்தி நாயனாரின் விரிவுரையே நம்பியாண்டார் நம்பியின் அந்தாதி ஆகும். இரண்டின் விரிவே பெரியபுராணம் ஆகும்.[10]

சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்த எடுப்பிலேயே திருவாரூர் நகர்ச்சிறப்பையும், சுந்தரரைச் சிவபெருமான் ஆட்கொண்டதையும் விளக்குகிறார். இவற்றையெல்லாம் கேட்ட மன்னனும் மனம் மகிழ்ந்தான்.

திருவாரூர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார்க்கும் பரவை நாச்சியாருக்கும் தனது ஏழாவது ஆட்சி ஆண்டில் சிலைகளை எழுந்தருள்வித்தான்.

தன் பெயரால் அநபாய சோழநல்லூர் என்னும் புதிய ஊரை நிர்மாணித்து அதனைச் சுந்தரர், பரவை நாச்சியார் பூசை வழிபாடுகளுக்கு நிவந்தமாக அளித்தான். திருஞான சம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் திருமேனிகள் எடுப்பித்தான். மூவர் முதலிகளுக்கு ஆண்டுதோறும் 62 நாட்கள் திருவிழா எடுக்க உத்தரவிட்டான். இவ்விழாக்கள் எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதை விரிவாய் விளக்கினான்.

'அநபாயனாகிய தான் நடராசப் பெருமானது பாதத் தாமரையில் ஒன்றியிருக்கும் தேனீ' என்றும் கல்லில் வெட்டிவைத்தான். இத்துணைச் செய்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களையும் இவனது ஏழாம் ஆண்டுக்குரிய திருவாரூர்க் கல்வெட்டு விளக்குகிறது.[11]

குலோத்துங்கன் 1133இல் ஆடி மாதத்தில் முடி சூடியவன். மன்னனது 7ஆம் ஆட்சி ஆண்டு கி.பி. 1140 ஆடி மாதத்துடன் முடிவடைகிறது.

எனவே, திருவாரூர்க் கல்வெட்டைக் குலோத்துங்கன் பெரிய புராண விரிவுரையாகக் கேட்ட பிறகே வெட்டியிருக்க வேண்டும்.

அப்படியானால் அவ்விரிவுரை 1140 இல் ஆடி மாதத்திற்கு முன் சித்திரை மாதத்தில் திருவாதிரை நாளில் முடிந்திருக்க வேண்டும்.

விரிவுரைத் தொடக்கம் அதற்கு முன் ஆண்டு 1139 சித்திரைத் திருவாதிரையில் ஆரம்பமாகி இருக்க வேண்டும்.

தொகுத்து நோக்கினால்

1. தில்லையில் நடராசப் பெருமான் ஆலயத்தில் சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் விரிவுரையை கி.பி. 1139 சித்திரை நாளில் தொடங்கினார்.

அந்நாள் கி.பி. 1139 ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி வியாழக்கிழமை ஆகும்.

அன்று சித்திரை 13 ஆம் தேதி மதியம் 12 மணி வரை திருவாதிரை நிகழ்ந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. சேக்கிழார் பெரியபுராண விரிவுரையை அடுத்த சித்திரைத் திருவாதிரையில் முடித்தார். அந்நாள் கி.பி. 1140 ஏப்ரல் மாதம் 22ஆம் தேதி திங்கட்கிழமை ஆகும்.

அன்று சித்திரை மாதம் 30ஆம் தேதி திருவாதிரை நட்சத்திரம் இரவு 12 மணி வரை நிகழ்ந்தது.

பெரியபுராணம் கேட்ட பிறகு மன்னன் சேக்கிழாருக்குப் பொன்னும் பொருளும் வழங்கினான் அல்லவா?

சேக்கிழார் அப்பொருளைக் கொண்டு திரு நாகேஸ்வரம் கோயில் கட்டினார்.

கோயில் கட்டத் தொடங்கியது கி.பி. 1140 எனலாம். கட்டி முடிக்கப்பட்டது 1145 என்றும், குலோத்துங்கனின் 1146 - 47 ஆம் ஆண்டுக்கு உரிய கல்வெட்டுகள் அக்கோயிலில் உள்ளன என்றும் முன்பே கண்டோம்.

பெரியபுராண விரிவுரை கி.பி. 1140 சித்திரையில் முடிவடைந்த பிறகு, "பெரும்பற்றப் புலியூர் பூலோகக் கைலாசமென்று பொலிந்து தோன்றக்" குலோத்துங்கனும் தில்லையில் பெருவிழா எடுத்தான்.[13]

இதற்குச் சான்றாக மன்னனது திருமாணிக்குழி கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இக்கல்வெட்டு மன்னனது 8ஆம் ஆண்டில் கி.பி. 1141இல் வெட்டப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இக்கல்வெட்டு மன்னனைக் "கோ ராஜ கேசரி வர்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் தில்லைத் திருநகர் சிறப்புடையதாகத் திருமுடி சூடிய ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்" என்று அறிமுகப் படுத்துகிறது".[14]

குலோத்துங்கன் திருப் பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்ததைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். திருமாணிக்குழியிலுள்ள குலோத்துங்கனின் 3ஆம் ஆண்டு 1136க்கு உரிய கல்வெட்டு, "திருப்பேரம்பலம் பொன் வேய்ந்த பெருமாள்நல்லூர்" என்ற ஊரைக் குறிக்கின்றது.[15]

இம்மன்னனின் திருப்புறம்பியந்து ஏழாம் ஆண்டு 1139-40க்கு உரிய கல்வெட்டு, மன்னனைப் "பேரம்பலம் பொன் வேய்ந்த கோவிராஜகேசரி ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்" என்று குறிப்பிடுகின்றது[16].

திருப்பாலைவனத்திலுள்ள 11ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் இரண்டிலும் திருப்பேரம்பலம் பொன் வேய்ந்தருளிய கோவிராஜகேசரி ஸ்ரீகுலோத் துங்க சோழதேவர் என்றே சொல்லப்படுகிறது[17].

புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணத்து 12ஆம் ஆண்டுக் கல்வெட்டும் பேரம்பலம் பொன் வேய்ந்த கோவி ராஜகேசரி குலோத்துங்க சோழ தேவர் என்று கூறுகிறது[18].

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேக்கிழார் பெருமான் பெரியபுராண விரிவுரை கூறுவதற்கே ஓராண்டு ஆயிற்று. 4253 பாடல்களைச் சான்றுகளுடன் எழுதுவதற்கு 4 அல்லது 5 ஆண்டுகள் ஆகி இருக்க வேண்டும்.

இராசராசதேவர், சிவலாயதேவர் ஆகிய பலரும் பாராட்டிய நம்பியாண்டார் நம்பியின் கலித்துறை அந்தாதியை விரிவுபடுத்தித் தூயகதை எழுதும்படி குலோத்துங்கன், சேக்கிழாரிடம் வேண்டுகிறான். அவ்வப்போது அதிகாரிகளை அனுப்பிக் கதை எத்துணை முடிந்துள்ளது என்று கேட்டு வரச் சொன்னான்.

தனது பாட்டனார் முதல் குலோத்துங்க சோழ தேவர் காலத்தில் நரலோகவீரன் என்பவன் மூவர் முதலிகளின் ஏழு தேவாரத் திருமுறைகளைச் செப்பேட்டில் எழுதித் தில்லையில் வைத்ததை அறிவான்[19]. இக் காரணங்களால் அவன் மனம் தேவாரத்தில் ஈடுபடுகிறது. செயலிலும் காட்டிவிடு கிறான். இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது இம்மன்னனின் சீகாழிக் கல்வெட்டு.

சீகாழி பிரம்மபுரீசுவரர் ஆலயத்தில் இன்று காட்சி அளிக்கும் திருஞானசம்பந்தரின் கோயில் இரண்டாம் குலோத்துங்க சோழனால் கட்டப் பட்டதே.

ஞானசம்பந்தர் கோயிலில் கர்ப்பக் கிரகத்தில் உள்ள இம்மன்னனின் 3 ஆண்டுக் கல்வெட்டே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காலத்தால் முந்தியது. இதில் யாண்டு 3ஆம் சிம்ம மாதம், நவமி, பூராட நட்சத்திரம், திங்கட்கிழமை எனக்கூறப்பட்டுள்ளது[20].

இதன் காலம் கி.பி.1135 ஆகஸ்ட்மாதம் 19ஆம் தேதி ஆகும்.

இக்கல்வெட்டில் ஞானசம்பந்தர் கோயிலுக்கு அளித்த பல நிவந்தங்களும், மலர்த்தோட்டம் அளித்ததும் சொல்லப்பட்டுள்ளன[22].

கி.பி 1135இல் திருஞானசம்பந்தர் கோயிலைச் சீகாழி ஆலயத்துள் குலோத்துங்கன் கட்டுவானேன்?

மூவர் முதலிகளின் பெருமையைச் சேக்கிழார் வாயிலாக அறிந்ததால் இக்கோயிலை எடுப்பித்தான் எனலாம்.

தில்லையில் நடராசப் பெருமான் "உலகெலாம்" என்று அடி எடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் பெரிய புராணத்தை எழுதத் தொடங்கும்போது மன்னனும் திருஞானசம்பந்தருக்குக் கோயில் எடுத்தான் எனக் கொள்ளலாம்.

தொகுத்து நோக்கினால்

1. சேக்கிழார்1135இல் பெரியபுராணம் எழுதத் தொடங்கினார். மன்னனும் திருஞானசம்பந்தர் கோயிலைக் கட்டினான். 4253 பாடல்கள்கொண்ட பெரியபுராணத்தைச் சேக்கிழார்4 வருடங்களில் எழுதி முடித்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. கி.பி. 1139-சித்திரைத் திருவாதிரை நாளில் சேக்கிழார் தில்லை நடராசர் ஆலயத்தில் பெரிய புராண விரிவுரையைத் தொடங்கினார். 1139 (ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி வியாழக்கிழமை).

3. 1140 சித்திரைத் திருவாதிரையில் பெரிய புராண விரிவுரை முடிவுற்றது(ஏப்ரல் 22, திங்கட் கிழமை).

4. 1140இல் திருநாகேஸ்வரம் கோயிலைச் சேக்கிழார் கட்டத் தொடங்கினார்.

5. 1145இல் திருநாகேஸ்வரம் கோயில் கட்டி முடிக்கப்பட்டது.

செங்கல்பட்டு தாலுக்கா களத்தூர் முக்குடுமி ஈஸ்வரர் ஆலயத்தில் குலோத்துங்கனின் 12ஆம் ஆண்டு 1145-க்கு உரிய கல்வெட்டு கூறும் செய்தியைப் பார்ப்போம்[23].

களத்தூரைச் சுற்றியுள்ள சில பகுதிகள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு மன்னனின் பெயரால் ''குலோத்துங்க சோழன் திருத்தொண்டத் தொகை நல்லூர்'' எனப் பெயரிடப்பட்டது.

மன்னன் இவ்வூரைக் கோயிலுக்குத் தேவதான மாக வழங்கினான்.

இவ்வுத்தரவினை எழுதியவன் மன்னனின் அதிகாரி அநபாய மூவேந்த வேளான் ஆவான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வுத்தரவை நிறைவேற்றியவன் மன்னனின் அதிகாரி தொண்டைமான் ஆவான்.

இத்தொண்டைமான், சேக்கிழாரின் தம்பியாரான பாலறாவாயர் ஆவார்.

இரண்டாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திகள் ''பூமன்னு பதுமம்'' அல்லது ''பூமேனி வளர'' என்று தொடங்கும். ஆரம்பக் காலங்களில் இம் மெய்க் கீர்த்திகளில் மன்னனைக் குறிப்பிடும்போது,

"இமயத்து மடக்கொடியும் சிவனும் போல
வீரசிம்மாதனத்துப் புவனமுழு துடையாளொடும்
வீற்றிருந்தருளிய கோவி ராஜ கேசரி வர்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்"

என்னும் தொடர் வரும்.

பெரியபுராணம் கேட்டபிறகு மன்னது மனம் மாறுகிறது. இதனை மன்னனது பிற்காலக் கல்வெட்டுகளில் காணலாம்.

"இமயக் கொடியுடன் சிவனருள் பெற்று
வீரசிம்மாதனத்து வீற்றிருந்த ருளிய
கோவி ராஜ கேசரி வர்மரான
திரிபுவனச் சக்கர வர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்"

என்று இக்கல்வெட்டுள் மன்னனை அறிமுகப் படுத்துகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவெண்ணெய்நல்லூர் சிவன் கோயிலை அருட்துறை என்கிறார் சுந்தரர். முற்காலச் சோழர்களின் கல்வெட்டில் **அருட்துறை உடைய நாயனார்** என்று காணப்படும். இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து பெரிய புராணத்தின் தாக்கத்தால் இறைவன் பெயர் **ஆட்கொண்ட தேவர்** என்று அழைக்கப் படுகிறார். இக்கோயிலில் குலோத்துங்கனின் 15ஆம் ஆண்டு *1148*-க்கு உரிய இரண்டு கல்வெட்டுகள் அரிய செய்திகளைத் தருகின்றன[௯].

கோயிலின் தீர்த்தக்கரையில் சுந்தரர், பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியாருக்கு ஒரு கோயில் எழுப்பினான். நாச்சியாரோடும் பூசை கொண்டு அருளுகின்ற ஆளுடையநம்பிக்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு ஊர்ச்சபையார் நிலங்களை நிவந்தமாக அளித்தனர். இதனைக்கல்வெட்டு சுவைபடச்சொல்கிறது.

> "அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு உடலாக நாங்கள் இவ்வாளுடைய நம்பியின் ஸ்ரீஹஸ்தத்திலே நீர்வார்த்துக் கொடுத்த நிலமாவது."

என்று சொல்லப்படுகிறது. சுந்தரர் இல்லறத்தில் நல்லறம் கண்டவர். அமுதுபடிக்குப்பின் அவர் தாம்பூலம் போட வேண்டாமா? அதற்கும் வழி செய்தனர்.

> "ஆளுடைய நம்பிக்கு அடைக்காய் அமுதும் இலை அமுதும்செவ்விதாக இதயபூர்வமாகத் தானம் பண்ணிக் குடுத்த தோட்டமாவது"

என்று கூறிச் செல்கிறது கல்வெட்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுந்தரரின் சிலையில் திருக்கையில் நீர்வார்த்து நிவந்தங்களை அளித்தனர். இச்செய்தி சிந்தனைக்கு உரியது. பெரியபுராணம் எத்துணை அளவுக்கு மக்களின் மத்தியில் புதிய மறுமலர்ச்சியைத் தோற்று வித்தது என்பதை இக்கல்வெட்டு படம் பிடித்துக் காட்டுகிறது.

சுந்தரரின் சிலையைக் கற்சிலையாக நினைக்க வில்லை. உயிருடன் சுந்தரர் முன்னே நிற்பது போல நினைத்து அவரது திருக் கையில் நீர் வார்த்துக் கொடுத்தார்கள்.

மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழி அல்லவா!

குலோத்துங்கனுக்குப் பின்

கி.பி. 1146இல் குலோத்துங்கன் தன் மகன் இராஜ ராஜனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி வைத்தான். 1150இல் குலோத்துங்கன் மறைந்தான். இராஜராஜன் மாமன்னன் ஆனான்.

இராஜராஜன் காலத்திலும் சேக்கிழார்பெருமான் வாழ்ந்தவர். இதனைப் பின்னால் பார்ப்போம்.

சேக்கிழார் பெரியபுராண விரிவுரை சொல்லும் காலத்து - இளவரசனான இராஜராஜனும் உடன் இருந்து கேட்டிருப்பான் அல்லவா? அதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது சீகாழி திருஞானசம்பந்தர் கோயிலில் உள்ள இராஜராஜனின் கல்வெட்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இக்கோயில் குலோத்துங்கனால் கட்டப்பட்டது என்பதை முன்பே கண்டோம்.

இக்கோயிலில் உள்ள இராஜராஜனின் கல்வெட்டு யாண்டு 12ஆவது மேடநாயிற்று அபரபட்சத்தில் உத்திராடம் திகழ்ந்த திங்கட்கிழமை வெட்டப் பட்டது.[26] இதன்காலம் கி.பி.1148 ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி ஆகும்.

திருக்குழுமங்கலத்து ஆளுடைய பிள்ளையார் கோயிலில் உள்ள மங்கையர்க்கரசி நாச்சியார் கோயிலுக்குப் பூசை வழிபாட்டுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன.

இராஜராஜன் காலத்தில், மங்கையர்க்கரசி நாச்சியாருக்கு என்று தனிக்கோயிலை ஞானசம்பந்தர் கோயிலுக்குள் கட்டுவானேன்?

சிந்தனைக்கு உரிய இச்செய்தியை அறிவதற்குப் பெரியபுராணத்தில் மங்கையர்க்கரசி நாயனார் புராணத்தை நோக்கவேண்டும்.

சேக்கிழாரின் வாக்கைப் பார்ப்போம்.

மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்
வளவர்குலத் திருக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை...
பூசுரர் சூளாமணியாம் புகலி வேந்தர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போனக ஞானம் பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல் பெறும் தவத்தினார்...

மங்கையர்க்கரசியார் சோழர்குலத்து அரசி; அவர் இராஜராஜனுக்கு 500ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவர் திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றவர் அல்வா?

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி...
மண்ணெலா நிகழ மன்னனாய் மன்னு
மணிமுடிச் சோழன்தன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி...

என்று திருஞானசம்பந்தரால் பாடல் பெறும் பேறு பெற்றவர் மங்கையர்க்கரசியார். இவையாவையும், சேக்கிழாரின் விளக்கவுரை நடந்தபோது இராஜராஜன் தன் இளமைக் காலத்தில் கேட்டிருப்பான் அல்லவா! அதன் நினைவாய்க் கி.பி.1148இல் திருஞானசம்பந்தர் கோயிலில் சோழர் திருக்கொழுந்தாம் மங்கையர்க் கரசியாருக்கு இராஜராஜன் தனிக்கோயில் கட்டினான்.

திருமழபாடியில் இராஜராஜனின் 17ஆவது ஆண்டு, மகர நாயிற்று அபரபட்சத்து ஏகாதசியும் ஆயில்யமும் பெற்ற புதன்கிழமைக்கு உரிய கல்வெட்டு ஒன்று உள்ளது.[27]

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதன் காலம் கி.பி.1163 ஜனவரிமாதம் 22ஆம் தேதி(தை மாதம் 9ஆம் நாள் புதன்கிழமை).

இக்கல்வெட்டில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர் மாதேவடிகள் இராமதேவனான உத்தம சோழப் பல்லவரையன் அளித்த நிவந்தம் கூறப்படுகிறது.

இங்குக் குறிப்பிடப்படுபவர் சேக்கிழாரே. இராமதேவன் என்பது அவர் இயற்பெயர்.

இவ்வாறு வைணவப் பெயர் தாங்கிய இரு அடியார்களை 9ஆம் திருமுறையில் காணலாம்.

உத்தமசோழப் பல்லவரையன் என்பது குலோத்துங்கன், சேக்கிழாருக்கு அளித்த பெயர். எனவே சேக்கிழார் 1163இல் உயிருடன் இருந்தார் என்பதை இதனால் நன்கு உணரலாம்.

கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் நான்கு கல்தொலைவில் இன்று காட்சி அளிக்கும் தாராசுரத்து இராஜராஜேஸ்வரம் என்னும் கோயில், இராஜ ராஜனால் கி.பி.1167இல் கட்டப்பட்டது.[28]

இக்கோயிலின் கர்ப்பக்கிரகச் சுவர்களில் 63 நாயன்மார்களின் வரலாறு சிற்பங்களில் காணலாம். ஒவ்வொரு சிற்பத்தின் மேல் பகுதியிலும் சிற்பத்திற்கு உரிய நாயனாரின் பெயர் கல்லில் வெட்டப் பட்டுள்ளது.[29]

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேக்கிழார் பெருமான் 1163இல் இருந்தார் என்பதை முன்பே கண்டோம். அவருடைய அறிவுரைப்படி இராஜராஜன் பெரியபுராணத்தைச் சிற்பங்களாக இக்கோயிலில் வடித்தான் எனக் கொள்ளலாம். தந்தைக்கு ஏற்ற தனயன் அல்லவா?

இராஜாதி ராஜன் காலத்தில்

இராஜராஜன் மறைவிற்குப் பின், இவனது மருமகன் இராஜாதி ராஜன் சோழ மாமன்னன் ஆனான். இராஜாதி ராஜனின் திருவொற்றியூர்க் கல்வெட்டு சுவையான செய்தியைத் தருகிறது. யாண்டு ஒன்பதாவது பங்குனி உத்திரத்து ஆறாம் திருநாளான ஏகாதசியும் புதன்கிழமையும் பெற்ற ஆயில்யத்து நாள் நடந்த செய்தி சொல்லப்படுகிறது.[30] இதன் காலம் கி.பி. 1175 மார்ச்சு மாதம் 5 ஆம் தேதி ஆகும்.

இறைவன் திருஓலக்க மண்டபத்தே எழுந்தருளி ஆளுடைய நம்பியின் ஸ்ரீ புராணம் கேட்டு அருளா நிற்க- என்று கூறப்பட்டுள்ளது. திருவிழாக் காலங்களில் கோயில்களில் பெரியபுராணம் கூறும் வழக்கம் அதிவிரைவில் பரவிவிட்டது என்னும் செய்தியினை இக்கல்வெட்டால் அறியலாம்.

மூன்றாம் குலோத்துங்கன்

மூன்றாம் குலோத்துங்கன் 1178 முதல் 1218 வரை அரசாண்டவன். தன் பாட்டனாரும் தந்தையாரும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேக்கிழாரைப் போற்றியதை நன்கு அறிவான். இக்குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் பெருமான் மறைந்தார்.

எனவே, சேக்கிழார் நினைவாகக் கி.பி. 1185 இல் சிதம்பரத்தில் ஒரு மலர்த்தோட்டத்தை அமைத்தான். அதற்குத் திருத்தொண்டர் சீர் உரைத்தார் திரு நந்தவனம் என்று பெயரிட்டான். இந்நந்தவனத்து மலர்களால் தினமும் நடராஜப் பெருமானுக்கு அர்ச்சனை செய்யவும் ஆணையிட்டான்.

படிப்போர் கண்களில் ஆனந்தக் கண்ணீரைப் பெருகவைக்கும் இச்செய்தியினை மன்னனது சிதம்பரம் கல்வெட்டில் காணலாம்.

''தொண்டர் சீர் உரைத்தார்'' என்னும் இறந்த கால வினைத்தொடரை நோக்க வேண்டும். எனவே சேக்கிழார் 1185க்கு முன் மறைந்தார் எனக் கொள்ளலாம்.

''திருத்தொண்டர் சீர் உரைத்தார் திருநந்தவனம்'' பிற்காலத்தில் ஆட்சி புரிந்த கோப்பெருஞ் சிங்கனாலும் கி.பி. 1251 இல் குறிப்பிடப்படுகின்றது.[32]

1203இல் திருவாஞ்சியத்திற்கு அருகில் உள்ள செவ்வூர்ச் சிவன்கோயிலில் ''திருத்தொண்டர் சீர் உரைத்தாராகிய'' சேக்கிழாரின் படிமம் வைக்கப் பட்டது. நாள்தோறும் வழிபாட்டிற்காக நிலங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அளிக்கப்பட்டன. இச்செய்தியைக் குலோத்துங்கனது திருவாஞ்சியம் கல்வெட்டில் காணலாம்.[33]

பெரியபுராணம் பாயிரத்தில் சேக்கிழார் பெருமான், ''திருத்தொண்டர் சீர் புகலலுற்றேன்'' என்பார்.

கல்வெட்டுகளில் ''திருத்தொண்டர் சீர் உரைத்தார்'' என்னும் தொடரைக் காண்கிறோம். இவற்றை உமாபதி சிவம் நன்கு படித்திருக்க வேண்டும். அவர் சேக்கிழார் பெருமானைத்

"திருத்தொண்டர் சீர் பரவும்
குன்றை யாதிபதி சேக்கிழார்"

என்று அருளிச் செய்தார்.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Foot Notes

A.R.E. = Archaeological Report on Epigraphy

S. I. I = South Indian Inscriptions Volumes.

1. N. Sethuraman - Aruludai Cholamandalam Edition 1976 - The Cholas Mathamatics Reconstructs the Chronology - Edition 1977 - Medieval Pandyas edition 1980.

2. Sankara Cholan Ula - N. Sethuraman - The Cholas Mathematics Reconstructs the Chronology Pages 136 to 140 Medival pandyas - Pages 40 to 42.

3. Tiruchattimutram record A.R.E. 270/1927 of Rajadhi Raja quotes the reign of Kulothunga III.

4. A.R.E. 200/1929 - 30

5. A.R.E. 194 and 198 of 1929 - 30

6. A.R.E. 199/1929 - 30

7. A.R.E. 230 and 229 of 1929 - 30

8. சேக்கிழார் நாயனார் புராணம் பாடல் 24

9. சேக்கிழார் நாயனார் புராணம் பாடல் 80

10. பெரியபுராணம்-திருமலைச்சிறப்பு-பாடல்கள் 37முதல் 40வரை.

11. S.I.I. VII No. 485

12. N. Sethuraman - The Cholas Mathematics Reconstructs the Chronology, Page 14

13. சேக்கிழார் நாயனார் புராணம், பாடல்-83.

14. S.I.I VII No. 780

15. S.I. VII No.782.

16. A.R.E. 350 1927

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

17. A.R.E. 315 and 348 of 1928 - 29

18. S.I.I. VII No. 1044

19. S.I.I. IV No. 225 line 21

20. A.R.E. 380/ 1918

22. A.R.E. 374, 377 and 378 of 1918.

23. A.R.E. 346/1911

26. 375 / 1918

27. A.R.E. 95 / 1920

28. A.R.E. 17/1908 Raja II year 21. N. Sethuraman The Cholas Mathematics Reconstructs the Chronology, page 170.

29. A.R.E. 1920 Part II Page 102

30. S.I.I. V No. 1358

31. A.R.E. 313/ 1958-59

32. S.I.I. VIII No. 48, line 4

33. A.R.E. 229/ 1938-39 Kulotunga III year 25.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. செப்பேடுகளில் திருமுறைகள்

ஏழாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் அவதரித்தார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசு நாயனாரும் (அப்பர்) சமகாலத்தவர்கள்.[1]

எட்டாம் நூற்றாண்டின் (700-728) முற்பகுதியில் சுந்தரமூர்த்தி நாயனார் அவதரித்தார். சைவ உலகில் இவர்கள் 'மூவர் முதலிகள்' என்று அழைக்கப் படுகின்றனர்.

சிவத்தலந்தோறும் சென்று சிவபெருமானை வழிபட்டுப் பக்தியால் உருகிப் பதிகங்கள் இயற்றி னார்கள். ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு இருந்த இப்பதிகங்கள் தில்லை நடராஜப் பெருமான் ஆலயத்தில் ஓர் அறையில் வைத்துப் பூட்டப்பட்டு இருந்தன.

முதலாம் இராஜ ராஜ சோழன் கி.பி.1010இல் நடராஜப் பெருமான் கோயிலில் இச் சுவடிகளைக் கண்டு எடுத்தான். இதில் சில செல்லரித்துப் போயிருந்தன. நம்பியாண்டார் நம்பியின் துணைக் கொண்டு கிடைத்த பாடல்களை 7ஆகத் தொகுத்தான். இவை 7 திருமுறைகள் அல்லது தேவாரம் எனப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சம்பந்தரின் தேவாரம்-3; அப்பரின் தேவாரம்-3, சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரம்-1; ஆகத் தேவாரங்கள் என்றழைக்கப்பட்ட திருமுறைகள் 7ஆக வகுக்கப்பட்டன.

இராஜராஜசோழனின் மறைவிற்குப் பிறகு இராசேந்திர சோழன் காலத்தில் 1035இல் மேலும் 4 திருமுறைகள் சேர்க்கப்பட்டன. இதனையும் நம்பி யாண்டார் நம்பியே செய்தார். இவற்றில் முறையே மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருமந்திரம், திருமுகப் பாசுரம் ஆகியவை இடம்பெறுகின்றன. திருமுறைகள் 11ஆக வகுக்கப்பட்டன.

9ஆவது திருமுறை திரு இசைப்பாவில் கி.பி. 1028இல் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழபுரம் கோயில் இடம் பெறுகிறது.[2]

நிற்க, இராஜராஜன் காலத்தில் தில்லை நடராஜப் பெருமான் கோயிலில் தேவாரங்கள் எழுதியுள்ள சுவடிகளைக் கண்டு எடுக்கும்போது சில செல்லரித்துப் போயிருந்தன. அவ்வாறு பிற்காலத்தில் நேர்ந்து விட்டால் என்ன செய்வது? எனவே முதல் குலோத்துங்கனது காலத்தில் 1100இல் அரசனின் அதிகாரியான மணவிற்கூத்தன் நரலோக வீரன் என்பவன் மூவர் முதலிகளின் 7 தேவாரங்களையும் செப்பேட்டில் எழுதித் தில்லை நடராஜப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருமானின் கோயிலில் வைத்தான். இதனைச் சிதம்பரம் கல்வெட்டு, ''முத்திறத்தார் ஈசன் முதற் றிறத்தைப் பாடியவர் ஒக்கமைத்த செப்பேட்டினுள் எழுதி வைத்தனன் கூத்தன் தில்லை சிற்றம்பலத்தே சென்று'' என்று கூறுகிறது.

மணவிற் கூத்தரான நரலோக வீரன், மூவர் முதலிகளின் பாடல்களை அவர்கள் பாடியவாறே ஒக்க அமைத்துச் செப்பேட்டினுள் தில்லையில் வைத்தான் என்பது இதன் பொருள்.

தேவாரப் பதிகங்களில் 8,270 பாடல்கள் உள்ளன. இவற்றைச் செப்பேட்டில் எழுதுவது என்றால் எத்தனை செப்பேடுகள் தேவைப்பட்டு இருக்கும் என்பதை நம்மால் ஊகிக்க முடியவில்லை.

கி.பி.1139இல் இரண்டாம் குலோத்துங்க சோழனது காலத்தில் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தை எழுதினார். இது 12ஆவது திருமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே கி.பி. 1139க்குப் பிறகு திருமுறை என்ற சொல்லைப் பார்த்தால், அது 12 திருமுறைகளையும் குறிக்கும் என்பதை அறியலாம்.

இந்தப் பின்னணியில் திருச்செந்தூர் அருகே உள்ள ஆற்றூர் என்னும் கிராமத்தில் உள்ள சோமநாத தேவர் ஆலயத்திலிருந்து கிடைக்கும் கல்வெட்டைப் பார்ப்போம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இக்கல்வெட்டு 1190இல் முடிசூடிய முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனுடையது. ‘பூவின் கிழத்தி’ என்னும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஆட்சி ஆண்டு 16இல் அதாவது கி.பி.1206இல் வெட்டப்பட்டது இது.

இதில், வரி ஏழிலிருந்து சொல்லப்படும் செய்தியைப் பார்ப்போம்.

“..குடநாட்டு பிரம்மதேயம் ஆற்றூர் சேந்த மங்கலமான அவனிபசேகரமங்கலத்து மகாசபையோமும் இவ்வூர் காராண்மை குடிகளோமும் உடையார் ஸ்ரீசோமநாத தேவர்க்கு திருமடை விளாகமாக பிள்ளை பஞ்சவன் பிரம்மாதிராஜர் பிள்ளையார் திருமுறை செப்பேடு கண்ட பெருமாள் திருநாமத்தால் திருவிழா வீதி ஆக தரவேணுமென்று அருளிச் செய்தபடி...”

என்று கூறிச் செல்கிறது.

பஞ்சவன் பிரம்மாதிராஜர் என்பவர் திருமுறை செப்பேடு கண்டபெருமாள் என்று அழைக்கப் படுகிறார். எனவே இவர் 12 திருமுறைகளையும் செப்பேட்டில் எழுதி ஆற்றூர் சோமநாதர் கோயிலில் வைத்தார் என்னும் செய்தியை அறிகிறோம். 12திருமுறைகளிலும் 18,906 பாடல்கள் உள்ளன. இச் செப்பேடுகள் இன்று எங்கு போயினவோ தெரியாது.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. வாளால் வழி திறந்தான்

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் அம்மன் சன்னதிக்கு எதிரிலே உள்ள நுழைவாயிலின் வடக்குச் சுவரில் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு பாடல்களாக அமைந்து பல இடங்கள் சிதைந்துள்ளன. இனிக் கல்வெட்டைப் பார்ப்போம்.

''ஸ்வஸ்திஸ்ரீ நன்றாக வாருண்டு மண்மகளை வாளால் வழி திறந்தான்... மண்ணாளும் தோள் வழுதி வாளால் வழி திறந்தான்...'' இதற்கு மேல் சிதைந்துள்ளதால் முழுமையாகப் படிக்க முடிய வில்லை. கடைசியில் ***'கொடிமாடக்(?) கடலூர் கோமான்'*** என்று முடிகிறது.

பாண்டிய மன்னன் ஒருவனுக்கு வாளால் வழி திறந்தான் என்று பெயர். அவன் மதுரைக்கு அரசன். ''நன்றாக வாருண்டு மண்மகளை வாளால் வழி திறந்தான்'' என்று சொல்லப்படுவதால் இப் பாண்டியன் ஏதோ ஒரு போரில் வெற்றி அடைந்தான் என்பதை மட்டும் அறிகிறோம். வாளால் வழி திறந்த பாண்டிய மன்னன் யார்?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

13ஆம் நுற்றாண்டின் பிற்பகுதியில் சோழர்கள் மறைந்தனர்.தமிழ்நாடு முழுதும் பாண்டியரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. பாண்டியப் பேரரசின் வலிமை, செழுமை, செல்வாக்கு ஆகிய மகோன்னத நிலைகளை அறிந்த தில்லி சுல்தானியர், பாண்டிய நாட்டைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டனர்.

சுல்தான் படையெடுப்பு!

தில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதி மாலிக் கபூர் கி.பி. 1311 மார்ச் மாதத்தில் தமிழ்நாட்டின்மீது படையெடுத்துக் கோயில்களைக் கொள்ளையடித்தான். மதுரையில் செல்வங்களைக் கொள்ளை யடித்தான். சொக்கநாதர் கோயிலுக்குத் தீயிட்டான். கொள்ளை அடித்த பொருள்களுடன் தில்லிக்குத் திரும்பினான்.

இப் படையெடுப்பைப் பற்றி முகம்மதிய வரலாற்று ஆசிரியரான அமீர் குஸ்ரு விரிவாக எழுதியுள்ளார்.

சுல்தான்களின் ஆட்சி

கி.பி. 1318ன் இறுதியில் தில்லி சுல்தான் முபாரக் ஷாவின் தளபதி குஸ்ருகானும் தமிழ்நாட்டின் மீது படையெடுத்தான். ஆனால் பாண்டியரிடம் தோற்றுப் போய் பின்வாங்கினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1323இல் தில்லி சுல்தான் முகம்மது பின் துக்ளக்கின் படைகள் மதுரையை ஆக்கிரமித்தன. 48 ஆண்டுகள் மதுரையில் சுல்தான்கள் ஆண்டனர். கி.பி.1371 இல் விஜயநகர அரசன் கம்பணஉடையார், பாண்டியர்களுக்கு உதவி செய்து சுல்தான்களை முறியடித்துத் தம் ஆட்சியை நிறுவினார். இந்தச் சரித்திரப் பின்னணியில் **வாளால்வழி திறந்தானைப்** பார்ப்போம்.

கல்வெட்டுச் சான்றுகள்

வாளால் வழி திறந்தான் என்னும் காசு 14 ஆம் நூற்றாண்டின் பல கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றது. இலுப்பூரில் உள்ள மதுரை சுல்தானின் கல்வெட்டு ஹிஜ்ஜிரா 745க்கு (கி. பி. 1345க்கு) உரியது.

மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியனின் திருமயம் கல்வெட்டின் காலம் 1342.

திருநள்ளாற்றிலிருந்து கிடைக்கும் இரண்டாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனது கல்வெட்டின் காலம் 1336.

இராஜராஜன் சுந்தரபாண்டியனின் திருவரங்குளம் கல்வெட்டின் காலம் 1324.

மாறவர்மன் ஸ்ரீவல்லபனின் நாகங்குடி கல்வெட்டின் காலம் 1321.

இக் கல்வெட்டுகள் யாவும் **வாளால் வழி திறந்தான் பணம்** என்னும் காசினைக் குறிப்பிடுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எனவே, வாளால் வழி திறந்த பாண்டியன், 1321ஆம் ஆண்டுக்கு முன்பே முடிசூடியுள்ளான் என்பதை அறிகிறோம். (வாளால் வழி திறந்தான் என்னும் காசு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை).

தொண்டை மண்டலம், நடுவில் மண்டலம் ஆகிய மண்டலங்கள் 1252-லிருந்து 1327 வரை பாண்டியரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன.

நடுவில் மண்டலத்துத் திருக்கோவிலூர் வட்டத்தில் நகர் என்னும் கிராமத்திலிருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டு நமக்குத் தேவையான செய்தியைத் தருகிறது.

> "ஸ்வஸ்திஸ்ரீ வாளால் வழி திறந்த பெருமாள்
> பராக்கிரம பாண்டிய தேவர்க்கு யாண்டு நாலாவது"

என்று தொடங்குகிறது.

இது பாண்டிய மன்னன் கோயிலுக்கு அளித்த நிவந்தத்தைக் கூறுகிறது.

பராக்கிரம பாண்டியன்

எனவே, பராக்கிரம பாண்டியன் தனது நான்காவது ஆட்சியாண்டில் வாளால் வழி திறந்தான் என்று அழைக்கப்பட்டான் என்பதை அறிகிறோம்.

இவன் 1252 க்குப்பின் 1321 க்கு முன் இருந்திருக்க வேண்டும். இக்காலகட்டத்தில் பராக்கிரம பாண்டியன் என்ற பெயரில் ஒரே ஒரு மன்னன்தான் இருந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவன் 1315 இல் முடிசூடிய சடையவர்மன்பராக்கிரம பாண்டியன் ஆவான். தனது நான்காவது ஆட்சி ஆண்டான 1319 இல் வாளால் வழி திறந்தான் என்னும் பட்டத்தைப் பெற்றான்.

போரும் தோல்வியும்

1319 அல்லது அதற்கு முன் ஒரு பெரும் போர் நடந்துள்ளது. அதில் பராக்கிரமன் எதிரிகளை வென்றுள்ளான். எனவே, வாளால் வழி திறந்தான் என்று அழைக்கப்பட்டான்.

அப்போர் எப்போது நடந்தது?

தில்லிசுல்தான் முபாரக்ஷாவின் படைத்தளபதி குஸ்ருகான் 1318ன் கடைப்பகுதியில் தமிழ்நாட்டின் மீது படையெடுத்தான். ஆறுமாதம் பாண்டியர்களுடன் போரிட்டான். ஆனால் பாண்டியரால் தோற்கடிக்கப் பட்டு அவன் பின்வாங்கினான்.

பாண்டியர்களின் வீரத்தைக் கண்டு மீண்டும் போரிடுவதில் பயனில்லை என்று உணர்ந்தான். கோயில்கள், ஹிந்து, முகமதிய வியாபாரிகளிடம் உள்ள செல்வங்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்து அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு தில்லிக்குத் திரும்பினான். இதனைத் தில்லியின் முகமதிய வரலாற்று ஆசிரியர்கள் பர்சிய மொழியில் விரிவாக எழுதியுள்ளார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வெற்றிமுகம்

இச்செய்திகளைத் தொகுத்து நோக்கினால், 1318இல் படையெடுத்த தில்லி சுல்தானின் தளபதி குஸ்ருகானைத் தோற்கடிப்பதில் சடையவர்மன் பராக்கிரமன் பெரும்பங்கேற்று வாளால் வழி திறந்தான் என்னும் பட்டத்தைப் பெற்றான் என்பதை அறியலாம்.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் மேற்குக் கோபுரத்தில் உள்ள கல்வெட்டில்,

'இக்கோபுரத்தை வாளால் விழித்துறங்கும் பெருமாளான பராக்கிரம பாண்டியன் கட்டினான்'

என்று சொல்லப்பட்டுள்ளது.

''வடிவைத்த வேல் வல்ல வையம் தொழநின்று பராக்கிரம பாண்டியன், ஆலிலைக்குள் அடங்கிய மாயன், அவனி எல்லாம் சேவில் அடக்கிய செண்பக மாறன், வேந்தர் தம்மை வேலில் அடக்கிய வையம் தொழு தென்னன்'' என்று இவன் போற்றப் படுகிறான்.

இப்பெயர்களைப்பற்றிக்கடைசியில்திருவண்ணா மலையில் பார்ப்போம். சகம் 1245 இல் (கி. பி. 1323) பராக்கிரம பாண்டியன்இக்கோபுரத்தைக் கட்டினான் என்று மதுரைத் திருப்பணி வாரம் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதுரைத் தல வரலாறு

*1323*இல் தில்லி சுல்தானியர் மதுரை மீது படையெடுத்தனர். இதனை மதுரைத் தல வரலாறு விரிவாகக் கூறுவதாவது:

" இப்படி குலசேகர பாண்டியன் முதல் வாளால் விழித்துறங்கும் பெருமாள் பராக்கிரம தேவ பாண்டிய தேவர் வரைக்கும் வெகுபாண்டி யாதிக்கம் அனுபவித்த வாளால் விழித்துறங்கும் பராக்கிரம பாண்டியரை சாலிவாகன சகாப்தம் (நடப்பு) 1246க்கு மேல் ருத்ரோத்காரி வருஷம் ஆனி மாதம் (கி. பி. 1323) வடக்கே தில்லியில் இருந்து ஆதி சுல்தானும் மலுக் நேமியான் என்பானும் வந்து பராக்கிரம பாண்டிய தேவரைப் பிடித்துக் கட்டிக் கொண்டு தில்லிக்கு அனுப்பிவித்துப் போட்டு ராச்சியத்தைக் கட்டிக் கொண்டார்கள். ருத்ரோத்காரி வருஷம் ஆவணி மாதம் முதல் குரோதன வருஷம் மூன்றுக்கு (கி. பி. 1323, 1324, 1325) ஹிமசேது பரியந்தம் துலுக்காணியமாய் மன்வந்தரமாய் ஒருவருக்கொருவர் தோற்காமல், கலாபமாயிருந்தது."

திருவண்ணாமலை கல்வெட்டு

மதுரையைத் தில்லித் துருக்கர் ஆக்கிரமித்த போதிலும் *1323*, *1324*, *1325* ஆகிய வருஷங்களில் பாண்டியரும், துருக்கரும் ஒருவருக் கொருவர் தோற்காமல் கலகமாயிருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டுகள்1325 வரை கிடைக்கின்றன. எனவே, முகமதியர் படை பராக்கிரம பாண்டியனை 1325 ன் இறுதியில் பிடித்து தில்லிக்கு அனுப்பி இருக்கவேண்டும். ஆனால், பராக்கிரமன் தில்லியிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பி வந்துவிட்டான்.

இதனைத் திருவண்ணாமலையிலிருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டு உறுதி செய்கிறது. இக்கல்வெட்டு, இரண்டாம் குலசேகர பாண்டியனின் 20ஆம் ஆட்சி ஆண்டுக் கி. பி. 1334 இல் வெட்டப் பட்டது. 'பரராமன் வையம் தொழ நின்ற, பெருமாளான பராக்கிரம பாண்டிய தேவர், பால் அபிஷேகத்திற்காகக் கோயிலுக்குப் பசுக்களை அளித்தார்' என்று சொல்லப்பட்டுள்ளது. 1334 க்குப் பிறகு பராக்கிரமன் இருந்ததாகத் தெரியவில்லை. வாளால் வழி திறந்தான் காலம் முடிவுற்றது.

★★★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. இராமன் பெயரில் பாண்டியன் காசுகள்

சோழர் தலைமை

தென்னகத்தில் 11ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு இறுதிவரை சோழ சாம்ராஜ்யம் கொடி கட்டிப் பறந்தது. சோழர்களின் ஆதிக்கத்தில் பாண்டியர் தலை தூக்க முடியாமல் திணறிக்கொண்டு இருந்தனர். இந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தவன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்.

பாண்டியர் வளர்ச்சி

கி.பி. 1219 இல் சோழநாட்டின் மீது படையெடுத்து, சோழமன்னன் மூன்றாம் இராஜராஜனை வென்று, பாண்டியர்களுக்குச் சோழர்கள் திறை செலுத்தும்படியாகச் செய்தான்.

கி.பி. 1250 இல் முடிசூடிய மாறவர்மன் விக்கிரம பாண்டியனும் அவனது தம்பியான சடையன் சுந்தர பாண்டியனும் மேலும் விரிவுபடுத்திப் பாண்டியப் பேரரசை நிறுவினார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போசள மன்னர்களைத் தோற்கடித்தனர். கொங்கு மண்டலம், கேரளா, ஈழம், சோழமண்டலம் தொண்டை மண்டலம், தெலுங்கு நாட்டின் தென் பகுதிகள் பாண்டியரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.

பாண்டியப் பேரரசு சுமார் 75 ஆண்டுகள் (கி.பி. 1324இல் மதுரை சுல்தான்கள் ஆட்சி ஏற்படும் வரை) தென்னகத்தில் வலிமையான அரசாகத் திகழ்ந்தது. நாணயங்களும் செப்பேடுகளும் வெளியிட்டனர். இக்காலக் கட்டத்தில் பாண்டிய மன்னர்கள் பலர் ஆட்சி புரிந்தனர்.

பாண்டியர் பெயர்கள்

பாண்டியப் பேரரசின் ஆட்சியில் பாண்டிய மன்னர்களுக்குச் சுந்தரன், விக்கிரமன், குலசேகரன், வீரன், பராக்கிரமன், ஸ்ரீவல்லபன் என்னும் ஆறு பெயர்களே கல்வெட்டுகளில் வரும்.

மாறவர்மன் அல்லது சடையவர்மன் என்னும் பட்டப் பெயர்களும் வரும்.

ஒரே கால கட்டத்தில் ஒரே பெயரில் பலர் ஆண்டிருப்பதால் ஆய்வில் குழப்பம் ஏற்படும்.

பாண்டியர் காசுகள்

பாண்டியர் வரலாற்றை ஆராயப் புகுமுன் எச்சரிக்கை தேவை. இந்தப் பின்னணியில் மூன்று பாண்டியர் காசுகளைப் பார்ப்போம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்னும் மன்னன் அவனி வேந்தராமன் என்று அழைக்கப் பட்டான் என்றும் இவன் பிறந்த நட்சத்திரம் உத்திரட்டாதி என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவற்றில் பஞ்சாங்கக் குறிப்புகள் இல்லாததால் இந்த மன்னன் யார் என்பது தெரியவில்லை.

நிற்க, அவனி வேந்த ராமன் என்னும் பெயர் கொண்ட பாண்டியர் காசுகளும் செப்பேடும் கிடைத் துள்ளன. காசின் முன் பக்கத்தில் அவனிவேந்தராமன் என்னும் பெயரும் மறுபக்கத்தில் பாண்டியருக்கே உரித்தான ஒரு மீன் சின்னமும் உள்ளன.

அவனி வேந்த ராமனின் கல்வெட்டுகள், செப்பேடு, செப்புக் காசுகளில் உள்ள எழுத்துகள் யாவும் 13ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதி அல்லது 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவை.

இந்த அவனி வேந்த ராமன் யார்? இவ்வினா விற்கான விடையை அறிவதற்கு 13ஆம் நூற்றாண்டில் அரசுபுரிந்த சடையவர்மன் சுந்தர பாண்டியர்களைப் பார்ப்போம்.

1. முதலாம் சடையவர்மன் சுந்தரன் கி.பி 1250 முதல் 1284 வரை ஆண்டவன். இவனது பிறந்த நட்சத்திரம் மூலம் ஆகும். எனவே இவன் அவனி வேந்தராமன் ஆக முடியாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. கி.பி. 1277இல் முடிசூடிய சடையவர்மன் சுந்தரன் 1294 வரை ஆட்சி புரிந்துள்ளான். 1278 இல் முடி சூடிய சடையன் சுந்தரன் 1301 வரை ஆட்சி புரிந்துள்ளான்.

இவர்களது பஞ்சாங்கக் குறிப்புகளுடன் கூடிய கல்வெட்டுகளில் அவனி வேந்த ராமன் என்னும் பெயரைக்காணோம். அவனி வேந்தராமன் இவர்களில் ஒருவனா என்பதும் தெரியவில்லை.

3. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் வம்சாவளியைப் பார்ப்போம்.

முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன்

1268 - 1318

சடையன் வீரபாண்டியன் கலியுகராமன் (1297 - 1342)	சடையன் சுந்தர பாண்டியன் 1303 - 1325	மகள் சடையன் சுந்தரன் கோதண்டராமன் பூச நட்சத்திரத்தில் பிறந்தவன் 1304 - 1319

வீரபாண்டிய கலியுக ராமனின் தங்கையின் மகன் கோதண்டராமனாகிய சடையன் சுந்தரன் என்பதைப் பாண்டிய குலோதயம் என்னும் வடமொழிக் காவியம் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவனி வேந்த ராமன்

குலசேகரனின் வம்சத்தினரின் விருதுப் பெயர்கள் ராமன் என்று முடிவதால், அம்மன்னனின் இரண்டாவது மகனான சுந்தர பாண்டியனுக்கு (1303 - 1325) அவனி வேந்தராமன் என்று பெயர் இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது.

இம்மன்னன் 1303 ஆனி மாதம் முடிசூடியவன். இவனே அவனி வேந்த ராமன். ஆனால் இப்பெயரில் உள்ள அதிகப்பட்ச ஆட்சியாண்டு 23 ஆடிமாதம் என்பது கி.பி. 1325 ஆடி மாதத்தில் விழுகிறது. இந்தச் சுந்தரன் குறைந்தது 1325 வரை அரசாண்டான் என்பதைக் கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன.

மாறவர்மன் ஸ்ரீவல்லபன் என்னும் பாண்டிய மன்னன் கி.பி 1308 முதல் 1342 வரை அரசாண்டவன். புதுக்கோட்டை நெடுங்காடி கல்வெட்டு, மன்னனை அவனி வேந்த ராமன் ஸ்ரீவல்லபன் என்று கூறுகிறது. அதாவது ஸ்ரீவல்லபன் அவனி வேந்தராமனின் மகன் என்பது ஸ்ரீவல்லபன் என்று கூறுகிறது. அதாவது ஸ்ரீவல்லபன், அவனி வேந்தராமனின் மகன் என்பது புலனாகிறது. இச்செய்தியை 1320இல் காண்கிறோம்.

எனவே, அவனி வேந்தராமன் என்னும் மன்னன் குலசேகரனின் இரண்டாவது மகனாகிய சடையன் சுந்தரபாண்டியனாக இருக்கலாம் (1303 - 1325) என்று கொள்ளலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காசுகளில் உள்ள உருவங்கள்

கலியுகராமன், கோதண்ட ராமன் என்னும் பெயர்களிலும் பாண்டியனரகத் காசுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் கலியுகராமன் காசில் முன் பக்கம் விஷ்ணுவின் இரு திருவடிகளும், சந்திரப்பிறையின் சின்னமும் உள்ளன. பின்பக்கம் கலியுக ராமன் என்று எழுதப்பட்டு உள்ளது.

திருச்செந்தூர் தாலுகா திருக்கோலூர் விஷ்ணு கோயில் கல்வெட்டின் காலம் கி.பி. 1413. இதில் கலியுகராமன் பணம் குறிப்பிடப்படுகின்றது. எனவே இக்காசு 1297 முதல் 1342 வரை அரசாண்ட சடையன் வீரபாண்டியனால் வெளியிடப்பட்டது என்பது வெளிப்படை.

இவன் ஸ்ரீரங்கம் கோயிலின் ஆறாம் பிர்காரத்தைக் கட்டியவன் என்றும், விஷ்ணு பக்தன் என்றும் ஸ்ரீரங்கம் கோயில் ஒழுகு வரலாறு கூறுகிறது.

கலியுக ராமன்

ஆறாம் பிர்காரத்து மதிலுக்குக் கலியுகராமனின் திருமதில் என்ற பெயர் இருந்தது.

ஸ்ரீரங்கத்தில் காணப்படும் இம்மன்னனின் கல்வெட்டுகளில், கலியுகராம சதுர்வேதிமங்கலம் என்னும் கிராமத்தைப் பிராமணர்களுக்கு மன்னன் அளித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிராமணர் தங்கள் நிலங்களை விற்பதானால் தங்களுக்குள்ளோ அல்லது ஸ்ரீரங்கப் பெருமானின் தர்சனத்து (ஸ்ரீ ராமானுஜ தர்சனத்து) பாகவதர் களுக்கோ விற்கவேண்டும் என்று மன்னன் கட்டளை யிட்டுள்ளான்.

கடவுளின் கட்டளைபோல்

ஆனால் கல்வெட்டின் வாசகம் மன்னனின் ஆணை போன்று இல்லாது ஸ்ரீரங்கப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் எழுந்தருளி இக்கட்டளையை இட்டது போன்று அமைந்துள்ளது.

ஸ்ரீரங்கத்தில் உள்ள வீரபாண்டியனின் கல்வெட்டு களில் சில, ஸ்ரீரங்கப் பெருமான் ஆணை இட்டது போன்று அமைந்துள்ளன. ஸ்ரீரங்கப்பெருமான் மகிழ்ச்சி யுடன் நம் வீரபாண்டியன் என்றும் கூறுகின்றார்.

இதனால் விஷ்ணுவின் பரம பக்தனாகிய வீரபாண்டியனே கலியுகராமன் என்னும் காசை வெளியிட்டவன் என்பதை அறியலாம். அவனுடைய காசின் ஒரு பக்கத்தில் விஷ்ணுவின் இரு திருவடிகள் இருப்பது பொருத்தம்தான். மன்னன் சந்திரகுலத்தைச் சேர்ந்ததால் பிறையின் சின்னம் உள்ளது.

கோதண்ட ராமன் காசு

கோதண்டராமன் எனும் காசில் முன்பக்கத்தில் கோதண்டராமன் என்ற பெயரும், பின் பக்கத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டியர் இலச்சினையாக இரு மீன்களும் பொறிக்கப் பட்டுள்ளன. குலசேகரனின் மகள் வயிற்றுப் பேரனும், கி.பி. 1304 முதல் 1319 வரை அரசாண்ட சடையவர்மன் சுந்தரனுமாகிய கோதண்டராமனே இக்காசை வெளியிட்டவன் என்பது கண்கூடு.

இம்மன்னன் தன் பெயரால் கோதண்டராமன் சந்தியும், தான் பிறந்த பூச நக்ஷத்திரத்தில் விழாவும் எடுத்தான் என்று பல கல்வெட்டுகள் கூறுகின்றன.

இம்மன்னன் ஸ்ரீரங்கம் அருகே கி.பி. 1313இல் கோதண்டராம சதுர்வேதி மங்கலம் என்னும் கிராமத்தை ஏற்படுத்திக், கோதண்டராம பெருமாள் என்னும் கோயிலைக் கட்டினான் என ஸ்ரீரங்கம் கல்வெட்டுகள் கூறுகின்றன.

★

மேற்கோள்கள்:

அகில இந்தியக் கல்வெட்டு ஆராய்ச்சிக் கழகத்தின் தொகுதி, 10,12,14 ஆகியவற்றில் திரு சேதுராமன் எழுதி உள்ள பரண்டியர் காலம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள். ஸ்ரீரங்கம் கல்வெட்டுத் தொகுதிகள், மத்திய அரசின் சாசன அறிக்கைகள்.

(இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள செப்புக்காசுகள் பாண்டியர் காசுகள் 'தினமலர்' ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் உள்ளன.)

***

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. காயா ரோஹணம்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் சில போர்த்துகீசிய கப்பல்கள் வியாபார நிமித்தமாகக் குஜராத்திற்கு வந்தன. அங்கே சிதைந்து கிடந்த ஓர் சிவன் கோயிலைப் போரத்துகீசியர் கண்டனர். வடமொழியில் எழுதப்பட்டு இருந்த சிலாசாசனங்களைப் போர்ச்சு கல்லுக்கு எடுத்துச் சென்று சிஸ்ட்ரா என்னும் ஊரில் உள்ள அருங்காட்சியகத்தில் வைத்தனர்.

1798ஆம் ஆண்டில் சர் சார்லஸ் வில்கின்ஸ் என்பவர் இவ் வடமொழி சிலாசாசனத்திற்கு ஆங்கிலத்தில் விளக்கம் அளித்தார். எனினும் விளக்கம் போதுமானதாக இல்லாததால் 1892இல் வடமொழியில் தேர்ச்சி பெற்ற பூஹ்லர் என்னும் ஜெர்மன் பேராசிரியர் சிலா சாசனங்களுக்கு உரிய சரியான விளக்கத்தைக் கொடுத்தார். இச்சாசனங்களே பாசுபத சைவமடத்தின் மூலபுருஷர்களைப்பற்றிக் கூறுகின்றன.

சாசனங்கள் இன்னும் போர்ச்சுகல்லில் உள்ளன. இனி, சாசனத்தில் சொல்லப்பட்டுள்ள செய்திகளைப் பார்ப்போம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாசுபத் கொள்கை

சாசனம் 13ஆம் நூற்றாண்டில் அரசுபுரிந்த சாரங்கதேவன் என்னும் மன்னனுக்கு உரியது. பாசுபத சித்தாந்தத்தை நிறுவிய லகுலீசரைப் பற்றிக் கூறுகிறது.

சந்திரசேகரரான சிவபெருமான் உலகோர் உய்வதற்காக ஸ்ரீலகுலீசர் (நகலிசர்) என்னும் பெயரில் அவதரித்தார். அவருக்குக் குசிகர், கார்கர், மித்ரர், கௌருஷ்யர் என்னும் நான்கு சிஷ்யர்கள் இருந்தனர்.

இதில் குசிகர் ஏற்படுத்திய பாசுபத சித்தாந்த மடத்தின் வழி வழி மரபில் **கார்த்திக ராசி** என்னும் சித்தாந்தி தோன்றினார். அவருடைய சிஷ்யர் பெயர் வால்மீகி ராசி; அவருடைய சிஷ்யரின் பெயர் திரிபுராந்தகர்.

இவர் சாரங்கதேவனுடைய ராஜகுரு ஆவார். கி.பி. 1250 இல் சோமநாதபுரம் என்னும் இடத்தில் ஓர் சிவன் கோயிலைக் கட்டினார். அக் கோயிலின் இடிபாடுகளைத்தான் போர்ச்சுகல்லுக்கு எடுத்துச் சென்றனர்.

பெயர்கள்

லகுலீசரைப்பற்றி இக் கல்வெட்டில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அவருடைய மடம் காரோஹனா என்னும் இடத்தில் இருந்தது. கல்வெட்டுகளிலும் வாயு புராணத்திலும் காரோணம், காயாரோஹணா, காயா. விரோஹணா, காயானிரோஹணா என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெயர்களில் அழைக்கப்பட்டது. இன்று பரோடா விற்கு அருகே கார்வான் என்னும் பெயரில் உள்ளது.

இரண்டாம் சந்திரகுப்தனுடைய கி.பி. 380க்கு உரிய கல்வெட்டு மதுராவில் கிடைத்துள்ளது. மாகேஸ்வரராகிய உதிட்டாசாரியார் எனபவர் குசிகரின் மரபு வழியில் பாசுபத மடத்தின் தலைமைப் பீடத்தின் பத்தாவது ம்டாதிபதி என்று சொல்லப் பட்டுள்ளது. இதனால் குசிகரும் அவரது குருவான லகுலீசரும் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என்பதை அறிகிறோம்.

லகுலீசர் தாபித்த பாசுபத சித்தாந்தம் பரிசுத்த மானது; புனிதமானது; ஜாதி, மத, வேறுபாடு கிடையாது. வேதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மனிதனின் ஆத்மாவே சிவபெருமான் என்றார்கள். உடலுக்கும் முக்கியத்வம் கொடுத்தனர். இயம, நியம, தாரண போன்ற அஷ்டாங்க யோகங்களைப் பரப்பினர்.

சிவ உருவம்

கையில் கபாலம் ஏந்திப் பலி கேட்கும் சுடுகாட்டுச் சிவபெருமான் முழுமுதற் கடவுள். ஐந்து முகங்களுடன் கூடிய சிவபெருமானின் இலிங்க வடிவை வணங்கினர்.

அதாவது வீரர் தாம் கவர்ந்த ஆனிரையைத் தமக்குதவிய பேர்களுக்கும் பங்கு வைத்துக் கொடுத்திருக்கின்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

பெருமானின் நான்முகங்கள் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகியவற்றைக் குறிக்கும். ஐந்தாவது முகமாகிய அகோரம் அகக் கண்ணிற்குப் புலப்படாமல் வானத்தை நோக்கியிருக்கும்.

இம்மாதிரியான சில இலிங்கங்களும் தமிழ் நாட்டில் திருவக்கரை, திருஅதிகை ஆகிய இடங்களில் காணலாம். நான்கு சிரசுகளுடன் கூடிய சிவபெரு மானின் திருமேனிகள் தஞ்சை அருகில் செந்தலை, கண்டியூர் ஆகிய ஊர்களில் உள்ளன. இவற்றைப் பிரம்மா என்பதாக இன்று வணங்குகின்றனர்.

பாசுபதப் பிரிவுகள்

பிற்காலத்தில் பாசுபத சைவத்திற்குக் காளா முகம், காபாலிகம், மஹாவிருதம் என்று கிளைகள் தோன்றின. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு மது, மாது, மாமிசம் இவைகள் ஏற்கப்பட்டதால் (வாமசாரம்) பாசுபதத்தில் கிளைவழிகள் சீரழிந்தன.

பரிசுத்தமான பாசுபதத்தின் ஒரு பிரிவுதான் இன்றைய வீரசைவம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இலிங்கபுராணத் தாக்கம்

பாசுபத சைவத்தை வளர்ப்பதற்காகச் சந்திரகுப்த விக்கிரமாதித்யன் காலத்தில் கி.பி. 400 இல் இலிங்க புராணம் எழுதப்பட்டது. இலிங்கபுராணத்தில் சொல்லப்பட்டவற்றைச் சங்ககாலத் தமிழில் காண முடியாது. ஆனால் அவற்றைத் தேவாரங்களில் காணலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமூலர் இலிங்கபுராணத்தைக் கோடிட்டுக் காட்டி உள்ளார். விஷ்ணுவும் பிரம்மாவும சிவபெருமானின் அடிமுடி தேடிய படலம் இலிங்கபுராணத்தில் முதன் முதலாகச் சொல்லப்பட்டு உள்ளது.

அப்பர்பெருமான் இலிங்கபுராணக் குறுந்தொகையில் அடிமுடி தேடிய படலத்தை எடுத்துரைக்கின்றார்.

குண்டலம், கோவணம், கட்டுவாங்கம், கரபாலம் இவைகளுடன் கபாலிக வேடத்தில் செல்லாததால் விஷ்ணுவும் பிரம்மாவும் கபாலியாகிய சிவபெருமானைக் காணமுடியவில்லை என்கிறார். மாலும் அயனும் காண முடியாத சிவபெருமானை என்னுள்ளே கண்டு கொண்டேன் என்கிறார்.

இதுதான் சிந்திக்க வேண்டிய இடம், திருநாரையூர் பதிகத்தில் இலிங்கபுராணத்தில் உள்ளான் என்கிறார்.

அஷ்டவீரம் இலிங்கபுராணத்தில் முதல் முதலில் சொல்லப்பட்டுள்ளது. இதனைத் தேவாரங்களில் காணலாம்.

இராமபிரான் இராமேஸ்வரத்தில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜித்ததாக வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் இலிங்க புராணத்தில் முதன் முதலாகச் சொல்லப் பட்டுள்ளது. இப்புராண வரலாற்றைத் தேவாரப் பாடல்களில் காண்கிறோம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இலிங்க புராணத்தில் கூறப்பட்டுள்ள புராண வரலாறுகள் எல்லாவற்றையும் விளக்கமாகத் தேவாரங்களில் காணலாம். இன்னும் நிறைய எழுதலாம். இடமின்மையால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

பாசுபத சைவத்தின் தாக்கம் தேவாரங்களில் பரவலாக உள்ளது என்னும் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

காரோணம்:

லகுலீசரால் இரண்டாம் நூற்றாண்டில் தாபிக்கப் பட்ட பாசுபத மடம் முதன் முதல் காரோணத்தில் நிறுவப்பட்டது. காயாரோஹணம், காயாவரோ ஹணம் என்பதன் சுருக்கமே காரோணம் என்பதாகும்.

காய ஆரோஹணம் என்றால், (பக்தன்) உடலுடன் மேலே (வானத்திற்கு) செல்வது என்பது பொருள்.

காய அவரோஹணம் என்றால், பக்தனுக்காக இறைவன்(மனித உருவில்) இறங்கி வருகின்றான் (அவதாரம்) என்பதாகும். மீண்டும் பிறவியில்லை என்னும் பொருளில் காயாளிரோஹணம் என்று சொல்லப்பட்டுள்ளது.

இவ்வடமொழிச் சொற்களின் சுருக்கமாகக் காரோணம் என்னும் பெயரில் தமிழ்நாட்டில் இருந்த கோயில்களைப் பார்ப்போம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ்நாட்டில் **கச்சிக் காரோணம், நாகைக் காரோணம், குடந்தைக் காரோணம்** என்று மூன்று கோயில்கள் இருந்தன. இதில் முதலாவது மறைந்து விட்டது. மற்ற இரண்டும் உள்ளன.

நாகப்பட்டினத்தில் உள்ள பாடல் பெற்ற சிவத்தலம் திருநாகைக் காரோணம் ஆகும். கும்ப கோணத்தில் மகாமகக் குளக்கரையில் வடகரையில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயமே குடந்தைக் காரோணம் ஆகும்.

சம்பந்தர் கூற்று

இக்கோயில்களுக்குப் பதிகங்கள் அருளிய சம்பந்தர், இப்பதிகங்களைப் பாடுவோர் கரையா உடலோடு வானடைவர் (காய ஆரோஹணம்) என்றும், கருவார் இடும்பைப் பிறப்பு அறுப்பர் (காய அவிரோஹணம்) என்றும் கூறுகின்றார்.

கி.பி.2ஆம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்ட லகுலீச பாசுபத தலைமைப் பீடத்தின் இடமான காரோணத்தின் பெயரைத் தாங்கித் தமிழ்நாட்டில் கோயில்கள் இருந்தன. இத்தலங்களின் சித்தாந்த விளக்கங்களை ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் தமது பதிகங்களில் எடுத்து உரைத்தார் என்பதை நோக்கவேண்டும்.

பக்தனுக்காக இறைவன் மனித உருவில் வந்து அருள் புரிந்தான் என்று சொல்லும் புராண வரலாறுகள் நிறைய உள்ளன.

திருஞானசம்பந்தரின் பதிகங்களில் கடைசிப் பாடலில் அவரது சிறப்பு முத்திரை இருக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சம்பந்தரின் பதிகங்களைப் பாடவல்லார் வானுலகத்தில் உறைவர். வானுலகு ஆள்வர், குளிர் வானத்து உயர்வர், பாரோடு விண் பரிபாலகரே, இமயவர் ஏத்த இருப்பர், உயர் வானடைவர், வானத்தில் இனிதாய் இருப்பர், வானோர் உலகத்தில் வீற்றிருப்பர் என்று பல இடங்களில் கூறுகின்றார்.

திருக்குரங்கணி முட்டம் பதிகத்தில் சம்பந்தரின் தமிழ்மாலை பாடவல்லார்க்குப் பிறவா வகை வீடே என்று சொல்லுகின்றார்.

வினையாயின நீங்கிப் போய் விண்ணவர் வியனுலகம் நிலையாக முன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே (பிறவியில்லை) என்று திருவாவடு துறைப் பதிகங்களிலும், மறுபிறவி அறுப்பர் என்று திருப்பறியலூர்ப் பதிகத்திலும் கூறுகிறார்.

திரிகோணமலைப் பாடல்களை உரைப்பவர், கேட்பவர், சுற்றத்தார் தொல்லைவினை அழித்து வானில் பொலிந்து தோன்றிடுவர் என்கிறார்.

ஞானசம்பந்தன் நவின்ற மொழி நலமிகு பத்தும் பண் இயல்பாகப் பக்தியாய்ப் பாடியும் ஆடியும் பயில வல்லோர், விண்ணவர் விமானம் கொடுவர ஏறி விண் உலகு ஆண்டு வீற்றிருப்பர் என்று திருவெண்குரு பதிகத்தில் சொல்கிறார்.

வானகம் போதல்

பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று நாயன் மார்களின் வரலாறுகள் சொல்லப்பட்டு உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவர்கள் பல சாதிகளைச் சேர்ந்தவர். சிவபெருமானின் கருணையால் உடலோடு வானடைந்ததாகச் சில நாயன்மார்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

சுந்தரரை, கரையா உடலோடு அழைத்து வர சிவபெருமான் தம்து பூதகணத்தில் ஒன்றையும் வெள்ளானையையும் அனுப்பினார். சுந்தரர் யானை மீது அமர்ந்து கயிலை சென்றார். தொடர்ந்து சேரமான் பெருமாளும் குதிரை மீது அமர்ந்து வானடைந்தார்.

திருநீலகண்டர், அவரது மனைவியார், இயற்பகை நாயனார், அவரது மனைவியார், சுற்றத்தார்கள், விறன் மிண்டர்ர், அமர்நீதி நாயனார் மற்றும் அவரது மனைவியார், புதல்வர், எறிபத்த நாயனார், காரி நாயனார் ஆகிய நாயன்மார்கள் உடலோடு திருக் கயிலை ஏகியதாகப் பெரியபுராணத்தில் சொல்லப் பட்டுள்ளது. காரைக்கால் அம்மையார் திருக்கயிலை சென்று திரும்பினார்.

ஒன்பதாந் திருமுறையில் ''களையா உடலோடு சேரமான் ஆரூரன்'' திருக்கயிலை சென்றனர் என்று பூந்துருத்திக் காட நம்பி கூறுகின்றார்.

உடலோடு வானடைய முடியுமா? (காய ஆரோஹணம்). இது விஞ்ஞான பூர்வமான கேள்வி! நியாயம் தானே! இதற்குத் தத்துவார்த்தமான விடையைத்தான் காணமுடியும்.

மனிதனே தெய்வம்

திருக்கோயில்களில் இறைவன், இறைவி மற்றும் பல தெய்வத் திருமேனிகளை வணங்குகிறோம். மயிலாப்பூர், கும்பகோணம், திருவிடை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மருதூர் ஆகிய இடங்களில் 63 நாயன்மார்களின் விக்ரஹங்களை வீதிவலமாக எழுந்தருளச் செய்து விழாக்கள் கொண்டாடுவதை இன்றும் காணலாம்.

நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் நாம் தெய்வங்களாக வணங்குகிறோம். இங்குதான் வானடையும் விந்தையைக் காணலாம். மனிதன் தெய்வமாகிறான் என்பதே இதன் பொருள்.

கோயில்களில் முதன் முதலாகத் தெய்வமாக வணங்கப்பட்ட மனிதன் சண்டிகேசுவரர்தான்.

இதனைப் பதினொன்றாம் திருமுறையில் நக்கீரர் கோபப்பிரசாதத்தில், ''மானுடனாகிய சண்டியை வானவன் ஆக்கியும்'' என்கிறார்.

பல சாதிகளைச் சேர்ந்த நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் கோயிலில் வைத்து வழிபடுவது ஏன்? பக்தியில் முக்தி அடைந்த மனிதன் தெய்வமாகிறான்.

உள்ளத்தைத் தொட வைக்கும் மிகச் சிறந்த சித்தாந்தம். இதையே திருவள்ளுவர்,

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்" (50)

என்று விளக்கமாகக் கூறியுள்ளார்.

சாதி, மத வேற்றுமை கிடையாது. மனிதனுக்கும் தெய்வத்தன்மை வரும். இவற்றை வலியுறுத்தவே மேலே சொல்லப்பட்டுள்ள புராணங்கள் எழுந்தன. ஆம் மானுடன் வானவனாகிறான் (காய ஆரோஹணம்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. இலிங்கப்புராணத் தேவர்

வடமொழியில் எழுதப்பட்ட புராணங்கள் பதினெட்டு உள்ளன.

அவை முறையே,

1. பிரம்ம	2. பத்ம	3. விஷ்ணு
4. சிவ	5. பாகவத	6. நாரதீய
7. மார்கண்டேய	8. அக்னி	9. பனிஷ்ய
10. பிரம்மவைவர்த்த	11. இலிங்க	12. வராக
13. ஸ்கந்த	14. வாமன	15. கூர்ம
16. மத்ஸ்ய	17. கருட	18. பிரும்மாண்ட

புராணங்கள் என்பன ஆகும். ஒருசிலர் சிவ புராணத்திற்குப் பதில் வாயுபுராணம் என்றும் கூறுவர்.

வடமொழியில் உள்ள இப்புராணங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்புகள் உள்ளன. மற்ற மொழிகளில் மொழி பெயர்ப்புகள் இல்லை.

இங்கே நம் கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது இலிங்க புராணமாகும். இதை எழுதியவர் கிருஷ்ண த்வைபாயன வியாசர் என்னும் மாமுனிவர் ஆவார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூலும் மன்னனும்

இலிங்க புராணம் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதல் பாகத்தில் 108 அத்தியாயங்களும், இரண்டாவதில் 55ம் உள்ளன.

இலிங்கபுராணம் எழுதப்பட்ட காலத்தில் அரசாண்ட மன்னனைப் பற்றி முதல் பாகம் 40ஆவது அத்தியாயத்தில் 23 சுலோகங்கள் உள்ளன.

இந்திய வரலாற்றில் புகழ் மிக்கவராகவும், பெருவீரனாகவும், சரித்திர நாயகனாகவும் விளங்கிய இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்ய மன்னனையே இந்தச் சுலோகங்கள் குறிப்பிடுகின்றன என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

சந்திரகுப்த விக்கிரமாதித்யன் கி.பி.380 முதல் 412 வரை அரசுபுரிந்தவன். சிவபக்தன்; பாசுபத சித்தாந் தத்தில் பற்றுக் கொண்டவன். இச்செய்திகளைக் கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன.

விக்கிரமாதித்தன் காலத்தில் இலிங்கபுராணம் எழுதப்பட்டதால் இப்புராணத்தின் காலம் கி.பி.400 என்பதை நன்கு உணரலாம்.

இலிங்கபுராணத்தில் பல செய்திகள் சொல்லப் பட்டுள்ளன. குறிப்பாகக் கீழ்க்கண்டவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபெருமானது பெருமை;

சத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், அகோரம், ஈசானம்;

சிவலிங்கத்தின் தோற்றம்; சிவபெருமானின் அவதாரங்கள்;

பிரும்மா விஷ்ணு மற்றும் தேவர்கள் சிவபெருமானைப் பூஜித்தது, அடி முடி தேடியது;

சிவபெருமானைப் பூஜை செய்யும் முறைகள், சிவபெருமானின் ஆயிரம் பெயர்கள், சிவபெருமானின் கோயில்கள், உமாமகேஸ்வரர்;

அஷ்டவீரங்கள், அஷ்டாங்க யோகம், எட்டு வகைச் சித்திகள்;

நமசிவாயத்தின் பெருமை, சிவபெருமான் சரபராக அவதரித்து நரசிம்மனின் வெறியை அடக்கியது;

அர்த்தநாரி தத்துவம், பரிசுத்தமான பாசுபத விரதத்தின் பெருமை;

ஜீவனே சிவம் என்று கூறும் பாசுபதம்;

பிரம்மனின் கபாலத்தைக் கையில் ஏந்திப் பலி (பிச்சை) ஏற்கும் பெருமான் சுடுகாட்டை இருப்பிடமாகக் கொண்டு நடனமாடும் சிவபெருமானே உலகத்தில் முழு முதல் தெய்வம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவன் எலும்புத்தலை மாலையோடு சாம்பல் பூசியவன் (பாசுபத வேடத்தான்) ஆகியவை குறிப் பிடத்தக்கவையாகும். இங்கே சொல்லப்படாத பல செய்திகளும் உள்ளன. விரிவுக்கு அஞ்சி விடுக்கிறேன்.

குஜராத் - லகுலீசர்

கி.பி.2ஆம் நூற்றாண்டில் குஜராத் மாநிலத்தில் லகுலீசர் என்னும் மகான் அவதரித்தார். இம்மகான் சிவபெருமானது 28ஆவது அவதாரம் என்றும், பாசுபத மடத்தைக் குஜராத்தில் காரோணம் என்னும் இடத்தில் நிறுவினார் என்றும், இலிங்க, வாயு புராணங்களும், கல் வெட்டுகளும் உறுதி செய்கின்றன.

காய ஆரோஹணம்,காய அவரோஹணம், காய அவிரோஹணம் என்பதன் சுருக்கமே காயாரோஹணம் அல்லது காரோணம் என்று அழைக்கப்பட்டது. இன்றும் பரோடா அருகில் கார்வான் என்னும் பெயரில் உள்ளது. பாசுபத மடமும் இருக்கின்றது.

காய ஆரோஹணம் என்றால், (பக்தன்) உடலுடன் மேலே (வானம்) செல்வது என்பது பொருளாகும்.

காய அவரோஹணம் என்றால் (பக்தனுக்காக) இறைவன் (மனித) உருவிலே இறங்கி வருகின்றார் (அவதாரம்) என்பது பொருளாகும்.

மீண்டும் பிறவி இல்லை என்ற பொருளில்-காய அவிரோஹணம்-உடல் முளைப்பதில்லை என்று சொல்லப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ் வடமொழிச் சொற்களின் சுருக்கமே காரோணம் என்று திரிந்தது.

தமிழ்நாட்டில் நுழைந்தது

கி.பி.2ஆம் நூற்றாண்டில் குஜராத் மாநிலத்தில் லகுலீசர் தாபித்த காரோணம் என்னும் பெயரில் அடிப்படையில் கி.பி.7ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலும் மூன்று காரோணங்கள் இருந்தன.

அவை முறையே, காஞ்சிபுரம் காரோணம், திருநாகைக் காரோணம், திருக்குடந்தைக் காரோணம் என்பன ஆகும். இதில் முதலாவது மறைந்துவிட்டது. மற்ற இரண்டும் இன்றும் இருக்கின்றன.

நாகப்பட்டினத்தில் உள்ள பாடல் பெற்ற சிவத்தலம் திருநாகைக் காரோணம் ஆகும்.

கும்பகோணத்தில் மகாமகக் குளக்கரையின் வடகரையில் உள்ள காசிவிஸ்வநாதர் ஆலயமே குடந்தைக் காரோணம் ஆகும்.

இக் கோயில்களுக்குப் பதிகங்கள் இயற்றிய சம்பந்தர், இப்பதிகங்களைப் பாடுவோர் கரையா உடலோடு வானடைவர் (காயஆரோஹணம்) என்றும்,

கருவார் இடும்பைப் பிறப்பு அறுப்பர் (காய அவிரோஹணம்) என்றும் கூறுகின்றார்.

பல தலங்களில் உள்ள பெருமானை நாகைக் காரோணத்தில் காணலாம். (கண்ணால் காணும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவதாரம்-காய அவரோஹணம்) என்று அப்பர் பெருமானும் தமது பதிகத்தில் கூறுகின்றார்.

கி.பி.2 ஆம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்ட லகுலீச பாசுபதத் தலைமைப் பீடத்தின் இடமான காரோணத்தின் பெயரைத் தாங்கித் தமிழ்நாட்டில் சிவத்தலங்கள் இருந்தன. இப்பெயரின் சித்தாந்த விளக்கங்களை 7ஆம் நூற்றாண்டில் சம்பந்தரும் அப்பரும் தத்தம் பதிகங்களில் எடுத்து உரைத்தனர் என்பதை ஈண்டு நன்கு நோக்க வேண்டும்.

சைவ நூல்களில் காண்க

லகுலீசரின் சித்தாந்தக் கருத்துகளையும், இலிங்க புராணத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளையும் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் காணுவதற்கு இல்லை. மாறாக, இச்செய்திகளைப் பிற்காலத்துப் பக்தி இலக்கியங்களான பன்னிரண்டு சைவத் திரு முறைகளில் காணலாம்.

இவற்றில் மிகப் பழமையானவை காரைக்கால் அம்மையாரின் பதிகங்களாகும். அடுத்துத் திருமூலர் திருமந்திரம், மூவர் முதலிகளின் தேவாரங்கள்; திருவாசகம்; திருவிசைப்பா; திருமுகப்பாசுரம்; பெரியபுராணம்-ஆகியவை இந்த வரிசையில் வருகின்றன.

உதாரணமாக, இராமபிரான் இலங்கையில் இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமேஸ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரத்தில் லிங்கம் பிரதிஷ்டை செய்தார் என்ற வரலாறு வால்மீகி இராமாயணத்தில் இல்லை. இவ்வரலாறு இலிங்கபுராணத்தில் உள்ளது. இதனை மூவர் முதலிகளின் பாடல்களில் காணலாம்.

பள்ளிகளும் கோயில்களும்

பாசுபதத்தில், தலைவனாகிய சிவபெருமான் பிரம்மாவின் கபாலத்தைக் கையில் ஏந்திப் பலி கொள்பவன். இலிங்கபுராணத்தில் கூறப்படும் இச் செய்திகள் தேவாரங்களில் எல்லாப்பதிகங்களிலும் உள்ளன.

திருமயிலைக் கபாலீஸ்வரர் கோயில், திரு மயானம் என்னும் பெயரில் உள்ள கோயில்கள் ஆகியவை பாடல் பெற்றவை என்பதையும் சிந்திக்க வேண்டும்.

திருவாலங்காட்டுப் பதிகத்தில் சுடுகாட்டையே சிவபெருமானின் கோயில் என்றும் அது பள்ளி இடம் என்றும் காரைக்கால் அம்மையார் கூறுகின்றார். ''பள்ளி இடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே'' என்பது அம்மையாரின் வாக்கு.

பள்ளி என்றால் சுடுகாடு என்று பொருள்படும். திருநனிப்பள்ளி சுடுகாடு என்கிறார் திருஞான சம்பந்தர்.

சிவதீக்ஷை பெற்ற அரசனோ, அரசியோ இறந்துவிட்டால் அவரது உடல் புதைக்கப்பட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதன்மேல் கட்டப்படும் சிவன் கோயில்களுக்குப் பள்ளிப்படை என்று பெயர்.

இக்கோயில்கள் **மகாவிரதிகள்** என்னும் **பாசுபதரால்** பராமரிக்கப்பட்டன என்பதைப் பல கல்வெட்டுகளும் உறுதிசெய்கின்றன. சுடுகாடே பள்ளி என்னும் பெயருடன் அநேக பாடல் பெற்ற தலங்கள் உள்ளன.

திருநனிப் பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, அகத்தியான் பள்ளி, மகேந்திரப்பள்ளி, காடு (சுடுகாடு) என்ற பெயரிலும் உள்ளன.

சோழர் காலங்களில் திருவொற்றியூர் சிவன் கோயில் பாசுபத மயான மடத்துத் தலைவர்களால் பராமரிக்கப்பட்டது. இம்மடத்தின் ஆசாரியர்கள் அனவைரும் **சதுரானன பண்டிதர்** என்றே அழைக்கப் பட்டனர். கோயிலில் பாசுபத சித்தாந்த நூலாகிய **சோமசித்தாந்தம்** வாசிக்கப்பட்டது.

இச்செய்திகளைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். சுடுகாட்டையும் அதன் தலைவனாகிய சிவபெருமானையும் கூறாத் தேவாரப் பதிகங்களே இல்லை எனலாம்.

பன்னிரண்டு திருமுறைகளிலும் கூறப்பட்டுள்ள செய்திகள், இலிங்க புராணத்துடன் அதிகமாக ஒத்து வருவதால் இத் திருமுறைகளில் பாசுபத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சித்தாந்தத்தின் தாக்கம் பெரிதும் பரவலாக உள்ளன என்பதை அறியலாம்.

காலப்போக்கில் அறுவகைச் சைவ சமயமும் ஒன்றாகக் கலந்தவிட்ட காரணத்தால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எல்லாமே சைவ சித்தாந்தம் என்று நினைக்கக்கூடிய அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன.

இம்மாற்றம் 14ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏற்பட்டு இருக்கலாம். இதை நான் எழுதும் காலத்தில் இக்கருத்திற்கு எதிர்ப்புகளும் சர்ச்சைகளும் ஏற்படும் என்பதை நான் அறிவேன். அவ்வாறு ஓர் எழுச்சி எழவேண்டும் என்பதே எனது அவா. இதன் அடிப் படையில் ஆய்வுகளும் உண்மை விளக்கங்களும் வெளிவரவேண்டும்.

பாசுபத சித்தாந்தம்

வடநாட்டைப் பொறுத்தவரை பாசுபதம் பல மாற்றங்களுடன் இன்றும் உள்ளது. கர்நாடகத்தில் பாசுபதம் வீரசைவமாக விளங்குகின்றது.

பாசுபதத்தில் வேதமும் ஆகமமும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஜாதி மத பேதங்கள் கிடையாது. மனிதன் தெய்வமாகிறான். 'மானுடனாகிய சண்டியை வானவன் ஆக்கிய' பெருமையை நக்கீரர் 11ஆம் திருமுறையில் கூறுகின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பல தெய்வத் திருஉருவங்கள் உள்ள சிவன் கோயிலில் தெய்வமாக வணங்கப்பட்ட முதல் மனிதன் சண்டிகேஸ்வரர்தாம். அவர் இறந்து போவதாகச் சொல்லப்படவில்லை. மாறாக அந்த உடம்புடன் அங்கேயே இருக்கின்றாராகப் பெரிய புராணம் கூறுகின்றது.

களையா உடலோடு சேரமான், சுந்தரர், காரைக்கால் அம்மையார், அமர்நீதி நாயனாரும் அவரது குடும்பத்தினரும், திருநீலகண்டரும் அவரது மனைவியாரும், ஆகியோர் கயிலைக்குச் சென்றனர் என்னும் வரலாறு காய ஆரோஹணம் என்று சொல்லப்படும் பாசுபத சித்தாந்தத்தின் மூலக் கருவாகும். இதுதான் மானுடன் வானவனாகும் விந்தை. இதைக் கூறுவது பாசுபத சித்தாந்தம்.

தலைமயிரைக் கயிறாகக் கொண்டு பஞ்சவடி என்னும் பூணூலாக அணியும் சிவபெருமான் மானக் கஞ்சாற நாயனாரின் மகளின் முடி மயிரைப் பெற்றது, சிறுத் தொண்டநாயானாரின் வரலாறு, சாதி மத பேதங்களை அகற்றிடும் முறையில் சொல்லப்படும் சிறப்பான கதைகள்.

இப்படிப் பெரிய புராணத்தில் பல கதைகள் பாசுபதத்தின் அடிப்படையில் எழுந்த காரணத்தால் பாசுபதத்தின் வாரிசான வீரசைவம் பெரிய புராணத்தை அப்படியே ஏற்றது. கன்னடத்தில் பெரிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணம் பல நூல்களில் பல காலகட்டங்களில் வெளிவந்துள்ளது.

திருவீழிமிழலைப் பதிகத்தில்,

சவம்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தரங்கு பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுவந்த வேள்வி யெல்லாங்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை (6.50.2)

என்று அப்பர்பெருமான் கூறுவதையும் சிந்திக்க வேண்டும்.

மயானக் கோயில்

காஞ்சி ஏகாம்பர ஈஸ்வரர் கோயில் கிழக்குப் பார்த்த சன்னதி. அதற்கு நேர் எதிராக வெளியே "திருக்கச்சி மயானம்" என்னும் கோயில் மேற்குப் பார்த்த சன்னதியுடன் உள்ளது.

இக்கோயிலில் முதல் குலோத்துங்க சோழனது 6ஆம் ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. இதன் காலம் கி.பி. 1076 ஆகும்.

இக்கல்வெட்டில் இக்கோயிலின் இறைவனின் பெயர் திருமயானத்தில் பிரும்மபுரத்து மகாதேவர் என்று உள்ளது. இக்கோயிலைப் பராமரிக்கும் மடத்தின் ஆசாரியர் 'திரு மயானம் உடைய பண்டிதன்' என்னும் பாசுபதர் என்று காணப்படுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துண்டுக் கல்வெட்டுகளில் அர்ச்சகரின் பெயர் திருமயானபட்டன் என்றும் உள்ளது. இதனை நேரில் சென்றும் படித்துள்ளேன். அப்பர் பெருமான் கூறும் கச்சியேகம்பத்து மயானம் என்பது இக் கோயில்தான் என்பதை நன்கு அறியலாம்.

இக்கட்டுரையின்முன்னுரையே நீண்டுவிட்டது. பின்னால் சொல்லப்போகும் செய்திகளுக்கு இம் முன்னுரை தேவைப்படுகின்றது.

இலிங்கபுராணம், லகுலீசரின் சித்தாந்தங்கள், பாசுபத சைவம் இவைகளின் தாக்கம் தேவாரத் திருமுறைகளில் பரவலாக உள்ளன என்னும் கருத்தின் ஆழத்தைத் தெரிந்து கொண்டால், பல செய்திகளின் உண்மை விளக்கங்களை அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

மாலும் அயனும் அடி முடி தேடியது

இலிங்கபுராணத்தில் முதல் பாகம் அத்தியாயம் 17இல் திருமாலும் பிரும்மாவும் அடி முடி தேடிய வரலாறு கூறப்படுகிறது.

ஒரு சமயம் படைப்புக்கள் யாவும் மறைந்தன. ஜீவராசிகள் எல்லாம் எங்கோ ஒடுங்கின. எங்கும் ஒரே இருள் கவ்வியது. பார்க்கும் இடமெங்கும் நீர்ப் பிரவாகம் வெள்ளம் போன்று காட்சி அளித்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீர்ப் பிரவாகத்தில் நடுவிலே திருமால் பள்ளி கொண்டிருப்பதைப் பிரும்மா பார்த்தார். தன்னை விடப் பெரிய தெய்வம் ஒன்று உளதோ என்று நினைத்துக் கோபத்துடன் திருமாலைப் பார்த்து, 'நீர் யார்' என்று வினவினார்.

திருமால் பள்ளிகொண்ட நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு பிரும்மாவைப் பார்த்துக் கூறலுற்றார்.

''பிரும்மாவே, நானே அகில உலகத்திற்கும் தலைவன், மகா விஷ்ணுவாகிய என்னைப் போன்று வேறு ஒரு பெரிய தெய்வம் கிடையாது'' என்றார்.

இதைக் கேட்டவுடன் பிரும்மாவிற்கும் திருமாலுக்கும் இடையே பெரிய சண்டை மூண்டது. மிகப்பெரிய தெய்வம் நீரா நானா என்ற வினாக்களை எழுப்பிச் சர்ச்சை புரியலாயினர்.

அச்சமயத்தில் அவர்களின் நடுவே மிகப்பெரிய ஜோதி, நெருப்புப் பிழம்பு இலிங்க வடிவில் தோன்றியது. ஆரம்பமும் முடிவும் அறிந்து கொள்ள முடியாத அளவில் காட்சி அளித்த அந்த நெருப்புப் பிழம்பைப் பார்த்து பிரம்மாவும் திருமாலும் நடுங்கினர்.

திருமால் கூறலுற்றார்: ''பிரும்மாவே! நாம் இந்த நெருப்பு இலிங்கத்தை ச் சோதனை செய்வோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வராகமாக (பன்றி) உருவெடுத்துக் கீழ் நோக்கிச் சென்று இந்த நெருப்பின் அடி எது என்பதை அறிந்து வருகிறேன். நீர் அன்னத்தின் உருவில் மேலே பறந்து சென்று நெருப்புப் பிழம்பின் முடி எது என்பதை அறிந்து வாருங்கள்.''

திருமாலும் பிரம்மாவும் வராகமாகவும் அன்னமாகவும் உருவெடுத்து நெருப்புப் பிழம்பின் அடி முடி தேடலாயினர். பல காலங்கள் சென்றன. திருமாலும் பிரம்மாவும் களைத்துப் போயினர்.

அப்பொழுது நெருப்புப் பிழம்பான இலிங்கத்தின் நடுவே ஓம் என்ற நாதம் கேட்டது. அங்கே சிவபெருமான் தோன்றித் திருமாலுக்கும் பிரம்மாவுக்கும் காட்சி அளித்தார். இருவரும் தம்மை விடப் பெரிய தெய்வம் சிவபெருமானே என்பதை உணர்ந்தனர். சிவபெருமானைத் துதித்து வழிபட்டனர். பெருமானின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜம் ஆகிய அமைப்புகளைக் கண்டு வணங்கினர். (சதாசிவ கோலம்).

திருமூலரின் திருமந்திரம்

திருமாலும் பிரம்மாவும் சிவபெருமானின் அடி முடி தேடிய வரலாற்றைக் கி.பி. 400இல் எழுதப்பட்ட இலிங்க புராணத்தில்தான் முதல் முதலாகக் காண்கிறோம். இவ்வரலாற்றைத் திருமூலரின் திரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தில் காணலாம். அதே தந்திரத்தில் இலிங்கபுராணம் என்னும் தலைப்பில் சிவபெருமானின் அஷ்டவீரங்கள் சில சொல்லப் பட்டுள்ளன.

அஷ்டவீரம் முதல் முதலாக இலிங்க புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பதை முன்பே கண்டோம். எனவே திருமூலரின் திருமந்திரம் 5ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு என்பதை அறியலாம். இலிங்கபுராணத்தில் கூறப்பட்டுள்ள பல செய்திகள் அப்படியே மாறுத லின்றித் திருமந்திரத்திலும் சொல்லப்பட்டுள்ளன. (இதைப் பற்றி ஒரு தனி ஆய்வே செய்யலாம்)

தேவாரங்களில் அடி முடி தேடிய வரலாறு

மிகப் பழம் பதிகமான காரைக்கால் அம்மை யாரின் அற்புதத் திருவந்தாதியில் சிவபெருமான் 'மால் அயன் காணாத பெருமான்' எனக் குறிப்பிடுகின்றார். (பாடல் 80).

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர், சம்பந்தர் பதிகங்களில் பல இடங்களில் அடி முடி தேடிய வரலாறு சொல்லப்படுகின்றது. எட்டாம் நூற்றாண்டில் அவதரித்த சுந்தரரின் பதிகங்களிலும் ஒன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த மாணிக்கவாசகரின் திருவாச கத்திலும் அடி முடி தேடிய வரலாறு சொல்லப் பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை

அப்பர் பெருமானின் பொதுப்பதிகங்களில் ஒன்றான இலிங்கப் புராணத் திருக்குறுந்தொகையில் அடி முடி தேடிய வரலாறு சொல்லப்பட்டுள்ளது. இலிங்க புராணத்திலிருந்து இவ்வரலாறு மேற்கோள் காட்டப்படுவதால் இலிங்கபுராணத் திருக்குறுந் தொகை எனப் பெயர் பெற்றது. திருமாலும் பிரம்மனும் சிவபெருமானின் அடிமுடி காணாமல் தோற்றதற்கான காரணத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார் அப்பர் பெருமான்.

திருமாலும் பிரம்மனும் வாசனை உள்ள மலர்களைக் கொய்து மலரிட்டு அருச்சிக்காமல் ஆணவம்மிகுந்து பெருமானைக் காண முயன்றார்கள்; அவ்விருவரும் சிவபெருமானைப் பூவும் நீரும் கொண்டு அபிஷேகம் செய்யாமலும் திருச்சாந்து தீட்டாதும் காண முயன்றார்கள்.

உலகங்களைக் காவல்கொள்ளும் கபாலி ஆகிய சிவபெருமானின் திருவேடத்தைக் காண்பதற்குச் சாணநீரோடு திரு அலகு கைக் கொண்டு செல்ல வில்லையே; பூக்கள் பெய்த கூடையைப் புனைந்து சுமந்து செல்லவில்லையே; சிவபெருமானைக் காண நெய்யும் பாலும் கொண்டு அபிஷேகம் செய்ய வில்லையே; கோவணம் உடுத்தி, எருக்கமாலை கொண்டு இண்டை புனைந்து வழிபடவில்லையே;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆணவத்தினால் சென்று சடைதாழ் அண்ணலாகிய சிவபெருமானைத் தத்தமில் நெருக்கிச் சென்று காண முயன்றார்.

மரங்களில் ஏறி மலர் பறித்து வரவில்லை. அபிஷேகத்திற்கு நீர் சுமந்து வரவில்லை. ஆணவம் நிரம்பினர். திருமாலும் பிரம்மனும் ஆகிய இருவரும் விழாது பெருமானைக் காண முயன்றனரே. திருநீறு பூசாமல் பெருமானை அணுகினரே. பெருமானின் திருவடிகளில் குவளைமலர்களை இட்டு வணங்க வில்லையே. திருமாலும் பிரம்மனும் ருத்திராக்க மாலை வைத்து ஊதாமலும், சிவபெருமானைக் காண முயற்சி செய்தனரே; அவ்விருவரும் தேடிக் காண முடியாத தருணத்தில் சிவபெருமான் இங்கு உற்றேன் என்று இலிங்க வடிவில் தோன்றினார்.

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகையில் அப்பர் பெருமான் கூறுவதை நன்கு கவனிக்க வேண்டும். சிவபெருமானைக் கபாலி என்று கூறுகின்றார். திருமாலும் பிரம்மனும் கோவணம் தரித்து திருநீறு பூசி, ருத்திராக்க மாலை தரித்து, கட்டுவாங்கம் கபாலம் ஏந்தி, கபாலிக (பாசுபத) வேடத்தில் சென்று முறைப்படி அர்ச்சனை செய்திருந்தால் பெருமானைக் கண்டிருப்பார்கள் என்று அப்பர் பெருமான் மறை முகமாகக் கூறுகிறார். பாசுபத சித்தாந்த பூஜாவிதி முறைகள் இவ்விடத்தில் வெளிப்படையாகச் சொல்லப்படுவதை நன்கு கவனிக்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருநாரையூர்ப் பதிகம்

ஆறாம் திருமுறையில் திருநாரையூர்ப் பதிகத்தில் "அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை, அந்தகனுக்கு அந்தகனை அளக்கலாகா எரிபுரியும் இலிங்க புராணத்து உள்ளானை..." (6.74.8) என்று அப்பர் பெருமான் கூறுவதும் நமது ஆய்வுக்கு அணி கூட்டுகிறது.

இலிங்கபுராணத் தேவர்

முதலாம் இராஜராஜசோழன் கி.பி. 985 முதல் 1014 வரை அரசு புரிந்தான். சிறந்த சிவபக்தன், தேவாரங்களைத் தொகுத்தவன். தஞ்சையில் பெரு உடையார் கோயிலைக் கட்டினான். இவனும் இவனுடைய தேவியரும் இக்கோயிலில் எழுந் தருளுவித்த தெய்வத் திருமேனிகள் ஏராளம், ஏராளம்! இவற்றில் ஒன்று இலிங்கபுராணத் தேவர் என்பதாகும். இது உற்சவமூர்த்தி. இதனைப் பற்றி இராஜராஜனின் கல்வெட்டு கீழ்க்கண்டவாறு கூறுகின்றது. (தென் இந்திய சாசனம் - தொகுதி - 2 - கல்வெட்டு எண் 44)

> "உடையார் ஸ்ரீ இராஜராஜ தேவர் தேவியார் அபிமானவல்லியார் எழுந்தருளுவித்த செப்புத் திருமேனியாவது:
>
> "பீடத்துக்கு மேல் சிரசு வரை 21 வில் ஆறு தொரை உயரமும், ஒரு முழம் 11விரல் 2 தொரை சுற்றளவும் கொண்ட இலிங்கபுராணத் தேவர் திருமேனி ஒருவர்."

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இவரோடும் கூட 12 விரல் நான்கு தொரை உயரத்திற்கு 4 கைகளோடும் கூடிய சிவபெருமானின் திருமேனி ஒருவர். இலிங்கத்துடன் சேர்த்து 7 விரல் உயரத்திற்குச் செய்யப்பட்ட 4 கைகளுடன் கூடிய பிரம்மாவின் திருமேனி ஒருவர்.

"இலிங்கத்தோடும்கூட செய்த 7 விரல் உயரத்து 4 திருக்கரங்களுடன் வராக முகத்தோடு கூடிய விஷ்ணுவின் திருமேனி ஒருவர்..."

இராஜராஜன் மாமன்னன் காலத்தில் தஞ்சைப் பெருஉடையார் கோயிலில் திருமாலும், பிரம்மனும் சிவபெருமானை வணங்குவது போன்று அடி முடி தேடிய வரலாற்றைக் குறிக்கும் வகையில் இலிங்கபுராணத் தேவர் எழுந்தருளுவிக்கப்பட்டார். இவர்உற்சவமூர்த்தி என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

சில சிவன் கோயில்களில் கர்ப்பக் கிரகத்திற்குப் பின்னால் இலிங்கபுராணத் தேவரைக் காணலாம். (கற்சிலை) இலிங்கத்தின் நடுவே சிவபெருமான் காட்சி அளிப்பார்.

இலிங்கத்தின் அடியில் இடது பக்கத்தில் வராகத்தின் உருவமும் முடியில் வலது பக்கத்தில் அன்னத்தின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். இலிங்கத்தின் இடதுபக்கத்தில் திருமாலும் வலது புறத்தில் பிரம்மாவும் சிவபெருமானை வணங்கிய நிலையில் காட்சி அளிப்பார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராஜராஜசோழன் சிவதீட்சை பெற்றவன். சிவபாதசேகரன் என்னும் தீட்சா நாமம் பெற்றவன்.

இம்மன்னன் கட்டிய தஞ்சைப் பெரு உடையார் கோயிலில் தலைமைக் குருக்களாக இருந்தவர் ஈசான சிவபண்டிதர் என்னும் பாசுபதர் ஆவார். எனவே இராஜராஜசோழனின் தேவியார் இக்கோயிலில் இலிங்கபுராணத் தேவர்க்கு உற்சவத் திருமேனி எழுந்தருளுவித்ததில் வியப்பில்லை.

இராஜ ராஜசோழன் பாசுபதத்தில் மிகவும் பற்றுக் கொண்டவன் என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

குடந்தைக்கு அருகே கொட்டையூரில் உள்ள சிவன் கோயிலில் இரண்டாம் இராஜாதி ராஜ சோழனுடைய கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. (1927 சாசன அறிக்கை எண் 241).

மன்னனுடைய 3ஆவது ஆண்டில் ரிஷப மாதம், வளர்பிறை பஞ்சமியும் பூசமும் பெற்ற சனிக்கிழமை வெட்டப்பட்டது. இதன் காலம் கி.பி. 1169 வைகாசி மாதம் 10ஆம் தேதி சனிக்கிழமை ஆகும்.

திருக்கோடீஸ்வரம் உடையார் கோயிலில் (கொட்டையூர்) அருண்மொழி நங்கை என்பவள் இலிங்கபுராணத் தேவரை எழுந்தருளுவித்தாள் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருப்புக் கோட்டை சுந்தரேசர் கோயிலில் கல்வெட்டு ஒன்று உள்ளது. இதன் காலம் கி.பி. 1224 ஆகும் (1914 சாசன அறிக்கை எண் 407). தென் இலங்கை வளஞ்சியர் சமூகத்தைச் சேர்ந்த சேகல் சேவ கங்க தேவன் என்பவன் கோயிலில் இலிங்கபுராணத் தேவரை எழுந்தருளுவித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

முடிவுரை:-

பாசுபத சித்தாந்தத்தின் பெருமையை எடுத்து உரைக்கும் பழைய புராணம் கி.பி.400இல் எழுதப் பட்ட இலிங்கபுராணம் ஆகும். இதில் சொல்லப் பட்டுள்ள செய்திகள் யாவும் பிற்காலத்துத் தேவாரத் திருமுறைகளில் காணப்படுகின்றன.

திருமாலும் பிரம்மனும்,சிவபெருமானின் அடி முடி தேடிய வரலாற்றை இலிங்கபுராணமே முதல் முதல் கூறுகின்றது. இதனை விளக்குகின்ற அப்பர் பெருமானின் பதிகத்திற்கு இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை என்று பெயர். இவ்வரலாற்றுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட தெய்வத் திருவுருவத்தை இலிங்கபுராணத் தேவர் என்று அழைத்தனர்.

சிவலிங்கத்தின் முடியில் வலப்பக்கம் அன்னமும் அடியில் இடப்பக்கம் வராகமும் பொறிக்கப் பட்டிருக்கும். சிவலிங்கத்தின் நடுவில் சிவபெருமான் காட்சி அளிப்பார். இடது பாகத்தில் திருமாலும் வலது பாகத்தில் பிரம்மாவும் சிவபெருமானை வணங்கும் கோலத்தில் காட்சி அளிப்பார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இலிங்கபுராணத் தேவரின் திருவுருவத்தைப் பல சிவன் கோயில்களில் கர்ப்பக்கிருகத்திற்குப் பின்னால் காணலாம். இத்தேவரின் திரு ஆராதனைக்காகச் சோழர்கள், பாண்டியர்கள் காலங்களில் நிவந்தங்கள் அளிக்கப்பட்டன.

இலிங்க புராணத்தேவரை இக்காலத்தில் அண்ணாமலையார் அல்லது லிங்கோத்பவர் என்று கூறுகின்றனர். இப்பெயர்கள் 14ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஏற்பட்டு இருக்கவேண்டும்.

அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னை ஆள விரும்பி என்மனம் புகுந்த
எளிமை என்றும் நான் மறக்கேன்
முன்னம் மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெரும் தடம்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே

(கருவூர்த் தேவர்)

மேற்கோள் நூல்கள்:

1. இலிங்க புராணம்
2. திருமுறைகள்
3. இந்தியத் தொல்பொருள் இலாகாவின் சாசனவெளியீடுகளும், எபிகிராபியா இண்டிகா தொகுதிகளும்.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. திருக் குடமூக்கில் மாகமகம்

'காந்தமன் என்னும் சோழ மன்னன் வேண்ட, அகத்திய முனிவர் தமது குடத்தைக் கவிழ்க்க, அதிலிருந்து பெருக்கெடுத்து வருபவளும் ஆகாய கங்கையுமாகிய காவிரிப்பாவை, சூரிய குலத் தோன்றலாகிய சோழனும் அவனது குடிமக்களும் சிறப்புடன் வாழ, ஒளிவிளக்காகத் திகழ்கிறாள்'

என்று மணிமேகலை பகர்கின்றது.

முதலாம் ஆதித்ய சோழனின் (கி.பி.871-910) திருச்செந்துறைக் கல்வெட்டு, ''தக்ஷிண கங்கா காவேரி'' என்று காவிரியைச் சிறப்பிக்கின்றது.

"அலைபுரியும் புனற்பொன்னி ஆறுடைய
சோழன் அருண்மொழி"

என்று முதலாம் இராஜ ராஜசோழனின் (கி.பி.985-1014) திருமலைக்கல்வெட்டு கூறும்.

"தென்திசை தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி ஆடை நன்னிலப்பாவை"

என்று முதல் குலோத்துங்க சோழனின் (கி.பி.1070-1122) மெய்க்கீர்த்தியும் விளக்கிச் சொல்லும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகாய கங்கை, தென்கங்கை (தக்ஷிண கங்கா) என்று சிறப்பித்துக் கூறப்படும் காவிரி வளந்தரும் நாடு **பொன்னி** நாடு என்று அழைக்கப்பட்டது. இப்பொன்னி நாடே சோழ நாடாகும்.

இச் சோழ நாடு இன்று திருச்சி, தஞ்சை, நாகப் பட்டினம் மாவட்டங்களாகக் காட்சி அளிக்கின்றது.

'சோழநாடு சோறுஉடைத்து' என்னும் பழம் பாடலுக்கு ஏற்ப மூன்றாம் குலோத்துங்க சோழனின் (1178-1218) மெய்க்கீர்த்தியும் **சுங்க மில்லாச் சோணாட்டில் சோற்றுமலை கண்டருளி** என்று சிறப்பித்துக் கூறுகிறது.

முடிகொண்ட சோழபுரம்

இன்றைய கும்பகோணத்தின் தென்மேற்கே ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ள **பழையாறை** என்னும் சிற்றூர், அன்று சோழ மன்னர்கள் முடிசூடும் நகரமாக விளங்கியது.

நந்திபுரம், பழையாறை, பட்டீசுரம், திருச்சத்தி முற்றம் ஆகிய சிற்றூர்கள் எல்லாம் ஒருங்கிணைத்து மிகப்பெரிய நகரமாகி **முடிகொண்டசோழபுரம்** என்று அழைக்கப்பட்ட காலமும் உண்டு.

இவ்வூரின் அருகில் இரண்டாம் இராஜராஜ சோழன் கி.பி. 1166இல் இராஜ ராஜேஸ்வரம் கோயிலையும் கட்டினான். இதனை ஒட்டக்கூத்தர் **தக்கயாகப் பரணியில்** புகழ்ந்து பாடியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காலத்தின் கோலத்தினால் இவ்வூர் இன்று தாராசுரம் என்று அழைக்கப்படுகிறது.

குடநாடு

இன்றைய கும்பகோணம், தேவாரகாலத்தில் (கி.பி.7ஆம் நூற்றாண்டு) குடமூக்கு என்று அழைக்கப் பட்டது. வளம் மிகுந்த அப்பகுதி முக்கோண வடிவத்தில் அமைந்திருக்கும். இதனை ஆங்கிலத்தில் டெல்டா என்றும், வடமொழியில் ''கோண மண்டலம்'' என்றும் குறிப்பிடுவார்கள். தமிழில் குடநாடு எனப்படும்.

உதாரணமாகத் தாம்பரபரணி ஆறு கடலோடு கலக்கும் டெல்டா பகுதிக்குக் குடநாடு என்று பெயர் இருந்ததை அப்பகுதியில் உள்ள கோயில்களின் கல்வெட்டுகளில் காணலாம்.

பெருந்தொகைநூலில் உள்ள ஒரு பாடல் விக்கிரம சோழனைப்பற்றிக் கூறும்போது, குடக் காவிரிநாடா அகளங்கா என்று போற்றுகின்றது.

குடமூக்கு

காவிரியின் டெல்டா பகுதியாகிய சோழநாடு முக்கோண வடிவமாய் ஒரு குடம்போன்று அமைந்து உள்ளது.

அக்குடத்தின் மூக்கில்(நுனியில்) அமைந்துள்ள நகரம் குடமூக்கு என்று பெயர் பெற்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பண்டைய இலக்கியங்களிலும், தேவாரத் திருமுறைகளிலும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களிலும் கல்வெட்டுகளிலும் இன்றைய கும்பகோண நகருக்குக் குடமூக்கு என்ற பெயரே காணப் படுகின்றது. 'ஐ' விகுதி பெற்றுக் குடந்தை (குடத்தில் அழுந்தியது) எனவும் அழைக்கப்பட்டது.

பாண்டியர் ஆதிக்கம்

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சோழர் வலிமை இழந்து, வரலாற்று ஏடுகளிலிருந்து மறைந்தனர். தமிழ்நாடு முழுவதும் பாண்டியர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. பதினான்காம் நூற்றாண்டில் டில்லி சுல்தானியரின் படையெடுப்பால் பாண்டியர் பெரும் அவதிக்குள்ளாயினர். 1323இல் டில்லி சுல்தானியர் மதுரையைப் பிடித்து 48 ஆண்டுகள் அரசு புரிந்தனர்.

பாண்டியர் மதுரையைவிட்டு வெளியேறி, கொங்குமண்டலம், சோழமண்டலம், நடுவில் மண்டலம், தொண்டைமண்டலம் ஆகிய பகுதிகளில் அரசு புரிந்தனர்.

கி.பி1371இல் விஜயநகர வேந்தர் கம்பண உடையார் மதுரையைப் பிடித்தார். சுல்தான்கள் மறைந்தனர்.

தமிழ்நாடு விஜயநகர மன்னர்களின் ஆளுகையின்கீழ் வந்தது. பாண்டியர் திருநெல்வேலிப் பகுதிக்குச் சென்றுவிட்டனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதலில் வந்த பெயர் (1385)

விஜயநகர மன்னர்கள் கன்னடியர்கள்; எனினும் நலிந்திருந்த தமிழ்க் கலாச்சாரத்திற்குப் புத்துயிர் அளித்தனர். என்ற போதிலும் சில இடங்களில் தமிழில் இருந்த பெயர்களை வடமொழியில் கொணர்ந்தனர். இவ்வூரின் பெயரான குடமூக்கு என்பதை வடமொழியில் கும்பகோணம் என்று அழைக்கலாயினர்.

கும்பகோணம் சார்ங்கபாணி கோயிலின் முன் மண்டபத்துத் தெற்குச்சுவரில் காணப்படும் கல்வெட்டு விஜயநகர வேந்தர் விருப்பண்ண உடையாருக்கு உரியது. இக்கல்வெட்டின் காலம் கி.பி.1385 ஐப்பசி மாதம் 27ஆம் தேதி புதன்கிழமை ஆகும்.

இக் கல்வெட்டில்தான் இவ்வூரின் பெயர் கும்பகோணம் என்று முதன் முதலாக வருகின்றது. எனவே இப்பெயர் 1385இல் இருந்து வழக்காற்றில் வந்தது எனக் கொள்ளலாம்.

அருணகிரியாரும் ''கும்பகோண நகர் வந்த பெருமாளே'' என்று கும்பகோணத்து முருகப் பெருமானைப் போற்றுகிறார். இதனால் அருண கிரியார் பதினான்காம் நூற்றாண்டின் கடைப் பகுதிக்குப் பின் வாழ்ந்தனர் என்பதனை அறியலாம்.

குடமூக்கு என்ற பெயர் காலவெள்ளத்தில் வழக்காற்றில் இருந்து மறைந்தது. கும்பகோணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற பெயரும் திருக்குடந்தை என்ற பெயருமே எழுத்திலும் பேச்சிலும் நிலைத்து நின்றுள்ளன.

இரண்டாம் குலோத்துங்க சோழன் கி.பி.1133 முதல் 1150 வரை ஆட்சி புரிந்தான். இம்மன்னனது அவையை முதல் மந்திரியாக அலங்கரித்த சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தை இயற்றினார். பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தரின் வரலாற்றினைச் சிறப்புடன் எடுத்துரைக்கிறார்.

திருஞானசம்பந்தர் பல திருக் கோயில்களுக்குச் சென்று பதிகங்கள் பாடி, சிவபெருமானுக்குச் செந்தமிழ் மாலைகள் பல சூட்டி மகிழ்ந்தவாறு, திருக்குடமூக்கினை வந்தடைந்தார். திருக்குடமூக்கின் கோயில், திருக்கீழ்க்கோட்டத்துக் கோயில், திருக் குடந்தைக் காரோணம் ஆகிய கோயில்களுக்கு எழுந்தருளி இறைவன் மீது பதிகங்கள் பாடினார். இதனைச் சேக்கிழார் வாயிலாகக் காண்போம்.

திருஞான சம்பந்தர் திருக்குட
மூக்கினைச் சேர
வருவார்தம் பெருமானை வன்தமிழில்
திருப்பதிகம்
உருகாநின்று உளமகிழக் குடமூக்கை
உகந்திருந்த
பெருமான்எம் இறைஎன்று பெருகு
இசையால் பரவினார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வந்தணைந்து திருக்கீழ்க் கோட்டத்து
இருந்த வான்பொருளைச்
சிந்தை மகிழ்வுற வணங்கித் திருத்
தொண்டருடன் செல்வார்
அந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப
அவரோடும்
கந்தமலர்ப் பொழில் சூழ்ந்து காரோணம்
சென்றடைந்தார்

பூமருவும் கங்கைமுதற் புனிதமாம்
பெருந்தீர்த்த
மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி
படுங்கோயில்
தூமருவும் மலர்க்கையில் தொழுது
வலம் கொண்ட ணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்
பணிந்து கண்களித்தார்.

உடலோடு வானடைய முடியுமா? (காய ஆரோஹணம்). இது விஞ்ஞானபூர்வமான கேள்வி. இதற்குத் தத்துவார்த்தமான விடையைத்தான் காணமுடியும்.

மனிதன் தெய்வமாகிறான்

திருக்கோயில்களில் இறைவன், இறைவி மற்றும் பல தெய்வத் திருமேனிகளை வணங்கு கிறோம். மயிலர்ப்பூர், கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இடங்களில் 63 நாயன்மார்களின் விக்ரஹங்களை வீதிவலமாக எழுந்தருளச் செய்து விழாக்கள் கொண்டாடுவதை இன்றும் காணலாம்.

நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் தெய்வங்களாக வணங்குகிறோம். இங்குதான் வானடையும் விந்தையைக் காணலாம். மனிதன் தெய்வமாகிறான் என்பதே இதன் பொருள்.

கோயில்களில் முதன்முதலாகத் தெய்வமாக வணங்கப்பட்ட மனிதன் சண்டிகேச்வரர்தாம். இதனைப் பதினொன்றாம் திருமுறையில் நக்கீரர் கோபப்பிரசாதத்தில்,

'மானுடனாகிய சண்டியை வானவன்
ஆக்கியும்''

என்கிறார்.

பல சாதிகளைச் சேர்ந்த நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் கோயிலில் வைத்து வழிபடுவது ஏன்?

பக்தியில் முக்தி அடைந்த மனிதன் தெய்வ மாகிறான். உள்ளத்தைத் தொடவைக்கும் மிகச் சிறந்த சித்தாந்தம். இதையே திருவள்ளுவர் ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்று விளக்கமாகக் கூறியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகா மகம்

சேக்கிழார் பெருமான் கூறுவதை நன்கு கவனிக்கவேண்டும். கங்கை முதல் புனிதமாம் பெரும் தீர்த்தம் மாமகம்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில் என்று குடந்தைக் காரோணம் கோயிலைக் குறிப்பிடுகிறார்.

மகா மகப் பெருவிழா என்றால் என்ன?

சாதாரணமாக ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதத்தில் பௌர்ணமியும் மக நக்ஷத்திரமும் சேரும் நாள் மாசிமகத் திருநாள் என்பதாக எல்லாக் கோயில் களிலும் கொண்டாடப்படும். இதற்கென முற்காலங் களில் அரசர்கள் நிவந்தங்கள் கொடுத்திருந்தனர்.

குருவாகிய வியாழன் கிரகம்(பிரகஸ்பதி) சிம்ம ராசியில் இருக்கும்போது மாசி மாதத்தில் பௌர்ணமி யும் மக நக்ஷத்திரமும் சேரும் நாள் மகாமகம் எனப்படும்.

வியாழன் ஒருமுறை சூரியனைச்சுற்றிவர 11- 8618 வருடங்கள் ஆகின்றன. எனவே மகாமகத் திருவிழா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும். (சில சமயம் 11வது ஆண்டிலும் வருவதுண்டு. இது வானசாத்திரக் கணக்கு).

திருச்சிராப்பள்ளிதிருவானைக்காக்கோவிலிலிருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டு விஜயநகரப் பேரரசின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறுநில மன்னனான தெலுங்குச் சோழன் வாலக்காமயர் அக்கலராசர் என்பவருக்கு உரியது.

"சகாப்தம் 1403-இதன் மேல் செல்லா நின்ற பிலவ சம்வச்சரத்து கும்பநாயற்று பூர்வபக்ஷத்து பௌர்ணமியும், ஆதித்த வாரமும் பெற்ற மகத்து நாள்-சிங்க பிரஹஸ்பதி மகாமக புண்ய காலத்திலே....

திருவானைக்காக் கோயிலிலிருக்கும் அகிலாண்ட நாயகியாருக்குத் தினமும் அமுது படைக்க வெண் கோண்குடி என்னும் கிராமத்தில் ஒரு வேலி நிலத்தை அக்கலராசர் தானமாக அளித்தார் என்று சொல்லப் பட்டுள்ளது.

இக்கல்வெட்டின் காலம் கி.பி.1482 மாசி மாதம் ஒன்பதாம் தியதி ஞாயிற்றுக்கிழமை. அன்று மகாமகப் புண்யகாலம். இப்புனித நாளை அக்கல்ராசர் கொண்டாடித் திருவானைக்கா கோவிலுக்கு நிவந்தம் அளித்துள்ளார்.

கிருஷ்ண தேவராயர்

விஜயநகரப் பேரரசின் சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயர் கி.பி.1500 முதல் 1529வரை ஆட்சி புரிந்தார். சென்னைக்கு வடக்கே உள்ள நாகலாபுரம் (செங்கை எம்.ஜி.ஆர்.மாவட்டம்) வேதநாராயணஸ்வாமி விஷ்ணு கோயில் இம்மன்னனின் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இக்கல்வெட்டுகளின் காலம் கி.பி.1524 தை மாதம் எட்டாம் தேதி செவ்வாய்க்கிழமையாகும்.

முன்னாளில் கிருஷ்ணதேவராயர் கோயிலுக்குச் செய்த பல தர்மங்களைக் கூறுகின்றன. முக்கியமான செய்தியை மட்டும் பார்ப்போம்.

கிருஷ்ணதேவராயர் திக்விஜயம் செய்துவிட்டு, திருவேங்கடநாதனையும் ஸேவித்து (திருப்பதி) திருவேங்கடநாதனுக்கு வேண்டின கைங்கர்யம் பண்ணிக் கும்பகோணத்துக்கு மகாமகத் தீர்த்தத் துக்குச் செல்லுகிற வழியில் அரிகண்டபுரம் கரியமாணிக்கத்து எம்பெருமான் கோயில் திருப்பணிக்கு இரண்டு லக்ஷம் பொன் கொடுத்தார் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, முன்னாளில் கி.பி.1524க்கு முன் ஒரு மகாமகம் வந்துள்ளது. அது எப்போது? கி.பி.1517இல் மாசி மாதம் 12ஆம் தேதி வெள்ளிக்கிழமை மகாமகப் பெருவிழா கும்பகோணத்தில் நடந்தது. அவ்வமயம் கிருஷ்ணதேவராயரும் புனித நீராடினார்.

மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள குத்தாலம் சொன்னவரறிவார் கோயிலிலிருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டு கிருஷ்ணதேவராயருக்கு உரியது. தாது வருஷம் மாமாங்கப் புண்யகாலத்திலே வெள்ளிக் கிழமை அரசன் செய்த தர்மங்களைக் கூறுகிறது. இக்குறிப்புகள் கி.பி.1517 மாசி மாம் 12ஆம் தேதி வெள்ளிக்கிழமையுடன் ஒத்து வருகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காவியச் செய்தி

ராயவாசகமு என்னும் தெலுங்குக் காவியம் கூறும் சுவையான செய்தியைப் பார்ப்போம்.

"கி.பி.1517 தை மாதம் 6ஆம் தேதி வெள்ளிக் கிழமை கிருஷ்ணதேவராயர் திருப்பதிக்குச் சென்று திருவேங்கடநாதனைத் தரிசித்தார்.

இரண்டு கைகளும் கூப்பிய நிலையில் தன்னைப் போன்ற பிரதிமம் ஒன்றும், அரசியார் திருமலா தேவியார், நாகலாதேவியர் பிரதிமங்கள் இரண்டும் ஆக மூன்று பிரதிமங்களைச் செம்பினால் செய்து திருப்பதிக் கோயிலில் வைத்தார். (இச்செம்புப் பிரதிமங்களை இன்றும் காணலாம்).

பிறகு கும்பகோணத்திற்குச் சென்று மாசி மாதம் 12ஆம் தேதி வெள்ளிக்கிழமை மகாமகப் புண்ய காலத்தில் மகாமகக் குளத்தில் நீராடினார்.

அச்சுதப்ப நாயக்கனும்(1572-1600),அவனது மகன் இரகுநாத நாயக்கனும்(1600-34) தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். இவ்விரு வருக்கும் கோவிந்த தீக்ஷிதர் முதல் மந்திரியாக விளங்கினார்.

திருப்பணிகள்

தீக்ஷிதரது மேற்பார்வையில் கும்பேஸ்வரர் கோயில் புதுப்பிக்கப்பட்டது.காவிரிக்கரையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மண்டபங்களும், படித்துறைகளும் கட்டப்பட்டன. பட்டீச்சுரம் சிவன்கோயில் புதுப்பிக்கப்பட்டது. குளத்தைச் சுற்றி உள்ள 16 மண்டபங்களும், படித்துறைகளும் கோவிந்த தீக்ஷிதரால் கட்டப் பட்டன.

தானங்கள் 16

புண்ணிய தீர்த்தக் கரையில் 16 விதமான தானங்கள் செய்யவேண்டும். இத்தானங்கள் முறையே பொன், பூமி, கன்னிகை. வஸ்திரம், பசு, குதிரை, காளைமாடு, அன்னம், மதன்னை, குப்ததானம், சந்தனம், முத்து, நவரத்தினம், தேன், உப்பு, பழங்கள் ஆகியனவாகும்.

இத்தானங்களை எப்படிச் செய்வது என்பதை 16 மண்டபங்களின் மேல் தளத்தில் சிற்பங்களாகக் காணலாம்.

எடைக்கு எடை பொன்

துலாபாரம் செய்வது அரசர்களுக்கு விசேஷமாகும். மகாமகக் குளத்தின் வடமேற்குக் கரையில் உள்ள பெரிய மண்டபம் துலாபார மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. தராசின் ஒரு தட்டில் மன்னர் வீற்றிருப்பார்; மற்றொரு தட்டில் எடைக்கு எடை பொன் நிறுத்தி அப்பொன்னை வாசுதேவன் சாக்ஷியாக ஹோமம் வளர்த்து, அரசியர், மந்திரி, பிரதானிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னிலையில் மன்னர் தானமாக வழங்குவார். இதனை இத் துலாபார மண்டபத்து மேல்தளத்தில் சிற்பங்களாகக் காணலாம்.

தராசின் ஒரு தட்டில் நாயக்கமன்னனும் மற்ற தட்டில் பொற்குவியலும் உள்ள சிற்பத்தைக் காணும் போது, 'அந்த நாளும் வந்திடாதா' என்று நினைப்பதில் வியப்பேதுமில்லை.

துலாபாரத்திற்காகத் தராசு தொங்கவிடுவதற்குப் பதிக்கப்பட்ட கல்லாலான கோல் இன்றும் மண்டபத்தின் மேல் தளத்தில் உள்ளது. (இதில் காணப்படும் நாயக்க மன்னன் அச்சுதப்பனா அல்லது இரகுநாதனா என்பது தெரியவில்லை).

இரகுநாத நாயக்கன் காலத்தில் கோவிந்த தீக்ஷிதர், கும்பகோணம் வேதபாடசாலையைச் சகவருடம் 1542இல் (கி.பி.1620) நிறுவினார். இப்பாடசாலை இன்றும் செவ்வனே நடந்து வருகிறது. இக்கோயிலில் இரகுநாத நாயக்கனின் சிலை உள்ளது.

வெளிநாட்டவர் சிலை

இரகுநாத நாயக்கனுக்கும் டென்மார்க் தேசத்தவர்களுக்கும் தொடர்பு இருந்தது. இதனைக் குறிக்கும் வகையில் இராமஸ்வாமி கோயிலில் டென்மார்க் தேசத்து இராணுவ அதிகாரியின் சிலையை இன்றும் காணலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புராணச் செய்தி

மக்கள் பல புண்ணிய நதிகளிலும், தீர்த்தங்களிலும் நீராடித் தங்கள் பாவங்களைக் கழுவுகிறார்கள். இப்பாவங்களைச் சுமந்துவரும் நதி தீர்த்த மாதர்கள் 12ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகக் குளத்தில் மகாமகத்தன்று நீராடி அப்பாவங்களைக் கழுவுகிறார்கள் என்பது ஐதீகம்.

அத் தீர்த்தங்களைக் குறிக்கும்வகையில் இக் குளத்தில் ஊற்றுகளும், ஊற்றுகளுடன் கூடிய 16 கிணறுகளும் உள்ளன.

அவை முறையே

கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதை, சரஸ்வதி, காவிரி, சரயு முதலிய நதிகளும்,

வாயு, பிரம்ம, குபேர, ஈசானிய, இந்திர, அக்கினி, நாக, குமரி, நிருதி, பயோக்ஷனி, தேவ, வருண, கன்யா முதலிய தீர்த்தங்களும் ஆகும்.

கும்பேஸ்வரர் கோயில் - கல்வெட்டுகள்

ஏழாம் நூற்றாண்டில் அவதரித்த திருஞான சம்பந்தரால் ''குடமூக்கின் பெருமான் எம் இறைவன்'' என்று பாடல்பெற்ற கோயில் இன்றைய கும்பேஸ்வரர் கோயிலாகும்.

பல காலகட்டங்களில் திருப்பணி செய்யப் பட்டதால் சோழர் காலக் கல்வெட்டுகளை இக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயிலில் காணுவதற்கு இல்லை. விஜயநகர மன்னர்களின் பிரதிநிதியாக இருந்த குரு ராஜ ருத்ரதேவ சோழமகாராஜனின் கல்வெட்டு உள்ளது. இதன் காலம் கி.பி.1554 ஆகும். ஆதிகும்பேஸ்வரர் கோயிலுக்கு வயலூர், ஏழாம் கட்டளைக் கிராமங் களை அளித்த செய்தியைக் கூறுகிறது.

மற்றொரு செய்தி

பக்கத்தில் உள்ள நாகேஸ்வரர் கோயிலிலிருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டு மூன்றாம் இராஜராஜ சோழனுக்கு உரியது. இதன் காலம் கி.பி.1237 பங்குனி மாதமாகும். இதில் உடையார் திருக்குடமூக்கு உடையார் கோயிலுக்குக் கொடுத்த நிலங்கள் சொல்லப் பட்டுள்ளன. இப்பெயர் திருஞான சம்பந்தரின் குடமூக்குப் பதிகத்துடன் ஒத்து வருகிறது.

வடமொழிப் பெயர்

குடமூக்கு என்னும் பெயர் கும்பகோணம் என்று மாறிய பின்பு, இறைவன் என்ற சொல் ஈசராகிக் குடமூக்கின் இறைவன் கும்பேஸ்வரர் என்று அழைக்கப்படலானார்.

திருஞானசம்பந்தர் அன்னையை வளர்மங்கை என்று இனிய தமிழில் சிறப்பிக்கின்றார். இவ்வன்னை இன்று மங்களாம்பாள் என்ற அழகிய வடமொழிப் பெயரை ஏற்றுள்ளாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவாரம், கல்வெட்டுகள் இவைகளில் கூறப் பட்டுள்ள செய்திகளைத் தொடர்பு படுத்தி உண்மை யான வரலாற்றினை அறியாத காரணத்தினால் பிற்காலத்தில் புதிய பெயர்களால் அழைக்கப் படும் கும்பேஸ்வரருக்கும், கும்பகோணத்திற்கும் பல புராணக் கதைகள் எழுந்தன.

நாகேஸ்வரர் கோயில்

திருஞானசம்பந்தர் அடியார்கள் புடைசூழ வந்து தரிசித்த திருக்கீழ்க்கோட்டம் என்னும் கோயில் இன்றைய நாகேஸ்வரர் கோயிலாகும். திருஞான சம்பந்தரின் சமகாலத்தவரான திருநாவுக்கரசர் இக்கோயிலின் இறைவனைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனார் என்று தமது பதிகத்தில் சிறப்பித்துள்ளார்.

திருநாவுக்கரசரின் பாடலுக்கேற்ப இக் கோயிலில் உள்ள நடராசப்பெருமான், சிவகாமி அம்மையின் விக்கிரகங்கள் கலை அழகு சொட்டச் சொட்ட அமைந் துள்ளன. இவை 11ஆம் நூற்றாண்டின் சோழர்களின் கலைப்பாணியைச் சேர்ந்தவை.

சோழர்களின் கல்வெட்டுகளில் இக்கோயிலின் பெயர் திருக்குடமூக்கின் திருக் கீழ்க் கோட்டம் உடையார் கோயில் என்றே சொல்லப்பட்டுள்ளது.

இக்கோயிலில் இருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டு மூன்றாம் இராஜராஜ சோழனுக்கு உரியது. இதன் காலம் கி.பி.1217 பங்குனி மாதமாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"மடந்தைபாக தேவர் திருவனத்தில் எழுந்தருளி இருந்து திரு ஓலக்கம் செய்து ஸ்ரீபுராணம் கேட்டு அருளா நிற்க"

என்று கூறிச் செல்கிறது. மடந்தைபாகத் தேவர் என்பது உற்சவ விக்கிரகத்தைக் குறிக்கும்.

இக்கோயிலுக்கு உரிய திருநாவுக்கரசரின் பாடலில் மடப்பாவை மணாளர், உமைஒருபாகர் என்று வருவதால் விக்கிரகத்தின் பெயரும் மடந்தை பாகத் தேவர் என்று அழைக்கப்படலாயிற்று. மேலும் இறைவனின் உற்சவ விக்கிரகம் எழுந்தருளியிருக்கும் காலத்து, ஸ்ரீபுராணமாகிய பெரியபுராணம் படிக்கும் வழக்கம் இருந்ததை இக்கல்வெட்டால் அறிகிறோம்.

கி.பி.1490-க்கு உரிய கோனேரிதேவ மகாராயரின் கல்வெட்டில் இக்கோயிலின் பெயர் திருகுடமூக்கு நாயனார் மடந்தைபாக நாயனார் கோயில் என்றே அழைக்கப்படுகிறது. இப்பெயர் கி.பி.1735-க்கு உரிய மராட்டியரின் செப்பேடுகளிலும் சொல்லப்பட்டுள்ளது.

உற்சவ விக்கிரகங்களின் பெயரால் கோயில் களின் பெயர்களை மாற்றம் செய்யும் வழக்கம் 14ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்டது.

சென்ற நூற்றாண்டிலிருந்து நாகேஸ்வரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இம் மாற்றத்திற்கு வரலாற்றின் அடிப்படையில் காரணம் தெரிய வில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவாரம், கல்வெட்டுகள், செப்பேடு இவைகளில் கூறப்பட்டுள்ள செய்திகளை அறியாத காரணத்தால் கோயில்களுக்குப் புதிய பெயர்கள் ஏற்படுகின்றன என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.

காரோணம்

திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமானைத் தரிசித்த பின்பு திருஞானசம்பந்தர் குடந்தை (குடமூக்கின்) காரோணம் வந்தடைந்தார். கங்கை முதல் புனிதமாம் பெரும் தீர்த்தம்; இக்கோயில் முதல் புனிதமாம் பெரும்தீர்த்தம். இக்கோயில் எத்துணை புகழ் வாய்ந்தது தெரியுமா?

மகாமகம்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில் இன்றைய மகாமகக் குளத்தின் வடகரையில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் ஆலயமே காரோணம் கோயிலாகும். இக்கோயிலில் கல்வெட்டுகள் இல்லை. பிற்காலத்துத் திருப்பணியில் சிலாசாசனப் பலகைகள் பூமிக்கு அடியில் புதைக்கப் பட்டனவாகக் கூறுகிறார்கள்.

நாகேஸ்வரர் கோயிலிலிருந்து கிடைக்கும் முதலாம் இராஜாதிராஜ சோழனின் கல்வெட்டில் (கி.பி.1054) திருக்காரோணம் உடைய மஹாதேவர்க்கும் கன்னியா பிடாரிகளுக்கும் அளித்த நிவந்தங்கள் கூறப்பட்டுள்ளன. எனவே இக்கோயிலில் கன்னிகைகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுவர் இருந்திருக்க வேண்டும். ஆம்; உண்மை யிலேயே உள்ளனர்.

10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு அடி உயரமுள்ள ஏழு கன்னிகைகளின் சிலைகள் இன்றும் உள்ளன. இத்துடன் நான்கு கைகளுடன் கூடிய பிற்காலக் கலைப்பாணியைச் சார்ந்த துர்க்கை, பார்வதியின் சிலைகளையும் சேர்த்து நவ நதிக் கன்னி கைகள் என்னும் வழிபாடு செய்து வருகின்றனர்.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. திரு அழுந்தை மாமடம்

மூவர் முதலிகளால் பாடல் பெற்ற தலங்கள் 275. அவற்றில் ஒரு தலம் மடமாகும். திருஞானசம்பந்தரின் காலத்தில் ஏழாம் நூற்றாண்டில் அது ஒரு மடமாக இருந்தது. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற அம்மடம் பிற்காலத்தில் பாடல் பெற்ற கோயிலாயிற்று. அதுதான் இன்றைய தேரெழுந்தூர் வேதபுரீசுவரர் கோயில்

தேரெழுந்தூர் மயிலாடுதுறைக்கு தென்மேற்கே சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. கோயில் ஊரின் கிழக்குப் பகுதியில் உள்ளதால் கோயில் உள்ள இடம் கீழையூர் என்று அழைக்கப்படுகிறது. கோயில் மேற்குப் பார்த்த சன்னதி.

திருஞானசம்பந்தர் இவ்வூருக்கு எழுந்தருளினார். துறவிகள் உள்ள ஒரு மடத்தைப் பார்த்தார். அம்மடத்தில் உள்ள சிவலிங்கத்தைத் தொழுது பெருமானின் மீது பதிகம் பாடினார்.

சாதி சமய வேறுபாடு அற்றமடம்

பதிகத்தில், ''அழுந்தை மறையோர் தொழுது ஏத்தும் மாமடம் மேவிய பெருமானே'' என்று எட்டு இடங்களில் போற்றுகின்றார். மறையோர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பூஜிப்பதால் இம்மடம் அந்தணர்களுக்கு உரியது என்று பொருள் கொள்பவரும் இருக்கிறார்கள். இது பொருந்தாது.

மடம் என்றால், சாதி பேதம் இல்லாத துறவிகள் இருப்பார்கள். மடத்தில் எவர் வேண்டுமானாலும் தங்கலாம். சம்பந்தர், நாவுக்கரசர், சிறுத்தொண்டர் ஆகியோர் முருக நாயனாரின் மடத்தில் தங்கியதாகப் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

திருஞானசம்பந்தர் தமது பதிகத்தில் பாடல் ஆறில், ''மறையோர் மறவாது எழும் மாமடம்'' என்று கூறுவது சிந்தனைக்கு உரியது. மறையோர் மறந்து விட்டால் மாமடம் நடக்காதா? அது நடந்துகொண்டு தான் இருக்கும்.

மடம் என்றாலே சாதி பேதம் ஏது? அந்தணர் என்றால் துறவி ஆகிவிடுகின்றாரா? அதே போல் மடத்தில் இருக்கும் துறவிகளை அந்தணர்கள் என்று கூறமுடியுமா? பாடல் நான்கில் அழுந்தையில் வசிப்பவர்கள் எம்மானே எனத் தொழும் மாமடம் எனக் கூறுகின்றார். அவ்வூரில் உள்ள மற்றவர்களும் வருகின்றனர் என்பதை இவ்விடத்தில் அழுத்தமாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

ஒரு மடத்திற்கு எவரும் செல்லலாம். வழிபாடு செய்யலாம். அந்தணர்களின் மடம், அந்தணர் அல்லா தார் மடம் என்று கொள்வது தவறு என்பதை ஏழாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூற்றாண்டிலேயே திருஞானசம்பந்தர் சுட்டிக் காட்டிவிட்டார். எனவே திருஅழுந்தையில் ஒரு மடம் இருந்தது. அதில் துறவிகள் இருந்தனர். அங்குள்ள சிவபெருமானை அந்தணர்களும், ஊர் மக்களும் தொழுது பெருமானின் அருளைப் பெற்றனர்.

அது ஒரு பொதுவான மடம். கோயில் இல்லை. மடத்தைச் சிறப்பித்ததால் இதனைத் திரு அழுந்தை மாமடம் பதிகம் எனக் கொள்வதில் தவறில்லை.

சம்பந்தர் சாதனை

வேதநெறியும், ஆகமநெறியும் சேர்ந்து ஒன்று பட்டு இந்து மதம் செழிக்கும் காலத்தில், திருஞான சம்பந்தர் தோன்றி ஊக்கமளித்தார் என்பதை மாமடப் பதிகத்தினால் அறிகிறோம்.

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்று சேக்கிழார் கூறுவதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்குச் சென்ற வரை மீண்டும் இந்து மதத்தில் சேர்த்த பெருமை திருஞானசம்பந்தருக்கே உரித்தாகும். (பாண்டிய மன்னன் நெடுமாறனாரைச் சமண சமயத்திலிருந்து இந்துமதத்தில் சேர்த்த வரலாறு காண்க). இந்து சமயத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி அதனை நடைமுறைக்கும் கொண்டு வந்தார், திருஞான சம்பந்தர் என்பது மறக்க முடியாத உண்மை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எனவே, ஒரு மடத்தின் மீது திருஞானசம்பந்தர் பதிகம் பாடியதன் உட்கருத்தை நன்கு உணரலாம். இந்து சமயம் ஒன்றுபட்டு ஓர் இயக்கமாக இருக்க வேண்டும் என்பதே அவரது நோக்கம் என்பதை எளிதில் அறியலாம்.

திருவழுந்தூரில் உள்ள வேதபுரீஸ்வரர் சிவன் கோயில் கல்வெட்டுகளைப் பார்ப்போம். இக் கோயிலின் கர்ப்பக்கிரகத்தின் நுழைவாயிலின் நிலைக்கற்களில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. இவை முதலாம் குலோத்துங்க சோழனது 34ஆம் ஆட்சி ஆண்டிலும் (கி.பி. 1104) 44ஆவது ஆட்சி யாண்டிலும் (கி.பி. 1114) வெட்டப்பட்டவை.

திருமடமுடைய மகாதேவர் கோயிலில் விளக்குகள் எரிப்பதற்காக அளிக்கப்பட்ட நிவந் தங்கள் கூறப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுகள் கருங் கல்லால் கட்டப்பட்டு இருக்கும் கர்ப்பக்கிரகச் சுவர்களில் வெட்டப்படாமல் கர்ப்ப இல்லத்தின் நுழைவாயிலில் கருங்கல் நிலைப் பலகைகளில் வெட்டப்பட்டுள்ளதால் கி.பி.1114 வரை இக்கோயில் செங்கல் தளியாக இருந்தது என்பதை அறியலாம்.

திருஞானசம்பந்தர் காலத்தில் இது ஒரு மடமாக இருந்தது. சம்பந்தரால் பாடல் பெற்ற தலமாதலால் பிற்காலத்தில் திருக்கோயில் ஆயிற்று. (எப்பொழுது திருக்கோயில் ஆயிற்று என்பது தெரியாது).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சி வரை செங்கல் தளியாய் இருந்தது. இறைவன், திருமட முடைய மகாதேவர் என்று அழைக்கப்பட்டார்.

இக்கோயிலின் கர்ப்பக்கிரகமும் முன் மண்டபமும் கருங்கல்லால் கட்டப்பட்டன. கர்ப்பக் கிரகத்துக் கல்வெட்டுகள் சோழர் காலத்தவை. இவற்றில் காலத்தால் முந்தியது இரண்டாம் குலோத்துங்க சோழனுடையது. மன்னனின் 6ஆம் ஆட்சியாண்டு, சிம்ம மாதம் தேய்பிறை த்ரதியை அஸ்வதி நக்ஷத்திரம், புதன்கிழமை ஆகிய பஞ்சாங்கக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதன் காலம் கி.பி. 1138 ஆவணி மாதம் 28 ஆம் தேதி புதன் கிழமையாகும்.

உடையார் திருமடமுடையார் கோயிலில் பணி புரிவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட மகளிர், ஆண்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கர்ப்பக்கிரகத்தில் உள்ள கல்வெட்டுகளில் இக் கல்வெட்டே பழமை யானதால் இக்கற்றளி கி.பி. 1138இல் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டப்பட்டது எனக் கொள்வதில் தவறில்லை. (முதலாம் குலோத் துங்கனின் பேரனே இரண்டாம் குலோத்துங்கன்.

இரண்டாம் குலோத்துங்கனின் மகனான இரண்டாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டுகள் இரண்டு காணப்படுகின்றன. இவ் ராஜ ராஜனின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகனான மூன்றாம் குலோத்துங்கன் கி.பி. 1178 முதல் 1218 வரை அரசாண்டவன். இம்மன்னனது கல் வெட்டுகள் 12 உள்ளன.

மன்னனின் ஆட்சியில் கோயிலுக்கு அளித்த நிவந்தங்கள் கூறப்பட்டுள்ளன. கோயிலுக்குச் சிலர் நிலம் விற்றுள்ளனர். திருமஞ்சனத்திற்காகத் தினமும் காவிரியிலிருந்து நீர் கொண்டு வருவதற்காக இரண்டு வியாபாரிகள் 1450 காசுகள் வைப்பு நிதி கொடுத்துள்ளனர்.

முன் மண்டபத்தில் இரண்டாம் குலசேகர பாண்டியனது நான்காம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. இதன் காலம் கி.பி. 1318 ஆகும்.

கோயிலுக்குச் சொந்தமான மடவிளாகத்தில் தென்னை மரங்கள் நடுவதற்குக் கோயில் தானத்தார் சம்மதித்தனர். தென்னை மரங்களிலிருந்து வரும் வருவாயில் பாதியைக் கோயிலுக்குக் கொடுத்து விடவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இக் கல்வெட்டுகளில் ஊரின் பெயர் பிரம்ம தேயம் திருவழுந்தூர் என்றும், இறைவனின் பெயர் திருமடம் உடைய மகாதேவர் என்றும், கோயிலின் பெயர் உடையார் திருமடம், உடையார் கோயில் என்றும் சொல்லப்பட்டுள்ளன. இப்பெயர்கள் திருஞானசம்பந்தரின் பதிகப்பாடல்களுடன் ஒத்து வருவதைக் கண்டு களிக்கலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேக்கிழார் கூறுவது

பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்தில், சம்பந்தப் பெருமான் பல தலங்களுக்குச் சென்றதைச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். திருவழுந் தூருக்குச் சம்பந்தர் வருகை தந்தருளியதைக் கீழ்க் கண்டவாறு எடுத்துரைக்கின்றார்.

"பலவும் ஈசர்தம் திருப்பதி பணிந்து செல்பவர் தாம்
அலை புனல் திரு அழுந்தூர் மாடக்கோயில்
அடைந்தார் (434)
மன்னு மாமடம் மகிழ்ந்தவான் பொருளினை
வணங்கிப்
பன்னு பாடலிற் பதிகஇன் னிசைகொடு பரவிப்"
(435)

திருஞானசம்பந்தர் திருவழுந்தூரில் உள்ள மாடக்கோயிலை அடைந்தார் என்று பாடல் 434 லும், பாடல் 435இல் "மன்னு மாமடம் மகிழ்ந்தவான் பொருளினை வணங்கினார்" என்றும் கூறப் பட்டுள்ளன. மாடக்கோயில் என்றால் இரண்டு தளம் கொண்ட கோயில் என்று பொருள். மேல்தளத்தில் (மாடியில்) இறைவன், இறைவி ஆகியோரது சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும்.

ஆனால், திருவழுந்தூர் கோயில் மாடக்கோயில் இல்லை. மற்ற கோயில்களைப் போல் சாதாரணக் கோயில்தான். கர்ப்பக் கிரகம் கீழேதான் உள்ளது.

இக்கோயிலை இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1138 இல் கற்றளியாகக் கட்டினான். மன்னனின் மந்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ரியான சேக்கிழார் பெருமான் அடுத்த ஆண்டில் பெரியபுராணத்தை எழுதி முடித்தார்.

எழுத்து மாற்றம்

சேக்கிழார் காலத்தில்தான் திருவழுந்தூர் கோயில் கற்றளியாகக் கட்டப்பட்டது என்பதை நன்கு அறியலாம். அவரே அக்கோயிலை 'மாடக்கோயில்' என்று சொல்வாரா? அடுத்த பாடலில் மாமடம் என்கின்றாரே?

தவறு எங்கே என்பதைக் காண்போம். பெரிய புராணம் கி.பி. 1139 இல் எழுதப்பட்டது. பல ஆண்டுகள் ஓலைச் சுவடிகளில்தான் எழுதப்பட்டு இருந்தது. சுவடிக்ள் அரித்துப் போனால் வேறு சுவடிகளில் எழுதப்படும். இப்படிச் சுவடிகளில் இருந்து எடுத்து எழுதும்போது ஏதோ ஒரு கால கட்டத்தில் தவறுதலாகத் திருவழுந்தூர் மாடக் கோயில் என்று எழுதிவிட்டனர். இத்தவறு இன்று வரை தொடர்ந்து வருகின்றது.

சேக்கிழார் பெருமான் தவறுதலாக எழுதியிருக்க மாட்டார். மூலத்தில் திருவழுந்தூர் மாமடக்கோயில் என்றுதான் இருந்து இருக்க வேண்டும். காலத்தின் கோலத்தில் மாடக்கோயில் என்று தவறுதலாக எழுதப் பட்டுவிட்டது. இனி வரும் பதிப்புகளில் திருவழுந்தூர் மாமடக்கோயில் என்றே அச்சிட வேண்டும். இத் திருத்தம் அடுத்து உள்ள மாமடம் என்ற பெயருக்கும் பொருந்தி வருகின்றது. உண்மையும் அதுதானே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

11. தில்லையில் வழிபாடு நின்றதும் மீண்டதும்

14ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் தில்லை நடராஜப் பெருமான் கோயிலில் நித்திய பூஜை முதலிய வழிபாட்டுக்கிரமங்கள் அன்னியர் படையெடுப்பால் சுமார் 60 - 70 ஆண்டுகளுக்கு நின்று போய்விட்டது என்றும் பிறகு தமிழகத்தில் விஜயநகர மன்னர்கள் ஆட்சி நிலைத்த பிறகு, தில்லையம்பலத்தில் பூஜை முதலியன மீண்டும் தொடங்கியது என்றும் தெரிவிக்கும் இரு செப்பேடுகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்விரு செப்பேடுகளும் திருப்பனந்தாள் மடத்து நூலகத்தில் மற்ற செப்பேடுகளுடன் வைக்கப்பட்டிருந்ததை நானும் தொல்லெழுத்தியல் நிபுணர் டாக்டர் கே.வி. ரமேஷும் அண்மையில் பார்வையிட்டோம்.

முதல் செப்பேடு கிரந்த எழுத்துகளிலும் இரண்டாம் செப்பேடு நாகரி எழுத்துகளிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விரூபாக்ஷன்

முதல் செப்பேட்டின் காலம் சகவருஷம் 1309. பிரபவ ஆண்டு, சைத்திர சுக்கில பிரதமை (கி.பி.1388, மார்ச் 8) என்று குறிப்பிடப்பட்டுளது. 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்னர் மகா நைவேத்தியம், அங்கரங்கபோகம் முதலான பூஜைக்கிரமங்கள் ஹேம சபாநாதர் (தில்லை நடராஜர்) ஆலயத்தில் நின்று போனதாகவும் தினமும் பால் நைவேத்தியம் மட்டுமே நடந்து வந்ததாகவும் விஜயநகர மன்னர் ஹரிஹர ராயரின் இளவரசன் **விரூபாக்ஷன்** இக் கோயிலில் மீண்டும் மகா பூஜைக் கிரமங்களை நிறுவியதாகவும் இச்செப்பேடு தெரிவிக்கிறது.

பூஜைக்காகவும், தேரோட்டத்திற்காகவும் கோயிலுக்கு நிலம் தானமாக அளிக்கப்பட்ட விவரங்களும் இச் செப்பேட்டில் அடங்கியுள்ளன.

செப்பேட்டின் இறுதியில், 'ஸ்ரீவிரூபாக்ஷ, ஸ்ரீஹரிஹர' என்று இரண்டு அரசர்களின் கையெழுத்துகளும் கன்னட மொழியில் தரப்பட்டுள்ளன.

இரண்டாவது செப்பேடு சக வருஷம் 1306, ருதிரோத்காரி ஆண்டு, பௌஷ பூர்_பக்ஷ ஞாயிறு, தலிஷ்டா நக்ஷத்திரம், மகர சங்கிரமணத்தின்போது (கி.பி.1383, டிசம்பர் 27) அளிக்கப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விஜயநகர மன்னர் இரண்டாம் ஹரிஹரராயரின் அமைச்சராகிய மூத்த தண்டநாயகன் புன்னத்தூர் என்னும் கிராமத்தைக் கோயிலுக்குத் தானமாக அளித்ததை இச்செப்பேடு குறிப்பிடுகிறது. இந்தச் சாசனம் நாகரி எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தாலும் கன்னட மொழியிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சாசன இறுதியில் அரசன் 'ஸ்ரீவிரூபாக்ஷ' என்று கையெழுத்திட்டிருக்கிறான்.

14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தில்லியில் ஆண்ட முஸ்லீம் மன்னர்களின் படைகள் முதன் முறையாகத் தமிழகத்தில் நுழைந்தன.

மதுரையில் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலத்திற்கு முஸ்லீம் சுல்தான்கள் ஆட்சி புரிந்தனர். இக்கால கட்டத்தில் தமிழகத்தில் பல கோயில்கள் சூறையாடப்பட்டு, பூஜை, விழாக்கள் நின்றுபோயின. விஜயநகர சாம்ராஜ்யத்துடன் தமிழகம் இணைந்த பிறகு கோயில்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுப் பூஜை உற்சவாதிகள் தொடங்கின.

இவ்விரு செப்பேடுகளும் இக்கால கட்டத்தைச் சார்ந்தன.

தில்லை நடராஜர் ஆலயத்துச் செப்பேடுகள் திருப்பனந்தாள் மடத்தில் எவ்வாறு உள்ளன என்பது இன்னொரு சுவையான செய்தியாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விஜயநகர ஆட்சி வீழ்ந்து நாயக்க மன்னர்கள் ஆட்சியும் நலிவுற்றுத் தமிழகத்தில் 18ஆம் நூற்றாண்டில் மீண்டும் படையெடுப்புகளும் கலகங்களும் நிகழ்ந்தபோது சிதம்பரத்திலிருந்து நடராஜரின் உற்சவ மூர்த்தியுடன் இச்செப்பேடுகளும் திருவாரூர் ஆலயத்தில் பத்திரமாக வைக்கப்பட்டன என்று திருவாரூர் ஆலயத்திலுள்ள ஒரு செப்பேடு தெரிவிக்கிறது. அங்கிருந்து பிறகு ஏதோ ஒரு சமயத்தில் இச் செப்பேடுகள் திருப்பனந்தாள் மடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கவேண்டும்.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

12. சோழர் வரலாற்றில் ஒட்டக்கூத்தர்

தஞ்சைப் பெருஉடையார் கோயிலைக் கட்டியவன் முதலாம் இராஜராஜசோழன். இராஜ ராஜனுக்குப் பிறகு மகன் இராஜேந்திரன் அரசு புரிந்தான். இவன் கங்கையும் கடாரமும் (இன்றைய மலேசிய பகுதிகள்) கொண்டவன், இவன் மறைவிற்குப் பின் இவனது புதல்வர்கள் முறை யேஇராஜாதிராஜன், இராஜேந்திர தேவன், இராஜ மகேந்திரன், வீர ராஜேந்திரன் ஆகியோர் அரசு புரிந்தனர்.

வீர ராஜேந்திரன் நோய் வாய்ப்பட்டு இருந்தான். அவனது மகன் அதிராஜேந்திரனுக்கும் வாரிசுகள் இல்லை. எனவே வீர ராஜேந்திரன் தன் சகோதரியின் மகன் குலோத்துங்கனுக்கு கி.பி.1070இல் முடி சூட்டினான். வீர ராஜேந்திரனும்,அவனது மகனும் இறந்தனர். குலோத்துங்கன் மாமன்னன் ஆனான்.

குலோத்துங்கன்

சோழர் வரலாற்றில் இவன் முதல் குலோத்துங்கன் என்று அழைக்கப்படுகிறான். இவனது தந்தை வேங்கி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாட்டு இராஜராஜனாவான். தந்தை வழியில் கீழைச் சாளுக்கிய நாட்டவன்; தாய் வழியில் சோழன்; தந்தை வழியில் இவனுக்குத் தெலுங்கு நாட்டுத் திராட்சா ராமாவின் பீமேஸ்வரர் குல தெய்வம். இக்கோயில் தட்சயக்ஞத்தைப் பின்னணி யாகக் கொண்டது. தாய்வழியில் சோழனுக்கு சிதம்பரம் நடராஜர் குலதெய்வம்.

திராட்சா ராமாவின் பீமேஸ்வரரை இனி கீழே 1173இல் பார்ப்போம்.

முதற் குலோத்துங்கன் கி.பி. 1070 முதல் 1122 வரை அரசு புரிந்தான். இவனது கலிங்கத்து வெற்றியைப் போற்றும் வகையில் செயங்கொண்டார் குலோத்துங்கனைப் புகழ்ந்து, கலிங்கத்துப் பரணி இயற்றினார். சுங்க வரியை நீக்கியதால் சுங்கம் தவிர்த்த சோழன் என்று இவன் அழைக்கப்பட்டான்.

ஒட்டக்கூத்தர்

குலோத்துங்கனின் மகன் விக்கிரமசோழன் 1118இலிருந்து 1135வரை அரசு புரிந்தான். இவனது அவைக்களத்துப் புலவர் ஒட்டக் கூத்தர், அரசனைப் போற்றி விக்கிரம சோழன் உலாவை இயற்றினார்.

விக்கிரம சோழனின் மகன் இரண்டாம் குலோத்துங்கன் 1133 முதல் 1150 வரை அரசு புரிந்தான். இவனது காலத்தில் சேக்கிழார் பெருமான் 1139இல் பெரிய புராணத்தை எழுதி முடித்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவைக்களப் புலவரான ஒட்டக் கூத்தர் குலோத்துங்க சோழன் உலாவையும், குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழையும் இயற்றினார்.

இரண்டாம் குலோத்துங்கனின் மகன் இரண்டாம் இராஜராஜன் 1146லிருந்து 1173 வரை அரசு புரிந்தான். அவைக்களப் புலவரான வயது முதிர்ந்த ஒட்டக் கூத்தர், மன்னனைப் போற்றி இராஜராஜ சோழன் உலாவை இயற்றினார்.

தாராசுரம்

இராஜராஜன் இராஜராஜபுரம் என்னும் நகரை கி.பி.1160இல் எடுப்பித்தான். தன் பெயரால் ராஜ ராஜேஸ்வரம் சிவன் கோயிலையும் கட்டினான். கலை அழகு மிகுந்த இந்தக் கோயிலில் தனது தந்தையார் காலத்தில் இயற்றப்பட்ட பெரிய புராணத்தைக் கல்லில் சிற்பங்களாக வடித்தான். இராஜராஜபுரம் கால வெள்ளத்தில் ராராசுரமாகி... மராட்டியர் காலத்தில் தாராசுரமாகியது. இது கும்பகோணத்திற்கு மேற்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. இராஜ ராஜேஸ்வரம் தனது சரித்திரப் பின்னணியை இழந்து இப்பொழுது அய்ராவதேஸ்வரர் கோயில் என்று அழைக்கப் படுகிறது.

ஒட்டக்கூத்தர் கி.பி.1173இல் தக்கயாகப் பரணியை இயற்றினார். இதில் ராஜராஜனையும் அவனால் எடுப்பிக்கப்பட்ட இராஜேஸ்வரம் கோயில் ஆகிய இரண்டையும் புகழ்ந்து கூறுகிறார். இக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் இப்பெயர்களையே காணலாம்.

தக்கயாகப் பரணியில் ஒட்டக்கூத்தர் கூத்தனூர் சரஸ்வதி தேவியைப் போற்றுகின்றார். இச் சரஸ்வதி தேவியை எழுந்தருளுவித்தவன் கூத்தரின் பேரனான கவிப்பெருமான் ஒவ்வாத கூத்தனானான்.

ஒட்டக் கூத்தர் 1173க்குப் பின் 1182க்கு முன் இறந்தார்.

உரிமை மாற்றம்

கி.பி.1166 இராஜராஜன் நோய்வாய்ப்பட்டான். தனது இரண்டு மகன்களும் சிறுவர்களாக இருந்ததால் தனது சகோதரியின் மகன் இராஜாதிராஜனுக்கு முடிசூட்டினான்; 1173இல் இறந்தான். இராஜாதி ராஜன் தன் மாமனின் மகன்களுக்குப் பாதுகாவலனாக இருந்து கி.பி.1178இல் மாமனின் இரண்டாவது மகனான வீர ராஜேந்திரனுக்கு முடி சூட்டினான். இவனே பிற்காலத்தில் மூன்றாம் குலோத்துங்கன் என்னும் பெயரில் 1218வரை அரசு புரிந்தான்.

இராஜாதிராஜனும் குலோத்துங்கன் என்ற பெயரில் 1218வரை அரசு புரிந்தான்.

இராஜதிராஜனும் குலோத்துங்கனும் 4 ஆண்டுகள் இணைந்து அரசு புரிந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராஜாதி ராஜனும் தனது கடமையை முடித்து 1182இல் ஆந்திரம் சென்று 1212இல் மறைந்தான். குலோத்துங்கன் மாமன்னனாகி 1218இல் மறைந்தான்.

இராஜாதிராஜனைப் போற்றும் வகையில் 1182இல் சங்கரசோழன் உலா இயற்றப்பட்டது. இவ்வுலாவில் பாட்டுடைத் தலைவனான இராஜாதி ராஜனை உலா, சங்கரன் என்னும் வீர சைவப் பெயரில் அழைக்கிறது.

சரித்திர நிகழ்ச்சிகள் கல்வெட்டுகளின் துணை கொண்டு இவனது மாமனான இராஜராஜன் சங்கமன் என்ற வீர சைவப் பெயரில் அழைக்கப்பட்டான் என்பதை அறியலாம்.

சங்கரசோழன் உலாவின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

இலங்கையை வென்றவன்

மூன்றாம் குலோத்துங்கனைப் போற்றும் வகையில் கி.பி.1217இல் குலோத்துங்க சோழன் கோவை இயற்றப்பட்டது. குலோத்துங்கன் இலங்கை மீது படையெடுத்து இலங்கை மன்னன் ஒருவனைக் கொன்றுவிட்டான். இதனைக் குறிப்பிடும் கோவை, இராவணனைக் கொன்ற குலோத்துங்கன் என்று நயம்படக்கூறும். இவனது கல்வெட்டுகளும் ''இவன் இலங்கையர் கோன் தலை அரிந்த திருநெடுமால்'' என்று கூறுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மரபுப் பட்டியல்

இதுவரை சொல்லப்பட்ட சரித்திர நிகழ்ச்சிகளைக் கீழே உள்ள வம்சாவளியில் காண்போம்.

முதற் குலோத்துங்கன் 1070 - 1122
(அதிக காலம் ஆண்டவன்)
செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி
விக்கிரம சோழன் 1118 - 1135
ஒட்டக்கூத்தரின் விக்கிரம சோழன் உலா
இரண்டாம் குலோத்துங்கன் 1133 - 1150
சேக்கிழார் பெரிய புராணம் இயற்றினார் (1139)
ஒட்டக்கூத்தரின் குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், குலோத்துங்க சோழன் உலா.
இரண்டாம் இராஜராஜன் 1146 - 1173 (சங்கமன்)
ஒட்டக்கூத்தரின் ராஜராஜசோழன் உலா.
தக்கயாகப் பரணி
மூன்றாம் குலோத்துங்கன் 1178 - 1218
குலோத்துங்க சோழன் கோவை.
மகள் நெறியுடையப் பெருமா.
இரண்டாம் இராஜாதி ராஜன் (சங்கரன்)
சங்கர சோழன் உலா.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கவிச் சக்கரவர்த்தி

ஒட்டக் கூத்தர் மூன்று சோழ மன்னர்களின் அவைக்களப் புலவராக இருந்தார்; வீரசைவம் தழுவியவர். 'குடந்தை பெரிய மடத்து வீர மாகேச்வரர் வாழியவே' என்று தக்கயாகப் பரணியில் *(1173)* வீரசைவ மடத்தைப் போற்றுகின்றார்.

பெரிய மடம் இன்றும் உள்ளது. இம் மடத்தின் வீரசிங்காதனப்புராணம் கூத்தர் காலத்துச் சோழனைச் சங்கமன் என்று கூறுகிறது. சங்கமன் என்ற வீரசைவப் பெயர் இரண்டாம் ராஜராஜனுக்கு உரியது என்பதைச் சங்கர சோழன் உலா உறுதிப்படுத்துகிறது.

மருமகன் இராஜாதிராஜனும் சங்கரன் என்னும் வீர சைவப் பெயரில் அழைக்கப்படுகிறான். இதனால் இவ்விரு சோழ மன்னர்களும் வீர சைவத்தில் பற்றுக் கொண்டவர்கள் என்பதை அறியலாம்.

ஒட்டக்கூத்தர் 'தக்கயாகப்பரணி'யில் சிவபெருமான் இராஜராஜபுரத்தில் எழுந்தருளினார் என்கிறார். இராஜராஜேஸ்வரம் கோயிலின் அன்னையை மூல நாயகி என்று குறிப்பிடுகின்றார்.

இராஜராஜேஸ்வரம் கோயிலுக்கு (தாராசுரம்) ஒரு சரித்திரப் பின்னணியும் உள்ளது. தக்கயாகப் பரணி பாடல் 774இல் ஒட்டக்கூத்தர் அதனைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"பிரட்டனையே பட்டங் கட்டவிழ்த்துப்
பேர் ஏழரை இலக்கம் புரக்க
இரட்டனையே பட்டங்கட்டி விட்ட
இராச கம்பீரனை இராஜராஜனை வாழ்த்தினவே."

மேலே உள்ள பாடலால் இராஜராஜன் மேலைச் சாளுக்கியர்களின் அரசியலில் தலையிட்டான் என்பதை அறியலாம். மேலைச் சாளுக்கியர்களின் மன்னனான மூன்றாம் தைலா என்பவன்கல்யாணி நகரில், அரசு புரிந்துகொண்டு இருந்தான்.

கலசூரி மன்னர்கள்

கலசூரி அரசர்கள் 1149இல் தைலாவை விரட்டி விட்டுக்கல்யாணியைப் பிடித்துக் கொண்டு 20 ஆண்டுகளுக்கு அரசு புரியலாயினர்.

மூன்றாம் தைலாவின் மகனான நான்காம் சோமேஸ்வரன் கர்நாடகத்தின் தென்பகுதியில் ஒளிந்துகொண்டான். அப்பொழுது கல்யாணியில் அரசு புரிந்துகொண்டிருந்த கலசூரி அரசனின் பெயர் பிஜ்ஜலன் என்பதாகும்.

சோமேஸ்வரன், பிஜ்ஜலனை விரட்டி விட்டு மீண்டும் தனக்குரிய கல்யாணியின் சிம்மாதனத்தில் ஏறும் தருணத்தை எதிர்பார்த்து இருந்தான். இதற்காக அவன் இரண்டாம் இராஜராஜ சோழனின் உதவியை நாடினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆந்திராவில் வேங்கி நாட்டில் வெளநாட்டு மன்னனான இராஜேந்திர சோட கொங்கன் என்பவன் இரண்டாம் இராஜராஜ சோழனுக்கு உட்பட்டவனாக இருந்தான். இராஜராஜனின் ஆணையின் பேரில் இராஜேந்திர சோடன், கலசூரி மன்னர்களுடன் போரிட்டான்.

கோசர்லகோட்டா என்னும் இடத்தில் மிகப் பெரும் சண்டை நடந்தது. கலசூரி மன்னனின் தளபதியான சாவண்டனை இராஜேந்திர சோடன் கொன்றுவிட்டான்.

மேலைச் சாளுக்கிய மன்னன், நான்காம் சோமேஸ்வரனை மீண்டும் கல்யாணியின் அரியணையில் ஏற்றினான்.

D Ô˜ Ææá V eÐ ® å கேயுரபாகுசரிதமு என்றும் தெலுங்குக் காவியத்திலும் இராஜேந்திர சோடனின் கல்வெட்டுகளிலும் காணலாம். இந்நிகழ்ச்சிகள் 1169இல் நடந்தன.

சாளுக்கியர் தொடர்பு

புரட்டனாகிய கலசூரி மன்னனை நீக்கிவிட்டு இரட்டனாகிய மேலைச்சாளுக்கிய மன்னனுக்குப் பட்டம் கட்டிவிட்ட இராஜகம்பீரன் என்று ஒட்டக் கூத்தர் கூறுவதால் தக்கயாகப் பரணியின் காலம் 1169க்கு பின் என்று கொள்ளலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதல் குலோத்துங்க சோழனின் (கி.பி.1070) காலத்திலிருந்து தஞ்சை சோழ அரசர்கள் சாளுக்கிய சோழர்கள் எனப்பட்டனர்.

சோழர்களுக்கும் வேங்கி நாட்டு அரசர்களுக்கும் இடையே மணவினைத் தொடர்பு இருந்தது. வேங்கி நாட்டவருக்கு வேங்கி நாட்டில் உள்ள திராட்சா ராமா எனப்படும். எனப்படும் கோயிலின் இறைவன் பீமேஸ்வரர் குலதெய்வமாகும். இது சோழர்களின் வேங்கி குல மரபுப்படி அமைந்த தாகும்.

இக்கோயிலுக்குரிய புராணத்தில், சிவபெருமான், புரட்டனாகிய தட்சனனை அடக்கித் தேவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் எனக் கூறப் பட்டுள்ளது.

இவ்வரலாறு தட்சயக்ஞம் என்னும் புராணத்தை அடிப்படையாகக் கொண்டது. (தட்சயக் கிராமம் திராட்சா ராமாவாயிற்று.) இப்புராணத்தையே தக்கயாகப்பரணி என்பதாக ஒட்டக்கூத்தர் எழுதி யுள்ளார். மேலே சொல்லப்பட்டுள்ள பாடலில் அவர் மறைமுகமாகக் கூறுவதாவது:

சிவபெருமான் தனது பிரதிநிதியாகிய வீரபத்திரரைக் கொண்டு தட்சனை அடக்கித் தேவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வெற்றிக்களிப்புக் கொண்டார். அதே போன்று இராஜராஜசோழன் தனது பிரதிநிதி இராஜேந்திர சோடனை ஏவிப், புரட்டர்களாகிய கலசூரி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரசர்களை ஒழித்து, இரட்டர்களாகிய சாளுக்கியர்களுக்கு அடைக்கலம் அளித்தான்.

ஒட்டக்கூத்தர், புராண வரலாறு மூலம் 'கீழைச் சாளுக்கியருக்கும் சோழர்களுக்கும் இடையே சிவபெருமான் இராஜராஜபுரத்து இராஜராஜேஸ்வரத்தில் வெற்றிக் களிப்புடன் எழுந்தருளினார்' என நயம்படக் கூறிச் சரித்திர நிகழ்ச்சிகளை நம்முன் வைக்கின்றனர்.

தக்கயாகப் பரணியின் பாட்டுடைத் தலைவனான வீரபத்திரரைத் தாராசுரம் கோயிலில் காணலாம். 1173இல் இராஜராஜன் மதுரை மீது படையெடுத்து வெற்றி கொண்டான். இதனைத் தக்கயாகப் பரணி கூறுவதால் இதன் காலம் 1173 என்பதாகும்.

ஒட்டக்கூத்தர் சமாதி?

தாராசுரம் கோயிலின் பின்புறத்தில் இடர்ப்பாடுற்ற நிலையில் வீரபத்திரர் கோயில் உள்ளது. இங்கு ஒட்டக்கூத்தர் அடக்கம் செய்யப்பட்டதாய்க் கூறுவர். கல்வெட்டுகள் பொறிந்து உள்ளன. எனினும் சிதைந்த கல்வெட்டுகளின் எழுத்து அமைதி கோயில் காலம் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பதை உறுதி செய்கிறது.

கர்ப்பக்கிரகத்தில் வீரபத்திரர் உள்ளார். தக்கயாகப் பரணியின் பாட்டுடைத் தலைவர் வீரபத்திரர் ஆவார். இந்நூலின் காப்பில், பைரவக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கடவுள் போற்றப்படுகின்றார். பைரவரைக் கர்ப்பக் கிரகத்தின் பின்னால் காணலாம்.

கூத்தருக்குத் திருஞான சம்பந்தரிடத்தில் அலாதிப்பிரியம். முருகனின் அவதாரமே திருஞான சம்பந்தர் என்கிறார்(இதுவீரசைவமரபு). பரணிக்கும் சம்பந்தருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், கூத்தர் விடுவாரா? 'சரஸ்வதியின் வேண்டுகோளுக்கு இணங்கித் தேவியே ஞானசம்பந்தரின் வரலாற்றைக் கூறுகின்றாள்' என்று போற்றுகின்றார்.

இறைவியின் ஞானப் பால் உண்ட ஞான சம்பந்தரின் கதையை இறைவியே சொல்வது போலக் கூத்தர் கூறி மகிழ்கின்றார்.

ஞானசம்பந்தரின் சிலையை வீரபத்திரனின் கர்ப்பக்கிரக வாயிலில் காணலாம். கர்ப்பக்கிரகத்துப் பின்புறமுள்ள மேலைத் திருச்சுற்று மாளிகையில் சிவலிங்கம் உள்ளது.

ஒட்டக்கூத்தரின் பூதஉடல் மீது எழுப்பப்பட்ட தாக வீரசைவப் பெரிய மடம் கூறுகிறது. பரம்பரை யாகச் சொல்லப்படும் செய்தி உண்மையே ஆகும்.

ஏனெனில், தக்கயாகப்பரணியே கோவிலாகக் காட்சி அளிக்கிறது. இக்கோயில் ஒட்டக்கூத்தரின் சமாதிக் கோயில் என்பதில் ஐயமில்லை. இன்றும் கோயில் வீரசைவப் பெரிய மடத்தின் நிர்வாகத்தில் உள்ளது.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

13. சோழர் பெருமை கூறும் 'சங்கர சோழன் உலா'

கண்டதும் கொண்டதும்

சங்கரசோழன் உலா என்னும் பிரபந்த நூல், ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டு இருந்தது. இதனைச் சென்ற நூற்றாண்டின் கடைப்பகுதியில் தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் கண்டெடுத்தார்.

1926இல் கோபிநாத ராவ் அவர்கள் கலிங்கத்துப் பரணி, மூவர் உலாக்களோடு சங்கரசோழன் உலாவை ஒப்பிட்டு 'எபிகிராபியா இண்டிகா' தொகுதி 18இல் பக்கம் 28இல் ஆய்வுக் கட்டுரை எழுதி உள்ளார்கள். இவ்வுலா தஞ்சைச் சோழர்களைப் பற்றியது என்றும் கூறியுள்ளார்.

ஆனால், அன்றைய நிலையில் கோபிநாதராவ் அவர்களுக்குப் பாட்டுடைத் தலைவனை அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

1977இல் கி.வா.ஜகந்நாதன் அவர்கள், இவ் வுரையை வெளியிட்டுத், தவறுதலாக, சங்கரசோழன் உலாவின் பாட்டுடைத் தலைவன் மூன்றாம் குலோத்துங்க சோழனின் (1178-1218) தம்பியாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குலோத்துங்கனுக்கு ஒரு தம்பி இருந்ததாகவோ அரசாண்டதாகவோ வரலாறே இல்லை. கி.வா.ஜகந்நாதன் அவர்களின் கருத்து சரித்திர நிகழ்ச்சிகளுடன் ஒத்துவரவில்லை.

இந்தப் பின்னணியில் சங்கரசோழன் உலாவைப் பார்ப்போம்.

சோழர் மரபுப் பட்டியல்

சங்கர சோழன் உலா ஒட்டக்கூத்தரின் மூவருலா போன்று சோழர்களின் பாரம்பரியத்தைக் கூறி, காவிரிக்குக் கரை கட்டிய கரிகாலச் சோழனையும் அறிமுகப் படுத்துகின்றது.

பாடல் 15முதல் 26 வரை வரலாற்றில் இடம் பெறும் சோழப் பேரரசர்கள் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் முறையே,

விஜயாலயன்,

அவனது பேரன் பராந்த சோழன் (907-954);

பராந்தகனின் கொள்ளுப் பேரனான முதலாம் இராஜராஜன் (985-1014);

இவனது மகனான கங்கையும் கடாரமும் கொண்ட இராஜேந்திர சோழன்;

இவனது நான்கு பிள்ளைகளான,

இராஜாதி ராஜன் (1018 - 1054);

இரண்டாம் இராசேந்திரதேவன் (1052 - 1063);

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமானுக்குப் பாம்பணை செய்த ராஜ மகேந்திரன் *(1059 - 1063)*;

கூடல் சங்கமத்து வெற்றியடைந்த வீரராஜேந்திரனின் சகோதரியின் மகனும் கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவனுமான முதல் குலோத்துங்கன் *(1070 - 1122)*;

இவனது மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகியவர்களும், ஒட்டக்கூத்தரின் மூவர் உலாவில் சிறப்பிக்கப் பெற்றவர்களுமான

விக்கிரம சோழன் *(1118 - 1135)*;

இரண்டாம் குலோத்துங்கன் *(1135 - 1150)*;

இரண்டாம் இராஜராஜன் *(1146 - 1173)*

ஆகியோர் ஆவார்கள்.

சங்கமன் யார்?

இராஜராஜன், புலவர்களுக்குக் கண்ணிதோறும் ஆயிரம் பொன் கொடுத்த வள்ளல் என்று உலாவின் ஆசிரியர் போற்றுகின்றார். பாடல் 30இல் இராஜராஜனைச் சங்கமன் என்னும் புனை பெயரில் குறிப்பிட்டு, இந்நூல் எழுதுங்கால் அவன் உயிருடன் இல்லை என்பதையும் கூறுகிறார்.

பாடல் 38இல் இரண்டாம் இராஜராஜனுக்குப் பிறகு, சோழநாட்டை ஆண்ட சங்கரராஜன் அறிமுகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகின்றான். சங்கரராஜன் பாட்டுடைத் தலைவன் என்பதாக ஆசிரியர் கூறுகின்றார். சங்கர ராஜனது தலைநகரம் கங்கைகொண்ட சோழபுரமாகும். இந்த சங்கர ராஜன் யார் என்பதைக் கூறுகிறோம், உலாவின் காப்பில்.

"சங்கமன் தந்த தமிழ்ச் சங்கர சோழ
துங்கமன் மீது உலா சூட்ட"

என்று ஆசிரியர் கூறுகிறார்.

எனவே சங்கமனாகிய இரண்டாம் இராஜ ராஜனால் முடி சூட்டப்பட்டவன் சங்கரன் என்பதை அறிகிறோம்.

சங்கமனின் புதல்வன் சங்கரன் என்பதற்காகச் சொல்லப்படவே இல்லை. பாடல் 31லிருந்து 38 வரை, காலஞ்சென்ற சங்கமனின் இரு புதல்வர்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.

மூத்தோன் மொழி அனைத்தும் வல்லமன், ஆதிமனுவிற்கும் மேதக்க நல்லமன் என்ற நாயகன், இளையோன் பூசற்குடற் கடற்கே சென்று போர்வாள் கறை கழுவிய குமார மகீதரன். இவர்கள் இருவருக்கும் மெய்த்துணையாய் தோற்றிய என்னும் தொடருக்கு உண்மையான பாதுகாவலன் (கார்டியன்) என்றே பொருள் கொள்ளவேண்டும். (தோன்றிய என்று இல்லாததால் சகோதரன் என்று பொருள் கொள்வதற்கு இல்லை).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கடைசிப் பாடல் 389. இப்பாட்டுடைத் தலைவனின் முன்னோர் செயம் கொண்டாரின் கலிங்கத்துப் பரணியிலும், ஒட்டக்கூத்தரால் இயற்றப் பெற்ற மூவருலாவிலும் போற்றப்பட்டவர்கள் என்றும் கூறுகிறது.

இவர்கள் முறையே, முதற் குலோத்துங்கன் (1070-1122);

விக்கிரம சோழன் (1118 - 1135)

இரண்டாம் குலோத்துங்கன் (1133 - 1150)

இரண்டாம் இராஜராஜன் (1146 - 1173)

ஆகிய மன்னர்கள் ஆவார்கள்.

இராஜ ராஜனுக்குப் பின் ஆண்ட சோழ மன்னன் இரண்டாம் இராஜாதி ராஜன் ஆவான். இவனே பாட்டுடைத் தலைவனாகிய சங்கரராஜன் என்பதை எளிதில் அறியலாம்.

இரண்டு பிள்ளைகள்

கி. பி. 1146 இல் இர்ண்டாம் இராஜராஜன் முடிசூட்டிக் கொண்டான். வெகு நாட்களுக்குப் பின் மன்னனுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுக்கு ஒரு வயதும், இரு வயதும் இருக்கும் காலத்தில் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன. மந்திரியான பெருமாள் நம்பிப் பல்லவரையன், அரசனது பிள்ளைகளை இராஜராஜபுரத்து அரண்மனையில் பாதுகாப்பாக வளர்த்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இச்சமயம் இராஜராஜன் நோய்வாய்ப்பட்டான். அவனது இரு மகன்களும் சிறுவர்களாக இருந்தார்கள். தான் இறந்துவிட்டால் என்ன செய்வது என்று இராஜ ராஜன் யோசித்தான். அக்காலத்தில் வீரராசேந்திர சோழர் (கி. பி. 1070) நோய்வாய்ப்பட்டு இருந்தார். அவரது மகன் அதி ராஜேந்திர சோழருக்கும் வாரிசுகள் இல்லை.

எனவே வீர ராசேந்திரர் இறந்த பின், அதிராஜேந்திரரும் வாரிசுகள் இல்லாமல் இறந்தார். எனவே, வீர ராஜேந்திரரின் சகோதரியின் மகனாகிய முதல் குலோத்துங்கன் முன்னமேயே முடி சூட்டப் பட்டு இருந்ததால், சோழ மாமன்னன் ஆனான்.

பாதுகாவல் பட்டம்

முதல் குலோத்துங்கன் இரண்டாம் இராஜ ராஜனின் கொள்ளுப்பாட்டன் அல்லவா? எனவே இராஜராஜனும் முன்னவர் வழியைப் பின்பற்றி விக்கிரம சோழனின் (கொள்ளுப்) பேரனும் தனது சகோதரி நெறியுடைப் பெருமாளின் மகனுமான எதிரிலிப் பெருமாளுக்கு 'இராஜாதி ராஜசோழன்' என்று பெயரிட்டு முடிசூட்டி வைத்தான். இம்முடி சூட்டுவிழா கி.பி.1166 ஆடி மாதத்தில் நிகழ்ந்தது. 1173இல் இராஜராஜன் இறந்தான். சில நாட்களில் அமைச்சன் பெருமான் நம்பிப் பல்லவராயனும் இறந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இச்சரித்திர நிகழ்ச்சிகளை இராஜாதிராஜன் தனது எட்டாம் ஆட்சியாண்டு கி.பி.1174க்கு உரிய பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டில் விரிவாகக் கூறியுள்ளான்.

முறையான வாரிசு

நான்கு ஆண்டுகள் கழித்து 1178இல் இராஜாதி ராஜன் மூன்றாம் குலோத்துங்கனுக்கு முடிசூட்டி னான். இருவரும் நான்கு ஆண்டுகள் இணைந்து அரசாண்டனர். பின்பு இராஜாதி ராஜன் ஆந்திரம் சென்று கி.பி.1216இல் மறைந்தான்.

உண்மைநிலை விளக்கம்

இச் செய்திகளில் நாம் ஒன்றை நன்றாகக் கவனிக்கவேண்டும். இராஜாதி ராஜன் 1166இல் முடிசூடுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன், இராஜ ராஜனின் இரண்டு பிள்ளைகள் ஒரு வயதும், இரு வயதும் உடையவர்களாக இருந்தார்கள் என்று 1174க்கு உரிய இராஜாதி ராஜனின் கல்வெட்டில் கூறப் படுவதால், 1174இல் மன்னனின் பிள்ளைகள் இளம் வயதினர்களாக இருந்தார்கள் என்பதை அறியலாம்.

இல்லாவிடில் இரு மகன்களைக் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை. நான்கு ஆண்டுகள் கழித்து மூன்றாம் குலோத்துங்கன் முடி சூட்டப் படுவதால், குலோத்துங்கனே இராஜராஜனின் மகன் என்பதையும் அறியலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

மூத்தவன் இருக்க இளையவன் மன்னன்

பல்லவராயப் பேட்டையிலுள்ள கல்வெட்டில், மன்னனின் மைந்தர்கள் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு வயதும் இரு வயதும் உடையவர்களாக இருந்தார்கள் என்று கூறும் இராஜாதி ராஜன், இளையவனை முன்மொழிந்து மூத்தவனைப் பின் மொழிகிறான். இச் செய்தியை 1174இல் கூறுவதால், நான்கு ஆண்டுகள் கழித்து 1178இல் முடி சூட்டப்பட்ட மூன்றாம் குலோத்துங்கன், இராஜராஜனின் இரண்டாம் மகன் என்பதை அறியலாம்.

1173 முதல் 1182 வரை இராஜராஜனின் இரு புதல்வர்களுக்கும் பாதுகாவலனாக இருந்தான்.

இச் செய்தியை உலாவும் இராஜராஜனின் இரு புதல்வர்களும் மெய்த்துணையாய்த் தோற்றிய சங்கர ராஜன் (கார்டியன்) என்று கூறுகிறது.

மூத்தவனாகிய நல்லமன் பல கலைகள் படித்த அறிவாளியாக விளங்கி அரசுரிமை ஏற்கவில்லை என்றும், இரண்டாம் மகனாகிய குமாரமகீதரன் (குலோத்துங்கன்) மன்னனாக விளங்கினான் என்றும் உலாகூறுகின்றது.

ஈழப்போர் வெற்றி

சங்கர சோழன் உலாவில் சில சரித்திர நிகழ்ச்சி களும் சொல்லப்பட்டுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி.1176இல் இராஜாதி ராஜனின் படைத் தளபதியான அண்ணன் பல்லவரையன், ஈழத்தின் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி அந்நாட்டின் வடபகுதியைத் தீக்கிரை யாக்கினான்.

இச்சரித்திர நிகழ்ச்சியைப் பாடல்கள், 91,92,93 ஆகியவை கூறுகின்றன. பாடல் 253, ஓர் ஆணைக் கொண்டு (அண்ணன் பல்லவரையன்) ஈழத்து அனு ராதபுரம் அழிக்கப்பட்டது என்பதைக் கூறுகின்றது.

இராஜாதி ராஜன் பாண்டியர்களை வென்றதைப் பாடல்கள் 128, 147, 247, 334, 339, 366, 367 ஆகியவை விளக்குகின்றன.

ஈழத்தையும் பாண்டியர்களையும் வென்ற இராஜாதி ராஜனை, 'ஈழமும் பாண்டியன் முடித் தலையும் கொண்டருளிய இராஜாதிராஜன்' என்று கல்வெட்டுகள் அறிமுகப்படுத்துகின்றன.

உலா பாடப்பெற்ற காலம்

இராஜாதி ராஜன் 1182 வரை சோழ நாட்டை ஆண்டு, பிறகு ஆந்திரம் சென்றதால், உலா இயற்றப்பட்ட காலம் கி.பி.1182 என்று கொள்ளலாம்.

மாமனால் அளிக்கப்பட்ட சோழ சாம்ராஜ் யத்தை மாமனின் மகனான குலோத்துங்கனுக்கு அளித்த இராஜாதி ராஜனுக்கு, சோழ நாடு அளித்த பரிசு சங்கரசோழன் உலாவாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடியவர் யாரோ?

ஆந்திரத்தில் இராஜாதி ராஜனின் கல்வெட்டுகள் 1216 வரை கிடைக்கின்றன.

உலாவின் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. ஆசிரியர் பல இடங்களில் ஒட்டக் கூத்தரைப் புகழ் வதால் அவர் கூத்தரின் மகன் அல்லது பேரன் அல்லது கூத்தரின் அன்பிற்கு உரிய மாணவராகவும் இருக் கலாம் என்று ஊகிக்கவே முடிகிறது.

வீரசைவ மரபு

ஒட்டக்கூத்தர் வீர சைவத்தில் நாட்டம் கொண்டவர். தன்னுடைய தக்கயாகப் பரணியில் வீர சைவத்தைப் பெரிதும் கையாண்டுள்ளார். சங்கர சோழன் உலாவின் ஆசிரியர் ஒட்டக்கூத்தரைப் பின் பற்றுவதால் சங்கமன், சங்கரன் என்னும் வீர சைவர் பெயர்களை இராஜ ராஜனுக்கும், இராஜாதி ராஜனுக்கும் அளித்துள்ளார்.

12ஆம் நூற்றாண்டிலிருந்து வீர சைவத்தின் தாக்கம் தமிழ் இலக்கியங்களில் தோன்ற ஆரம்ப மாகிவிட்டது என்பதற்குத் தக்கயாகப் பரணியும் சங்கர சோழன் உலாவும் எடுத்துக் காட்டுகளாகும்.

★★★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

14. குலோத்துங்க சோழன் கோவை

ஓலை நூலாகியது!

குலோத்துங்க சோழன் கோவை என்னும் பிரபந்த நூல், ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு இருந்தது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் திருநெல் வேலி வித்வசிகாமணி நெல்லையப்பன் கவிராஜர் அவர்கள் தமது புத்தகசாலையில் இச்சுவடிகளை வைத்திருந்தார். அவரே புத்தகப் பிரதி ஒன்றை எழுதினார்.

இதற்கு மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகர் மு.ரா. அருணாசலக் கவிராயர் அரும்பதவுரை எழுதினார். மதுரை மாவட்டம் பழ.சி.சண்முகம் செட்டியார் அவர்களின் பொருளுதவியால் மதுரை விவேகபானு அச்சு யந்திர சாலையில் அச்சிடப்பட்டு 1910இல் புத்தகமாக வெளிவந்தது.

இதனை மு. ராகவய்யங்கார் அவர்கள் தமிழ்ச் சங்கம் - செந்தமிழ் மூன்றாம் தொகுதியில் ஆய்ந்துள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாட்டுடைத் தலைவன் யார்?

அன்றிருந்த நிலையில் சோழர்களின் வரலாறு, காலக்கணிப்பு, வம்சாவளி ஆகியவை சரியாக வரையறுக்கப்படாததால்,பாட்டுடைத் தலைவனை இன்னார் என்று அறிய முடியவில்லை.

குலோத்துங்க சோழன் என்ற பெயரில் மூன்று சோழ மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களில் ஒருவனே பாட்டுடைத் தலைவன். சோழர்களுக்கு உரித்தான கோழி என்னும் உறந்தை, புகார்,தஞ்சை ஆகிய நகரங்களுக்குக் குலோத்துங்கன் தலைவன் என்பதைக் கோவை பல இடங்களில் கூறுகிறது.

சங்கர சோழனுலா, சரித்திர நிகழ்ச்சிகள், கல்வெட்டுகள் - இவற்றின் துணைகொண்டு கோவையின் பாட்டுடைத் தலைவனை முதன் முதலாகச் சந்திப்போம்.

சங்கமராச குலோத்துங்கன் (பாடல் 2)

காவிரி நன்நதியாதி சங்கம ராச குலோத்துங்கன் (25)

சங்க ராசவரோதயன் (20)

காவிரிப்பூந் துறையாதி சங்கமராச குலோத்துங்கன் (40)

கண்டமெல்லாம் கொண்டாடும் சங்கமராச குலோத்துங்கன் (41)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழு மேதினிக்கும் கோனாகும் சங்கம ராச
குலோத்துங்கன் (84)

கோழிமன் சங்கம ராச குலோத்துங்கன் (237)

மனுகுல ராச சங்கம ராச குலோத்துங்கன் (343)

தாமரைப் பொன் நாயகன் சங்கம ராச
குலோத்துங்கன் (387)

குடக் காவிரி வாய்ச் சோணாடன் சங்கம ராச
குலோத்துங்கன் (451)

என்று பத்து இடங்களில் சங்கமன் புதல்வன் குலோத்துங்கன் என்று கோவை கூறுகிறது.

மூன்றாம் குலோத்துங்கனே!

சங்கர சோழனுலா இரண்டாம் இராஜராஜனைச் சங்கமன் என்னும் புனைபெயரில் அழைப்பதை முன்பே கண்டோம்.

சங்கமனுக்கு நல்லமன், குமார மகீதரன் என்று இரு புதல்வர்கள் இருந்தார்கள். குமார மகீதரனே பிற்காலத்தில் ஆட்சி செய்த மூன்றாம் குலோத்துங்கன் என்பதையும் கண்டோம்.

எனவே, இக்கோவையின் பாட்டுடைத் தலைவன், இரண்டாம் இராஜராஜனின் புதல்வனாகிய மூன்றாம் குலோத்துங்க சோழன் என்பதை எளிதில் அறியலாம். இம்மன்னன் கி.பி.1178 முதல் 1218 வரை அரசாண்டவன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காவிரியால் பெருமை

சோழநாட்டை வளம் பெருகச் செய்வது பொன்னி நதியாகிய காவிரி ஆறாகும். காவிரி நாட்டிற்குத் தாங்கள் மன்னர்கள் என்று கூறிக் கொள்வதில் சோழர்கள் பெருமிதம் அடைந்தனர். இந்த மரபைக் குலோத்துங்க சோழன் கோவையும் கூறுகிறது.

காவிரிக்கு மன்னன் குமார குலோத்துங்கன் (3)

பொன்னி நாடன் குலோத்துங்க (7)

காவிரிந்த் துறைத் தஞ்சை குலோத்துங்கன் (22)

தெண்ணீர் வரும் பொன்னி நாடன்
குலோத்துங்கன் (255)

பொய்யாத பொன்னி குலோத்துங்கன் (373)

நதித்தாரைப் பொன்னி குலோத்துங்கன் (443)

காவிரிப் பூந்திரையேந்து கோழிக்
குலோத்துங்கன் (453)

என்று கோவையில், காவிரி நாடன் என்று குலோத்துங்கன் புகழப்படுகிறான்.

தமிழால் கொண்ட பெருமை

குலோத்துங்கன் தமிழ்ப் பற்று கொண்டவன் என்பதையும் காணலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வண்டமிழைச் சொன்னாரை வாழ வைக்கும் கோழி
குலோத்துங்கன் (17)

தண்டமிழுக்குப் பொன்னே வழங்கும்
குலோத்துங்கன் (30)

தமிழ்ப் பாவலர்க்குக் கார்மேக மன்ன
குலோத்துங்கன் (35)

தாயும் தமரும் எனத் தமிழ் தாங்கியத் தண்டமிழை
ஆயும் கமகன்(அறிஞன்) குலோத்துங்கன்(94)

தமிழ்க்கு ஈவோன் குலோத்துங்கன் (104)

தண்டும், சிவிகையும், பாய்மாவும், பொன்னும்,
தமிழ்க் குதவும் கண்டன் (390)

தென்பாற் தமிழ் தெரிசென்னி குலோத்துங்கன் (401)

தண்டமிழுக்கு சிந்தாமணி நம் உறந்தைக்
குலோத்துங்கன் (435)

தமிழ் நூற்கவிக்கு நந்தா மிருகைக் குலோத்துங்கன் (461)

என்று கோவை நூலும் கூறும்.

கல்வெட்டுகளில் **புயல் வாய்த்து** என்று தொடங்கும்இம்மன்னனின் மெய்க்கீர்த்திகள் தமிழ்த் தேன் சொட்டச் சொட்ட எழுதப்பட்டு இருக்கும். இதைப் படித்தவர்களே இவ்வின்பத்தைச் சுவைக்க முடியும். விரிவுக்கு அஞ்சி விடுக்கின்றேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரு பெரும் நூல்கள் (12ஆம் நூற்றாண்டு)

இம்மன்னனின் காலத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பர், ''கம்ப இராமாயணம்'' இயற்றினார் என்பது வரலாறு கண்ட உண்மை.

இம் மன்னனின் பாட்டனாராகிய இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் மாக்காதை என்னும் பெரியபுராணத்தை இயற்றினார்(கி.பி.1139).

சேக்கிழார் காலம்

இரண்டாம் குலோத்துங்கன் மறைவிற்குப்பின் அவரது மகனான இரண்டாம் இராஜராஜன் காலத்திலும் சேக்கிழார் வாழ்ந்தார்.

இதனைக் கி.பி.1163க்கு உரிய இராஜராஜனின் திருமழபாடிக் கல்வெட்டு உறுதி செய்கிறது.

இராஜராஜன் மகனான மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சேக்கிழார் இறைவன் திருவடி அடைந்தார்.

சேக்கிழார் நினைவாக!

குலோத்துங்கன் சிதம்பரத்தில் சேக்கிழாரின் நினைவாகத் ''திருத்தொண்டர் சீர் உரைத்தார்'' என்னும் நந்தவனத்தை ஏற்படுத்தினான்(கி.பி.1185). நந்தவனத்திலிருந்து கொணரப்படும் மலர்களால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நடராசப் பெருமானுக்கு நித்ய அர்ச்சனை செய்யவும் ஏற்பாடு செய்தான்.

இச்செய்தியைக் குலோத்துங்கனின் சிதம்பரம் கல்வெட்டு கூறுகிறது.

வேறு புலவர்கள், நூல்கள்

இம் மன்னனின் ஆட்சியில் வீராந்தப் பல்லவராயர் என்னும் பெருமான் அவைக்களப் புலவராக இருந்தார் என்று திருக்கடையூர்கல்வெட்டு கூறுகிறது (கி.பி.1201).

நேமிநாதம், வச்சணந்தி மாலை, வெண்பாப் பாட்டியல் ஆகிய இலக்கண நூல்களை இயற்றிய குணவீரபண்டிதர் என்பார் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தனர். இச் செய்தி வெண்பாப் பாட்டியலின் பாயிரத்தில் காணக்கிடக்கின்றது.

இம்மன்னனது 32ஆம் ஆட்சியாண்டுக்குரிய (கி.பி.1210) திருவாலங்காட்டுக் கல்வெட்டில், 'அறநிலை விசாகன் திரைலோக்ய மல்லன் வத்சராஜன்' என்பவன் மகாபாரதத்தை இனிய தமிழில் எழுதினான் என்று கூறப்பட்டுள்ளது.

பாரதந் தன்னை அருந்தமிழ்ப்படுத்தி சிவநெறி கண்டவர் என்பது கல்வெட்டு வாசகம்.

அப்புலவர் எழுதிய மகாபாரதம் இன்றுவரை கிடைக்கவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்னூல் என்னும் தமிழ் இலக்கண நூலைப் பவணந்தி முனிவர் என்பார் இக் குலோத்துங்கன் காலத்தில் இயற்றினார்.

திருவெள்ளறை கல்வெட்டுகள், குலோத் துங்கன் காலத்தில் வாழ்ந்த கவிராஜரான திரிபுவன கவிச் சக்கரவர்த்திகள் சகல வித்யா சக்கரவர்த்தி என்னும் புலவரை அறிமுகப்படுத்துகின்றன. இப்புலவரின் இயற்பெயர், திருத்தேர் பொன்வேய்ந்த பெருமாள் கற்பகவல்லி வாஜபேயாஜி என்பதாகும்.

புகழுரைகள்

குலோத்துங்கன், சேரரையும், பாண்டியரையும்,
ஈழத்தையும் வென்றான்.

சேரர் திறை தரவே அவன் சிறையை விடுத்து
அழுதுயர் மாற்றும் குலோத்துங்கன் (466)

சேரர் பாண்டியர் தம் ஆங்காரம் தீர்த்த
குலோத்துங்கன் (467)

வெகுண்ட மதுரைக் கரியோட வென்ற
குலோத்துங்கன் (480)

என்று கோவை நூலில் கூறப்பட்டுள்ளது.

இச்சரித்திர உண்மைகளைக் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியும் விருதுப் பெயர்களும் விரிவாய் எடுத்து உரைக்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இம்மன்னனின் கல்வெட்டுகள், 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கன்'' என்றும்,

''மதுரை கொண்டருளிய'' குலோத்துங்கன்
என்றும் அறிமுகம் செய்கின்றன.

சேரனூர், குடுமியான்மலைக் கல்வெட்டுகள்,

திருவிழுந்த தென்னவனும் சேரலனும்
வந்திறைஞ்சி

அரியணையின் கீழ் இருப்ப..

படி வழங்கி பாண்டியர்க்கு விடை கொடுத்து...

பார் அறிய வாழ்வருளி...

சோழ பாண்டியன் என்று வீரர்கள் களிப்ப..

வழுதியரைக் கொண்ட பாண்டி மண்டலத்தைச்
சோழ பாண்டிய மண்டலம் என்று
எழு பாரும் செல நிறுத்தி...

தார் வழுதி மண்டபத்தில்

சேர பாண்டியர் தம்பிரான் என்று எழுதி...

சிறைகொண்ட புனல் வையைச்
சேர பாண்டிய மண்டலத்து இறைகொண்டு...''

என்று கூறுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'மீனவர் சேரரை வெற்றிகண்ட வீரம் விழுக் கவிஞரானவர் பாடுங் குலோத்துங்க' (195) என்று கோவை கூறுவதை, ''மதுரை கொண்ட தோள் வலி பாடிய பாணனைப் பாண்டியன் என்று பட்டம் சூட்டினான்'' என்று கல்வெட்டும் கூறுகின்றது.

வெற்றிச் செய்திகள்!

குலோத்துங்கன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்துக் கொங்கு மன்னனைத் திறை செலுத்தும்படி செய்தான்.

கருவூரில் சோழ கேரளன் என்று மன்னர் தொழ விசைய மாமுடி சூடி வீர மாமுடி புனைந்தான். கொங்கு நாட்டை வென்றதன் காரணமாகக் கொங்கான சோழ கேரள மண்டலம் என்று பெயரிட்டான்.

இச் செய்திகளைக் குலோத்துங்கனின் மெய்க் கீர்த்திகள் உறுதி செய்கின்றன.

ஈழமும், கருவூரும், பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கன் என்று பல கல்வெட்டுகள் கூறுகின்றன.

கீழையூர்க் கல்வெட்டு மன்னனைத், 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோழ கேரள தேவர்' என்று அறிமுகப்படுத்துகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குலோத்துங்கனின் கொங்கு மண்டல வெற்றியை,

'கொங்கு ஓட்டும் வேங்கைக் கொடியோன்
'குலோத்துங்கன்' *(82)*

'கொங்கோடக் குத்தும் களிற்றான் குலோத்துங்கன்'
(133)

என்று கோவையும் கூறும்.

மன்னர்களை வென்ற போதிலும் அவர்களுக்குப் பாதுகாவலனாக விளங்கினான் குலோத்துங்கன். இதனால் **இராசாக்கள் தம்பிரான்** என்று அழைக்கப் பட்டான்.

மூன்றாம் குலோத்துங்கன்

கல்வெட்டுகள் கூறும் இச் செய்தியினைக் கோவையும்,

வேந்தர்க்கெல்லாம் தலையாக்கும் செம்பொற்
சரணான் குலோத்துங்கன் *(5)*

எம் மன்னவர்க்கும் தானே தலைமைப்
பெருமான் குலோத்துங்கன் *(28)*

அவனிக்கு எல்லாம் தானோர் தலைமைப்
பெருமான் குலோத்துங்கன் *(92)*

என்று நயம்பட எடுத்துரைக்கின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புகழாபரணன்என்னும் பட்டத்தைப் பெற்றவனும், சிவபக்தனும், இலங்கை இராவணனைக் கொன்றவனுமாகிய மூன்றாம் குலோத்துங்கன் இவனே.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

15. திருஞானசம்பந்தரின் மனைவியார் சொக்கியார்

திருமண சம்பந்தர்

சைவத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் திருஞான சம்பந்தர். குழந்தைப் பருவத்தில் அன்னையின் ஞானப்பாலுண்டு இசை ஞான சம்பந்தரானார்.

இவர் பதினாறு வயதுவரை வாழ்ந்தவர். இவரது திருமணம் நல்லூர் திருப்பெருமணத்தில் நடந்தது.

திருமண வைபவத்தைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் எடுத்துரைக்கிறார்.

சம்பந்தப்பெருமான் நல்லூர்ப்பெருமணம் வந்தடைந்தார். வதுவைக் கோலம் புனைந்திட பூதநாயகர் கோயில் புறத்தொரு மடத்தில் புக்கார். நம்பியாண்டார் மகளை மணந்தார். மனைவியின் கைப்பிடித்து கோயிலுக்குள் சென்றார். உற்றார், கற்றார் புடைசூழத் திருமணக் கோலத்துடன் மனைவியாரின் கைப்பிடித்து சிவ ஜோதியில் கலந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நல்லூர் திருப்பெருமணம்

திருஞானசம்பந்தர் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்தவர். பெரியபுராணம் சேக்கிழார் பெருமானால் கி.பி.1139இல் எழுதப்பட்டது. இப் பின்னணியில் நல்லூர் திருப்பெருமணம் கோயிலில் உள்ள சில கல்வெட்டுகளைப் பார்ப்போம்.

இவ்வூர் சீர்காழிக்கு வடகிழக்கில் சுமார் இருபது கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இன்று ஆச்சாபுரம் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வூரில் உள்ள **சிவலோக தியாகர்** கோயில் சோழர்கள் காலத்திருப்பணியைச் சார்ந்தது. கோயிலில் உள்ள கல்வெட்டுகள் திருஞான சம்பந்தரைப் பல கோணங்களில் படம் பிடித்துக்காட்டுகின்றன.

மிகப் பழமையான கல்வெட்டு விக்கிரம சோழனுக்குரியது. இதன் காலம் கி.பி. 1121 ஆகும்.

பரசமயக் கோளரி மடத்துக்கு மடப்புறமாக உடையார் சிவஞானசம்பந்தர் திருநாமத்தால் நிலங்கள் அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது.

ஐந்து இடங்களில் பிள்ளையார் என்று திருஞான சம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்த க்ஷேத்திரக்கோவை பாடல் 11 இல் தம்மை, சிவஞானசம்பந்தர் என்று கூறிக் கொள்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"கொய்மா மலர் சோலை குலாவு கொச்சைக்
கிறைவன் சிவஞான சம்பந்தன்"

என்பது பாடலின் வாசகம்.

பாடலில் காணப்படும் சிவஞான சம்பந்தன் என்னும் பெயரை ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிறகு வெட்டப் பட்ட கல்வெட்டில் காண்கிறோம். இக்கல்வெட்டின் காலத்திற்குப் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெரியபுராணம் எழுதப்பெற்றது.

இதில் அன்னையின் ஞானப்பாலுண்ட ஆளுடைய பிள்ளையார் (திருஞான சம்பந்தர்) 'அகில தேவருக்கும் முனிவருக்கும் தெரியவரும் பொருளாகும் தாவிறனிச் சிஞான சம்பந்தராயினார்' என்று சேக்கிழார் பெருமான் கூறுவதும் கண்டு களிக்கத்தக்கது. (பாடல் ௬௯)

உடையார்

உடையார் பரசமயக் கோளரி கல்வெட்டில் உடையார் சிவஞானசம்பந்தர் திருநாமத்தால் பரசமயக் கோளரி மடத்துக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டு உள்ளதால், ஆலயத்திற்குள் திருஞான சம்பந்தருக்காகத் தனிக்கோயில் ஒன்று இருந்துள்ளது என்பதை அறிகிறோம்.

பரசமயக் கோளரி என்றால் மற்ற சமயங்களுக்கு சிங்கம் போன்றவர் என்று பொருள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி.1010இல் நம்பியாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தரைப் போற்றி ஆளுடைய பிள்ளையார் திரு அந்தாதியை இயற்றினார். இதில் பாடல் 54 இல் திருஞான சம்பந்தரைப் பரசமயக் கோளரி என்று சிறப்பிக்கின்றார்.

சேக்கிழார் தரும் செய்தி

சேக்கிழார் பெருமான் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர். கி.பி.1143-க்கு உரிய குலோத்துங்கனது கல்வெட்டு பெரியபுராணத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

"நல்லூர் உடையார் ஸ்ரீகைலாசமுடையார் எழுந்தருளி இருக்கிற திருமுற்றமும், தீர்த்தக்குளமும், திருமடை விளாகமும், திருநந்தவனங்களும் இக் கோயில் உடைய பிள்ளையார் திருக்கல்யாணம் பண்ணி அருளின திருமாளிகையும், திருவீதியும், திருநந்தவனமும்" இவை இறையிலியாக அனுபவித்து வரும் நிலங்களும் கூறப்படுகின்றன.

திருஞான சம்பந்தர் வதுவைக் கோலம் பூண்ட திருமடத்தைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் குறிப்பிடுகின்றார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு வெட்டப்பட்ட குலோத்துங்கனது கல்வெட்டில் இம்மடம் "பிள்ளையார் திருக்கலியாணம் பண்ணி அருளிய திருமாளிகை" என்று அழைக்கப்படுவது கண்டு களிக்கத்தக்கது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கி.பி.1210ஆம் ஆண்டில் மூன்றாம் குலோத்துங்க சோழனது காலத்தில் அன்னை எழுந்தருளுவிக்கப் பட்ட (கற்சிலை கோயிலும் கட்டப்ப்ட்டது திருஞான சம்பந்தரின் நல்லூர் பெரும் பதிகத்தில் சிறப்பிக்கப் பட்டவாறே (பாடல்7) திருவெண்ணீற்று உமை என்னும் பெயருடன் அன்னை அருள்பாலித்து வருகிறாள்.

வரவேற்பும்! விருந்தும்!

மூன்றாம் இராஜராஜ சோழனுடைய கல்வெட்டு சுவையான செய்தியைத் தருகின்றது. இக்கல் வெட்டின் காலம் கி.பி.1217 ஆகும். முக்கியமான வாசகங்களைப் பார்ப்போம்:

"இன்னாயனார் கோயில் ஆளுடைய பிள்ளையாரும் சொக்கியாளும் காவேரிக்குத் தெற்கு பட்ட ஊர்களில் திருவெண் காட்டிலும், திருநனி பள்ளியிலும், திரு ஆக்கூரிலும் எழுந்தருளிப் பின்பு பெரும் பற்றுப் புலியூரிலே (சிதம்பரம்) எழுந்து அருளுகிற இடத்து நம்மூரில் எழுந்து அருளுகிற இடத்து நம்மூரில் எழுந்து அருளிப் புகுந்து கிராமப் பிரதக்ஷிணமாக எழுந்தருளி இருந்து திருவடி விளக்கி ஆயிரத் தெண்ணாற்றுவவன் சந்தி என்று பிள்ளையாரும் சொக்கியாரும் அமுது செய்தருள"

சிறப்பு வழிபாடு செய்யப் பெற்ற என்று கூறப்பட்டுள்ளது. பிள்ளையாரும், சொக்கியாரும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுந்தருளும் காலத்து அபூர்விகளால் வரும் அந்தணர்களுக்கு உணவளிக்கப்பட்டது.

திருமஞ்சனம் செய்ய வைத்தல்

மற்றொரு கல்வெட்டு மூன்றாம் இராஜராஜ சோழனுடையது. இதன் காலம் கி.பி.1233 வைகாசி மாதம் 20ஆம் தேதி சனிக்கிழமையாகும். செய்தியைப் பார்ப்போம்.

"ஆளுடைய பிள்ளையாரும் பிள்ளையாரிலும் சொக்கியாரும் ஊரில் எழுந்தருளப் புகுந்தருள கிராமப் பிரதக்ஷிணமாக எழுந்தருளி நம்மூர் உடை யார் ஸ்ரீகைலாச முடையார் கோயிலிலே எழுந்தருளி திருமஞ்சனம் பண்ணியருளித் திருப்பாவடை அமுது செய்தருளி வினோதம் கண்டு அருளா நிற்க".

அவ்வமயம் கோயிலுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன.

சொக்க வைக்கும் ஈடுபாடு

தேவாரப் பாடல்களிலோ அல்லது பெரிய புராணத்திலோ திருஞானசம்பந்தரின் மனைவியாரின் பெயர் சொல்லப்படவில்லை. 1217 இலும் 1233லும் வெட்டப்பட்டுள்ள மூன்றாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டுகளில் தாம் முதன் முதலாகத் திருஞான சம்பந்தரின் மனைவியாரின் பெயர் சொக்கியார் என்று சொல்லப்பட்டுள்ளது. இச்செய்தியை அறியும் நாமும் சொக்கித்தான் போகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமணம் ஆன உடன் திருஞானசம்பந்தர் திருமணக்கோலத்தில் மனைவியாரின் கைப்பிடித்துக் கோயிலுக்குள் புக்கு சிவஜோதியில் கலந்ததாகப் பெரியபுராணம் கூறுகிறது. திருமணத்திற்குப் பின் சம்பந்தர் மனை வாழ்க்கை நடத்தவில்லை. இச் செய்தியைச் சோழன் அறிவான். எனினும் அவனது பக்தி உள்ளத்தில் சமாதானம் ஏற்படவில்லை.

சம்பந்தப் பெருமானும் மனைவியார் சொக்கியாரும் மனை வாழ்க்கையில் ஈடுபட்டு இல்லறம் நடத்தி விநோதம் கண்டு மகிழ்ந்திருந்தால் எவ்வாறு இருந்திருக்கும் என்று சோழன் கற்பனை செய்கிறான். அக்கற்பனையைப் படம் பிடித்துக் கல்வெட்டில் வடித்தான். வடித்தவாறே நிரந்தரமான விழாக்கள் எடுக்க நிவந்தங்களும் அளித்தான்.

கல்வெட்டுகளின் வாசகங்களும் புகைப் படங்களும் தந்து உதவிய-மைசூர் மத்திய அரசு தொல்பொருள் கல்வெட்டு ஆய்வுத்துறையினருக்கு எனது நன்றி. அடியேனும் பலமுறை கோயிலுக்குச் சென்று கல்வெட்டுகளைப் படித்துள்ளேன்.

இக்கோயிலில் பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர்கள்-காலங்களில் வெட்டப் பட்டுள்ள கல்வெட்டுகள் 19 உள்ளன. கோயிலுக்கு அளிக்கப்பட்ட பலவகை நிவந்தங்கள் கூறப் பட்டுள்ளன.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

16. திருவிடைவாயில் பதிகம்

மூவர் முதலிகள்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஏழாம் நூற்றாண்டில் அவதரித்தனர். சுந்தர மூர்த்தி நாயனார் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். மூவர் முதலிகள் என்று அழைக்கப்படும். இந் நாயன்மார்கள் சிவத்தலங்கள் தோறும் சென்று சிவபெருமானை வழிபட்டுத் திருப்பதிகங்களைப் பாடினர்ர்.

தேவாரங்கள் தெரிந்தெடுத்தல்

முதலாம் இராஜராஜ சோழன், மூவர் முதலிகளின் பதிகங்களைத் தொகுக்க விரும்பினார். சிதம்பரம் நடராஜப் பெருமான் கோயிலின் ஓர் அறையில் இப்பதிகங்கள் இருப்பதை அறிந்தான். நம்பியாண்டார் நம்பிகளின் துணைக்கொண்டு அவற்றைக் கண்டெடுத்தான்.

ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு இருந்த பதிகங்களில் சில செல்லரித்துப் போயிருந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராஜராஜனின் வேண்டுகோளின்படி கிடைத்த பதிகங்களை நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்தார். இவை தேவாரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

தேவாரத் தொகுப்பு

திருஞான சம்பந்தரின் பதிகங்களின் தொகுப்பு மூன்று, திருநாவுக்கரசரது பதிகங்களின் தொகுப்பு மூன்று, சுந்தர மூர்த்தி நாயனாரது ஒன்று ஆக தேவாரங்கள் ஏழாகத் தொகுக்கப்பெற்றன.

பணி அமைத்த பாவை

நல்இசை யாழ்ப்பாணனூர் மரபில் வந்த இசையில் வல்லாள் ஒருத்தி திருஎருக்கத்தம் புலியூரில் இருந்தாள். அவள் இப்பாடல்களுக்குரிய பண்களையும் அடைவுகளையும் அமைத்துக் கொடுத்தாள். இந் நிகழ்ச்சி கி.பி.1012 இல் நடந்தது.

தேவாரத் திருத்தலங்கள்

ஏழு தேவாரங்களிலும் 274 சிவத்தலங்கள் இடம் பெறுகின்றன. கி.பி.1100 இல் முதல் குலோத்துங்க சோழன் காலத்தில், நரலோக வீரன் என்பான் இத் தேவாரங்களைச் செப்பேட்டில் எழுதித் தில்லை நடராசப் பெருமானின் கோயிலில் வைத்தான். இப்பாடல்களே இன்றுவரை ஓதப்பட்டு வருகின்றன.

காலத்தின் கோலத்தில் சில பதிகங்களில் ஒன்றிரண்டு பாடல்கள் மறைந்து போய் விட்டன. செப்பேடுகள் என்ன ஆயின என்பது தெரியாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவிடைவாய்க்குடி

முதலாம் இராஜராஜ சோழனுக்குத் திருஞான சம்பந்தரின் பதிகம் ஒன்று கிடைக்கவில்லை. அதுதான் திருவிடைவாயில் என்னும் தலத்திற்கு உரிய பதிகமாகும். திருநாவுக்கரசர் இத்தலத்தை விடை வாய்க்குடி என்று அடைவுத் திருத்தாண்டகம் மூன்றாம் பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

காடவர்கோன் நாயனாராலும் இத்தலம் பாடப்பெற்று உள்ளது. (மாண்டுவாய் என்று தொடங்கும் பாடல்)

ஆனால், இக்கோயிலுக்குரிய திருஞான சம்பந்தரின் பதிகம் இராஜ ராஜனின் காலத்திற்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின் கிடைத்தது. இது கி.பி 1178இல் முடி சூடிய மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலமாக இருக்கலாம். பதிகத்தின பண்ணும் அடைவும் தெரியவில்லை.

எனவே, சோழ மன்னன் திருஞானசம்பந்தரின் பதிகத்தில் திருவிடைவாய் - சிவன் கோயிலின் அர்த்த மண்டபம், மகாமண்டபம் சுவர்களில் கல்லில் வெட்டி வைத்தான். எப்போதும் நிரந்தரமாக, சாஸ்வதமாக, இருப்பதற்காகப் பதிகத்தைக் கல்வெட்டுகளாக அமைத்த சோழனின் எண்ணம் நிறைவேற்றிற்றா என்பதைப் பார்ப்போம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிதைவுண்ட சிவன்கோயில்

தஞ்சை மாவட்டத்தில், கொரடாச்சேரிக்கு அருகே பாண்டவ ஆற்றின் கரையில் திருவிடைவாய்த் தலம் உள்ளது. கால வெள்ளத்தில் இவ்வூரில் சிவன் கோயில் சிதைவுற்றது. 1917இல் திருக்களரைச்சேர்ந்த சுவாமி நாத உபாத்தியாயர் என்னும் சிவனடியார் சிதைவுண்ட கோயிலைக் கண்டார்.

அவர் கண்டது என்ன?..

கோயிலில் காடு மூடப்பெற்று வெடித்துச் சரிந்து விழுந்து கொண்டு, கதவுகளின்றி, மக்கள்புழக்கம் பூசனையில்லாமல் திறந்திருந்தது. சில மூர்த்திகளின் திருவுருவங்கள் மாத்திரமிருந்தன. காட்டுப் பூனை, மரநாய், கீரிப்பிள்ளை, பாம்பு, வௌவால் முதலி யவை பூசை செய்து கொண்டிருந்தன.

தேவியார் கர்ப்பக்கிருகம் வாயிற்படி அடைக் கப்பட்டும், விமானம் மேலே இடிக்கப்பட்டும் இருந்தது. பிர்காரத்தில் காட்டுச் செடிகள் மண்டி யிருந்தன. பல கல்வெட்டுகள் இருந்தன.

அவற்றுள் திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதிகமொன்று அர்த்தமண்டபத் தென்புறத்திலும் மகாமண்டபம் மேற்புறத்திலும் வெட்டப்பெற்றிருந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அரிய கண்டுபிடிப்பு

சுவாமிநாத உபாத்தியாயர் திருஞானசம்பந்தரின் திருவீட்வாய்ப் பதிகத்தை வெளி உலகத்திற்கு அறியப்படுத்தினார்.

நண்பர்கள் மற்றும் திருவாடுதுறை ஆதீனத் தாரின் துணைகொண்டு கோயிலைச் செம்மைப்படுத்தி நித்திய பூசை வழிபாட்டிற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார்.

அடுத்த ஆண்டு 1918இல் வெள்ளைக்காரர்களின் ஆட்சியில் மத்திய அரசின் தொல்பொருள் கல்வெட்டு ஆய்வுத்துறையினர் பதிகக் கல்வெட்டைப் படி எடுத்தனர்.

பக்தர்கள், அன்பர்களின் முயற்சியாலும், தமிழ்நாடு அரசின் உதவியாலும் கோயிலுக்குத் திருப்பணி செய்யப்பட்டு 1960 ஜூன் மாதம் 12ஆம் தேதி மகா கும்பாபிஷேகமும் நடந்தது. திருவிடை வாய்க் கோயிலின் பதிகத்தைச் சலவைக்கல்லில் வெட்டி வைத்தனர்.

மீண்டும் சிதைந்தது

ஆனால், சோழனால் கல்லில் வெட்டி வைத்த பதிகம் செதுக்கி அழிக்கப்பட்டது. திருப்பணியின் போது இக்கோயிலின் கல்வெட்டுகள் அழிந்தும் சிதைந்தும் போயின. 1978இல் தமிழ்நாடு அரசு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொல்பொருள் ஆய்வுத்துறையினர் இக் கோயில் கல்வெட்டுகளைப் படியெடுக்கச் சென்றனர்.

"திருஞானசம்பந்தரின் பதிகக் கல்வெட்டை மத்திய அரசு *1918* இல் படி யெடுத்தது. ஆனால் பிற்காலத் திருப்பணியில் இக் கல்வெட்டு அழிந்து விட்டது. இப்போது காண்பதற்கு இல்லை"

என்று எழுதித் தங்கள் கடமையை முடித்துக் கொண்டனர். மத்திய அரசிடமிருந்து கல்வெட்டின் நகலைப் பெற்று வெளியிட்டு இருக்கலாம்; ஏனோ செய்யவில்லை.

பதிவு கிடைத்தது!

சிறிது நாட்களுக்கு முன் மைசூரில் உள்ள மத்திய அரசின் கல்வெட்டு ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் கே.வி.ரமேஷ் அவர்களுடன் தொடர்பு கொண்டேன். *1918* இல் வெள்ளைக்காரன் ஆட்சியில் படியெடுக் கப்பட்ட கல்வெட்டின் நகல் உள்ளது என்று தெரிவித் தார்கள். அதன் புகைப்படமும் அனுப்பினார்கள். இக் கல்வெட்டு இரண்டு பாகங்களாக உள்ளது. பிற்காலத்தவரின் நன்மைக்காக ஆவணப்பதிவும் செய்துவிட்டார்கள்.Negatived documented தேவைப் படுகிற யாவரும் இத்துறை அலுவலகத்திலிருந்து கல்வெட்டின் புகைப்படத்தைப் பெறலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்லெழுத்தின் கதை

முதலாம் இராஜராஜ சோழனுக்குக் கிடைக்காத பதிகம் 200 ஆண்டுகளுக்குப் பின்னர் கிடைத்தது. அப்போதிருந்த சோழ மன்னன் அப்பதிகத்தைக் கல்லில் வெட்டி வைத்தான்.

பிற்காலத்தில் இதனை 1917இல் சுவாமிநாத உபாத்தியாயர் கண்டுபிடித்தார். 1918 இல் வெள்ளைக் காரன் படியெடுத்தான்.

1960 இல் திருப்பணியின்போது பதிகக் கல்வெட்டு அழிக்கப்பட்டது. 1978இல் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டைக் காணோம் என்று எழுதிக் கைவிரித்துவிட்டது.

1989இல் மத்திய அரசின் கல்வெட்டுத்துறையினர் கல்வெட்டின் புகைப்படத்தை அனுப்பினார்கள்.

கண்ணீர் வருகின்றதா? அழுங்கள்; மனச்சுமையைக் குறைக்க நன்றாக அழுங்கள். இந்தப் புகைப் படத்தைப் பத்திரமாக வைத்திருப்பீர்கள். எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும் அக்கல்வெட்டை இனிக் காணமுடியாது.

பதிகத்தின் பாடல்கள் வெளிவந்துள்ளன. முதல் பாடலையும், கடைசிப்பாடலையும் கீழே கொடுத்துள்ளேன். தேவையாயின் அடியேனுக்கு எழுதினால் மற்ற பாடல்களையும் அனுப்பி வைக்கிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதல் பாடல்

மறியார் கரத்தெந்தை யம்மா துமையோடும்
பிரியாத பெம்மான் உறையும் இடமென்பர்
பொறிவாய் வரிவண்டு தந்பூம் பெடைபுல்கி
வெறியார் மலரிற் றுயிலும் விடைவாயே.

கடைசிப் பாடல்

ஆறும் மதியும் பொதி வேணியனூர்
மாறில் பெரும் செல்வமலி விடைவாயை
நாறும் பொழிற் காழியர் ஞானசம்பந்தர்
கூறும் தமிழ் வல்லார் குற்றமற் றோரே.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

17. தஞ்சைத் தளிக்குளத்தார்

அப்பரது அருள்மொழி

அஞ்சைக் களத்துள்ளார் ஐயாற்றுள்ளார்
ஆரூரார் பேரூரார் அழுந்தூருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார்
சாந்தை அயவந்தி தங்கினார்தாம்
நஞ்சைத் தம்க்கமுதா வுண்ட நம்பர்
நாகேச் சரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சொற் சமண்சிறையி லென்னை மீட்டார்
வீழி மிழலையே மேவினாரே.

மேலே உள்ள பாடல் அப்பர் பெருமானின் திருவீழிமிழலை அடைவுத் திருத்தாண்டகத்தில் உள்ள எட்டாவது பாடலாகும். (6-51-8)

தளிக்குளத்தார் யார்?

இதில் தஞ்சாவூரில் இருந்த தஞ்சைத் தளிக் குளத்தார் என்னும் வைப்புத்தலம் குறிப்பிடப் படுகிறது. குளிர்ந்த குளத்தின் நடுவில் உள்ள சிவன் கோயில் என்று பேசப்படுகிறது.

தஞ்சாவூரில் இக்கோயில் எங்கே உள்ளது?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"தஞ்சைத் தளிக்குளத்தார் கோயிலை விரிவு படுத்தி இராஜராஜசோழன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினான். தஞ்சைப் பெரிய கோயில் இராஜராஜனால் புதியதாக அமைக்கப்பெற்ற தொன்றன்று,' என்று கல்ஞ்சென்ற சதாசிவப் பண்டாத்தார் கூறியுள்ளார்கள்.

*1970*இல் தஞ்சைக்கோயில் அகழ் ஆய்வு செய்தபோது சில துண்டுக் கற்கள் கிடைத்தன. இவை இன்று தஞ்சைப் பெரியகோயிலில் - அருங் காட்சி யகத்தில் உள்ளன.

இவற்றில் உள்ள கல்வெட்டுகளைப் படிக்கும் வாய்ப்பு, பண்டாரத்தார் அவர்களுக்கு இல்லாது போனதால், மேலே உள்ள விளக்கம் பண்டாரத்தார் அவர்களால் தரப்பட்டது. இனி, கல்வெட்டுகள் கூறும் செய்திகளைப் பார்ப்போம்.

இக் கல்வெட்டுகளை ஆய்வு செய்வதற்கு முன் நாம் நம் மனத்தில் ஆழமாக நிறுத்திக் கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உள்ளது. அதாவது தஞ்சைப் பெரியகோயிலை இராஜராஜன் கி.பி.இ*1010*இல் கட்டி முடித்தான் என்பதே அச்செய்தியாகும். இதன் பின்னணியில் தஞ்சைப் பெரிய கோயிலில் அகழ் வாராய்ச்சியின்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள் துண்டுக்கற்களின் கல்வெட்டுகளைப் பார்ப்போம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மொத்தம் 17கல்வெட்டுகள் உள்ளன. இவை யாவும் தஞ்சைத் தளிக்குளத்து மகாதேவர் கோயிலைப் பற்றிப் பேசுகின்றன. முழுமையான செய்திகளை அளிக்கும் கல்வெட்டுகளை மட்டும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம்.

....

....

முற்பட்ட சான்றுகள்

முதல் கல்வெட்டு இராஜகேசரிவர்மனான சுந்தர சோழனுக்குரியது. இதன் காலம் கி.பி.961. ஸ்ரீபூதி சதுர்வேதிமங்கலத்து சபையார் தாமரைக் குளத்து மகாதேவர் கோயிலுக்கு நிலங்கள் அளித்தமை கூறப்பட்டுள்ளது. (தாமரைக் குளத்து மகாதேவர் என்னும் பெயரைக் கவனிக்கவும்).

அடுத்த கல்வெட்டு, சுந்தரசோழனின் மூத்த மகனான ஆதித்யகரிகாலனுக்கு உரியது. இவன் இராஜராஜ சோழனின் அண்ணன். இக்கல்வெட்டின் காலம் கி.பி.961. தளிக்குள தேவர்க்கு அளித்த நிவந்தம் சொல்லப்பெற்றுள்ளது.

1. *பண்டாரத்தார் பிற்காலச் சோழர் வரலாறு=பக்கம் 126 அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு - பதிப்பு 1974*
2. *மத்திய அரசின் கல்வெட்டுத்துறை சாசன - அறிக்கை 1970-71*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிற்காலச் சான்றுகள்

மற்றொரு கல்வெட்டு, இராஜராஜனின் மகனான இராஜேந்திரனுக்குரியது. இதன் காலம் கி.பி.1016.

சாளுக்கிய குல கால வேளத்து தேவர் அடியாள் ஒருத்தி தஞ்சாவூர் தளிக்குளமுடைய மகாதேவர் கோயிலுக்குச் சந்திவிளக்கு அளித்தது சொல்லப் பட்டுள்ளது.

அடுத்த கல்வெட்டு, திரிபுவன சக்கரவர்த்திகள் இரண்டாம் இராஜாதி ராஜனுக்கு உரியது. இவன் கி.பி. 1166 முதல் 1182 வரை அரசாண்டவன். (1163-1178)

வற்றாத தளிக்குளமுடைய மகாதேவர் கோயிலுக்கு இம்மன்னனின் காலத்தில் சந்தி விளக்கு அளிக்கப்பட்டது.

மற்ற கல்வெட்டுகள், ஒன்றுக்கு ஒன்று தொடர் புடையவை. மன்னர்களின் பெயர்கள் காணப்பட வில்லை. தளிக்குளத்து மகாதேவர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களைக் கூறுகின்றன.

கண்டறிய வேண்டும்

இச்செய்திகளிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்ன?

தஞ்சைப் பெரிய கோயில் கட்டி முடித்து 182 ஆண்டுகட்குப்பிறகும் தஞ்சைத் தளிக்குளத்தார் கோயில் இருந்துள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எங்கு இருந்தது? பெரிய கோயிலை ஒட்டியே இருந்திருக்க வேண்டும்.

தஞ்சைப் பெரிய கோயிலில் சோழர்களின் கல்வெட்டுகள் 98 உள்ளன. ஆச்சர்யமாக, ஒன்றுகூடத் தளிக்குளத்து மகாதேவர் பற்றிக் கூறவில்லை. அகழ்வாராய்ச்சியில் கிடைத்த துண்டுக் கற்களே சான்றாக உள்ளன.

இன்றைய சிவகங்கைக் குளம் தளிக்குள மகாதேவன் கோயில் என்று கூறுகிறார்கள். தள்ளவும் முடியவில்லை. ஏற்கவும் முடியவில்லை.

எப்படி இருந்தால் என்ன? நம்பெருமான் எங்கும் நிறைந்துள்ளாரே!

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18. திருநள்ளாறும் திருஆலவாயும்

திருஞான சம்பந்தரின் சாதனைகள்

திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டில் அவதரித்தனர். தலங்கள் தோறும் பதிகங்கள் பாடி மதுரையம்பதி வந்தடைந்தார். அங்குச் சமணர்களை அனல்வாதம், புனல்வாதத்தில் வென்றார்.

திருநள்ளாற்றுக்கு உரிய போகமார்த்த பூண் முலையாள் எனும் பதிகத்தை ஓலையில் எழுதித் தீயிலிட்டார். அவ்வோலை எரியாமல் பச்சையாக இருந்தது.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்னும் பதிகத்தை ஓலையில் எழுதி வைகையாற்றில் இட்டார். ஓலை வெள்ளத்தோடு போகாமல் நீரை எதிர்த்துச் சென்றது.

இவற்றைக் கண்ட பாண்டிய மன்னன் நெடுமாறனும், சமணர்களும் அதிசயித்து நின்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவாரத் தொகுப்புகள்

முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் கி.பி. 1010 இல் நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளை ஏழாகத் தொகுத்தார். திருஞானசம்பந்தரின் தேவாரங்கள் மூன்று, திருநாவுக்கரசரின் தேவாரங்கள் மூன்று சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரம் ஒன்று. ஆக, தேவாரங்கள் ஏழாகத் தொகுக்கப்பெற்றன.

நான்கு திருமுறைகள்

இராஜராஜனின் மறைவிற்குப் பின் அவனது மகன் இராஜேந்திர சோழன், சோழச் சக்கரவர்த்தி ஆனான். இவனது காலத்தில் மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார், பல அடியார்களின் பாடல்களின் தொகுப்பான திரு இசைப்பா, திருமூலரின் திருமந்திரம்,திருமுகப் பாசுரம் ஆகிய நான்கும் சேர்க்கப்பட்டுத் திருமுறைகள் பதினொன்றாக வகுக்கப்பட்டன. இத்னையும் நம்பியாண்டார் நம்பிகளே செய்தார்.

இராஜேந்திர சோழன் கி.பி1030இல் கங்கை கொண்ட சோளீச்சரம் கோயிலைக் கட்டினான். ஒன்பதாம் திருமுறையில் இக்கோயில் இடம் பெறுவதால், இராஜேந்திர சோழன் காலத்தில் நான்கு திருமுறைகள் தொகுக்கப் பெற்றன என்பதை நன்கு உணரலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நம்பியாண்டார் கால எல்லை

பதினொன்றாம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகளின் பாடல்களும் இடம் பெறுகின்றன. இச் செய்திகளாலும் இராஜேந்திர சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பிகளே மேலும் நான்கு திருமுறைகளைச் சேர்த்தார் என்பது உறுதியாகிறது.

பச்சைப்பதிகம் எனல்!

பதினொன்றாம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகளின் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை இடம் பெறுகிறது.

''திருஞானசம்பந்தரால் தீயிலிடப்பட்ட ஓலை எரியாமல் இருந்ததைக் கூறி, ''அப்பதிகத்தைப் பச்சைப் பதிகம்'' என்றும், வைகையாற்றில் இட்ட ஓலை எதிர்த்துச் சென்ற செய்தியை, ''வைகையாற்றே இட்டு வானீர் எதிர் ஓட்டும் செய்கையான் என்றும் குறிப்பிடுகிறார்.

இராஜேந்திரன் மறைவிற்குப் பின் அவனது மூத்த மகன் இராஜாதி ராஜன் சோழப் பேரரசனானான். இவனுடைய கல்வெட்டு ஒன்று (437/1966) திருநள்ளாறு சிவன் கோயிலில் காணப்படுகிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி 1053 ஆகும்.

பச்சைப் பதிகம் பாடி ஆடும் நிருத்தர்களுக்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டனவாகச் சொல்லப் பெற்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளது.

போகமார்த்த பூண்முலையாள் பதிகம் திருநள்ளாற்றுக்கு உரியது. இதனைக் கி.பி.1030இல் நம்பியாண்டார் நம்பிகள் பச்சைப்பதிகம் என்றார். இதே பெயரை 23 ஆண்டுகள் கழித்துத் திருநள்ளாறு கல்வெட்டில் காண்கிறோம்.

பச்சைப் பதிக நல்லூர்

திருநள்ளாற்றில் உள்ள கி.பி.1135க்கு உரிய இரண்டாம் குலோத்துங்க சோழனது கல்வெட்டில் பச்சைப் பதிக நல்லூர் என்னும் ஊர் குறிப்பிடப் படுகின்றது. (107/1969).

சேக்கிழாரின் பெரியபுராணம் கி.பி.1139இல் எழுதப் பெற்றது. இதில் பச்சைப் பதிக வரலாறு விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

திருநந்தவனம்

திருநள்ளாறு கோயிலிலிருந்து கிடைக்கும் மூன்றாம் இராஜேந்திர சோழனது கல்வெட்டின் காலம் கி.பி. 1249 ஆகும்(455/1966). இதில் ஏடு எதிரிட்டான் என்னும் நந்தவனம் குறிப்பிடப் படுகின்றது. ஏடு எதிரிட்டான் என்னும் பெயர் திருஞான சம்பந்தருக்கு உரியது என்பதை எளிதில் அறியலாம்.

★★★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

BOOKS & RESEARCH PAPERS WRITTEN BY N. SETHURAMAN

1. NEW LIGHT ON CHOLAS		1976
2. AN IMPORTANT FACE OF CHOLA HISTORY		1976
3. THE CHOLAS		1977
4. THE IMPERIAL PANDIYAS		1978
5. RIEGNAL YEAR		1978
6. EARLY CHOLAS		1978
7. PARAKESARIVARMAN UTTAMA CHOLA	5TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, BANGALORE.	1979
8. JATILA VARMAN ARIKE SARI DEVA PARKKRAMA PANDY AND THE DATE OF THE TENKASI VISWANATHA TEMPLE	INTERNATIONAL SEMINAR ON INDIAN EPIGRAPHY-ITS BEARING ON ART HISTORY HELD AT VARANASI, SPONSORED BY: AMERICAN INSTITUTE OF INDIAN STUDIES.	
9. DATES OF SOME MEDIEVEL PANDYAS AND SOME OF THEIR EMPLES (IN THIS PAPER FOR THE FIRST TIME THE JUPITTO RICYCLE OF 344 YEARS IS APPLIED IN FINDING THE DATES OF TWO PANDYA KINGS)	INTERNATIONAL SEMINAR ON INDIAN EPIGRAPHY-ITS BEARING ON ART HISTORY HELD AT VARNASI, SPONSORED BY: AMERICAN INSTITUTE OF INDIAN STUDIES.	1979

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. JATAVARMAN KULASE KARA PANDYA 11 (1237-66)	SOUTH INDIAN CONGRESS FIRST SESSION HELD AT MADURAI KAMARAJ UNIVERSITY.	1980
11. RETROSPECTIVE REVIES OF RECENT DISCOVERIES.	JOURNAL OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA	1980
12. MARAVARMAN VIKRAMA PANDYAIS OF ACCESSION 1218	6TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, HELD AT AHAMEDABAD	1980
13. TWO JATAVARMAN VIRA PANDYAS OF ACCESSION 1253&1254	7TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, HELD AT CALCUTTA	1981
14. TENKASI PARAKRAMA PANDYA AND HIS SUCCESSORS	8TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY INDIA HELD AT BHOPAL	1982
15. MEDIEVAL PANDYAS (1000-1200A.D.)	JOURNAL OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA	1983.
16. TWO JATAVARMAN SUNDARA PANDYAS OF ACCESSION 1303&1304	9TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, HELD AT GORAKPUR	1983
17. FIVE PANDYA KINGS OF THE 14TH CENTYRY	10TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, HELD AT AURAGABAD	1984

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18.JATAVARMAN RAJARA JANSUDNARA PANDAYA (1310-32)	11TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, HELD AT DHARWAD	1985
19.THE SAMBUVARAYAS OF THE 14TH CENTURY	12TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCEITY OF INDIA,HELD AT JABALPUR.	1986
20.THREE JATAVARMAN SUNDARA PANDYAS OF ACCESSION 1250,1277 &1278.1988	13TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA,HELD AT PATNA.	1987
21.DATES OF THE EARLY PANDYAS	14TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, HELD AT GUWAHATI	1988
22.THE HOYSALAS IN PANDIMANDALAM	15TH ANNUAL CONGRESSOF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, HELD AT ANANTAPUR	1988
23.THE PANDYAN CHRONOLOGY	SOUTH ASSIAN WORKSHOP ON EPIGRAPHY HELD AT MYSORE.	1985
24.KUMBAKONAM& DARASURAM	STUDIES IN INDIAN PLACE NAMES 1981 VOLUME11	1981
25.CHOLANTAKA CHATUR VEDIMANGALAM	STUDIES IN INDIAN PLACE NAMES VOLUME111	1982
26.TRIBGUVANAMAHADEVI CHATURVEDIMANGALAM	SUTDIES IN INIDAN PLACE NEMES VOLUME.IV	1984

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

27.PRESIDENTIAL ADDRESS(TAMIL DEVARAM POEMS AND PASUPATAS A STUDY)	PRESIDENTIAL ADDRESS IN THE VITHHOLAKE ANNUAL CONFERENCE OF THE PLACE NAMES SOCIETY OF INDIAN, GORAKPUR (PUBLISHED IN VOLUME VIII OF THE ABOVE JOURNAL)	1986
28.PANCHAVAN THE PANDYAS	STUDIES IN INDIAN PLACE NAMES VOLUME VII	1986
29.CHOLA-PANDYAN-CHOLA GRNKAN-CHOLA LAKESWARAN-CHOLA KERALAN	THIS IS PUBLISHED AS A SEPARATE BOOK BY THE PLACE NAMES SOCIETY OF INDIA.	1986
30.RECENT RESEARCHES ON THE HISTORY OF THE CHOLAS AND THE PANDYAS	TAMIL CIVILZATION TAMIL UNIVERSITY VOLUME V NO.1&2	
31.DATE OF BIRTH AND THE DATE OF CORN ATION OF RAJARAJA 1	TAMIL CIVILIZATION, TAMIL UNIVERSITY VOLUME III NO.2&3.	
32.RAJA RAJA-THE GREAT (SEMINAR PROCEEDINGS)	ANANTHACHARYA INDOLOGICAL RESEARCH INSTITUTE,BOMBAY	1987

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

33.THE ASTRONOMICAL DATE OF THE PULANKU RICHI INSCRIPTION	SRINIDHI	1983
34.MADURAI THROUGH THE AGES	U.G.C.SEMINAR, PALANI	1983
35.TEMPLE CARS REFERRED TO IN THE INSCRIPTIONS	TAMIL UNIVERSITY	1984
36.DATE OF THE TENKASI VISWANATHA TEMPLE	INDIAN EPIGRAPHY ITS BEARING ON ORT HISTORY -AMERICAN INTSTITUTE OFINDIAN STUDIES BENARES.	1985
37.THE CHRONOLOGY-APPLIED ASTRONOMY WITH REFERENCE TO EPIGRAPHY.	LECTURE DELIVERED IN THE INSTITUTE OF THE ARCHAEOLOGICAL SURVEY OF INDIA DELHI	1986
38.TWO INSCRIPTIONS FROM DARASURAM AND THE DATES OF THREE CHOLA KING	EPIGRAPHIA INDICA VOLUME 41 EPIGRAPHIC DEPARTMENT ARCHAEOLOGICAL SURVEY OF INDIA	1989
39.SANKARACHOLAN-ULA, KULOTTUNGA COLAN KOVAI(TAMIL)	JOURNAL OF THE EPIGRA PHICAL SOCIETY	1990

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

40.PANDYAR VARALARU (PANDYA HISTORY IN TAMIL)		
41.RAVIRAMAN KULASEKARA	INDIAN HISTORY AND EPIGRAPHY DELHI GP.S. GAI FELICITATIONS VOLLUME.	1990
42.CURSADE AGAINST GUHAI (MONASTERY)	JOURNAL OF THE EPIGRA PHICAL SOCIETY OF INDIA VOLUME SEVENTEEN.	1991
43.PRESIDENTIAL ADDRESS AS GENERAL PRESIDENT OF THE 17TH ANNUAL CONGRESS OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA FEBRUARY 1991 HELD IN THE TAMIL UNIVERSITY, THANJAVUR.	PUBLISHED IN THE JOURNAL OF THE EPIGRAPHICAL SOCIETY OF INDIA, VOLUME EIGHTEEN.	1982.

★

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)